
# 1

# பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

## 1.1 பொதுநோக்கு


**இலங்கையின் பொருளாதாரம் 7.3 சதவீதம் கொண்ட உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சியுடன், 2013இல் வலுவான முறையில் மீளெழுச்சியுற்ற வேளையில் தொடர்ச்சியாக ஐந்தாண்டுகளாக ஒற்றை இலக்க மட்டத்தில் காணப்பட்ட பணவீக்கம் மேலும் படிப்படியாக வீழ்ச்சியடைந்து ஆண்டின் இறுதியில் நடு ஒற்றை இலக்க மட்டத்தினை அடைந்தது.** பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் வளர்ச்சிக்குச் சாதகமான முறையில் பங்களித்ததுடன் சாதகமான வானிலை நிலைமைகளும் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட படிப்படியான மீட்சியும் ஆண்டின் நான்கு காலாண்டுகளிலும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட உறுதியான உயர்விற்கு ஆதரவளித்தன. பெயரளவு நியதிகளில் மொ.உ.உற்பத்தி ரூ.8,674 பில்லியன் அல்லது ஐ.அ.டொலர் 67 பில்லியனுக்கு 14.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து தலைக்குரிய மொ.உ.உற்பத்தியை 2013இல் ஐ.அ.டொலர் 3,280 இற்கு உயர்வடையச் செய்தது. உள்நாட்டு வலு விலைகளுக்கு குறிப்பிடத்தக்களவில் மேல் நோக்கிய சீராக்கங்கள் செய்யப்பட்ட போதும், முன்மதியுடைய நாணய முகாமைத்துவமும் மேம்பட்ட உள்நாட்டு உணவு நிரம்பல்களும் முதன்மைப் பணவீக்கமும் படிப்படியான வீழ்ச்சியைத் தோற்றுவித்த வேளையில் மையப்பண வீக்கம் அதன் மிகக் குறைந்த மட்டத்திற்கு மிதமடைந்தது. நாணய விரிவாக்கம் 2013இல் அதன் விரும்பத்தக்க மட்டத்தினை நோக்கி வீழ்ச்சியடைந்த வேளையில் முன்னைய ஆண்டின் இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகளின் காலங்கடந்த தாக்கம் மற்றும் தங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட முற்பணங்களில் ஏற்பட்ட சடுதியான வீழ்ச்சி என்பன வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக்கான கொடுகடன் பகிர்ந்தளிப்பினைக் குறைத்துவிட்டது. தொடர்ச்சியான தாழ்ந்த பணவீக்கம் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் இவ்வாண்டுப் பகுதியில் நாணயக் கொள்கையை மேலும் தளர்த்துவதற்கு மத்திய வங்கியை அனுமதித்தது. 2012இல் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் நடைமுறைக்கிடப்பட்ட கொள்கைகள் முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் காணப்பட்ட படிப்படியான மீட்சியுடன் சேர்ந்து, சென்மதி நிலுவையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைத் தோற்றுவித்ததன் மூலம் அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதனையும் செலாவணி உறுதிப்பாட்டினையும் இயலச் செய்தது. இறைத்திரட்சிக்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான கடப்பாடானது, 2013இல் இறைப் பற்றாக்குறையினையும் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதத்தினையும் மேலும் குறைப்பதற்கு உதவியது. அதிகரித்தளவிலான தளம்பல்களும் உலகளாவிய நிதியியல் சந்தைகளில் நிச்சயமற்ற தன்மையும் காணப்பட்ட போதும் நிதியியல் துறை ஆற்றல்வாய்ந்ததாகவும் தாக்குப்பிடிக்கக் கூடியதாகவும் காணப்பட்டது.

**வரைபடம் 1.1 ஆண்டுக்கான உண்மை மொ.உ.உ. வளர்ச்சி வீதம் (1978-2012)**




2012இல் பின்பற்றப்பட்ட பேரண்டப் பொருளாதாரக் கொள்கைப் பொதியின் விரும்பத்தக்க உறுதிப்பாட்டுக் குறிக்கோள்கள் அடையப்பட்டமையானது சாதகமான பணவீக்க பெறுபேறுகள் மற்றும் எதிர்பார்ப்புக்களுடன் இணைந்து, இவ்வாண்டுப் பகுதியில் நாணயக் கொள்கையினை தளர்த்துவதற்கு மத்திய வங்கியை அனுமதித்தது. இதன்படி, மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி வீதங்கள் 25 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டதுடன் 2012 திசெம்பரில் ஆரம்பமான நாணயக் கொள்கைத் தளர்த்தல் 2013 இலும் தொடர்ந்தது. ஒட்டுமொத்தமாக, இவ்வாண்டில் கொள்கை வட்டி வீதங்கள் மேலும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்ட வேளையில் அதிகரித்த திரவத்தன்மை கடன் வசதிப்படுத்தல் கொள்கை நிலையினைப் பிரதிபலித்தது. ஆண்டு முழுவதும் ஒற்றை இலக்க மட்டத்தில் பணவீக்கம் பேணப்பட்டமை, நாணயக் கொள்கை குறிக்கோள் அடையப்பட்டமை மற்றும் பணவீக்கம் வீழ்ச்சியடைந்து பணவீக்க எதிர்பார்ப்புக்கள் சாதகமாகக் காணப்பட்டமை என்பன

**வரைபடம் 1.2 ஆண்டுக்காண்டு பணவீக்கம் (கொ.நு.வி.சு. அடிப்படையிலும் வேறுபட்ட அடிப்படை ஆண்டுகளின் அடிப்படையிலும்)**




மீண்டெழும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க நாணயக் கொள்கையை அனுமதித்தன. ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட நடு ஒற்றை இலக்க பணவீக்கத்தில் பிரதிபலிக்கப்பட்டவாறு முன்னோக்கிய கட்டமைப்பொன்றில் எடுக்கப்பட்ட நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் ஆண்டின் பின்னரைப் பகுதியில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியுடன் சேர்ந்து அதன் காத்திரமான தன்மையினை நிரூபித்தன.


பணவீக்கம் தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாக ஒற்றை இலக்க மட்டத்தில் காணப்பட்டு, பொருளாதாரத்தில் கூலி அழுத்தங்களைக் குறைத்ததுடன் முதலீட்டாளர் நம்பிக்கையை உயர்த்தியது. ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் இரட்டை இலக்க மட்டங்களுக்கு அணித்தாகக் காணப்பட்ட முதன்மைப் பணவீக்கம் அதன் பின்னர் வீழ்ச்சியடைந்து ஆண்டின் இறுதியில் நடு ஒற்றை இலக்க மட்டத்தை அடைந்தமைக்கு, மேம்பட்ட உள்நாட்டு வழங்கல் நிலைமைகளும் முன்மதியுடைய கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளும் உதவியாக விளங்கின. இதன்படி, 2013 முடிவில் முதன்மைப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.7 சதவீதத்திலும் ஆண்டுச் சராசரி அடிப்படையில் 6.9 சதவீதத்திலும் காணப்பட்டது. அதேவேளை, கூட்டுக் கேள்வியின் காத்திரமான முகாமைத்துவத்தினை எடுத்துக்காட்டும் விதத்தில் மையப் பணவீக்கம் இவ்வாண்டுப் பகுதியில் படிப்படியாக மிதமடைந்து 2013இன் இறுதிக் காலாண்டில் அதன் ஆகக் குறைந்த பெறுமதிக்கு வீழ்ச்சியடைந்தது. 2013இன் இறுதியில் மையப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.1 சதவீதத்திலும் ஆண்டுச் சராசரி அடிப்படையில் 4.4 சதவீதத்திலும் காணப்பட்டது. தொடர்ச்சியான அநுகூலமான பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்களின் தூண்டுதலினால் ஆதரவளிக்கப்பட்டு கூலி அழுத்தங்கள் குறைந்து காணப்பட்டதுடன், இது பெரும்பாலான ஊழியர் வகைகளின் பெயரளவு கூலிகளில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்புக்களில் பிரதிபலிக்கப்பட்டது.

கைத்தொழில் துறையிலான உறுதியான வளர்ச்சி, பணிகள் துறையிலான மீட்சி மற்றும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் மீளெழுச்சி பெற்ற வேளாண்மையுடன் 2013இல் பொருளாதார வளர்ச்சி பரந்த அடிப்படையைக் கொண்டிருந்தது. 2012இல் இடம்பெற்ற உறுதி வாய்ந்த கொள்கைகள் ஆண்டின் முதலரைப் பகுதியில் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ச்சியான தாக்கத்தினைக் கொண்டிருந்ததெனினும், தொடர்ச்சியாக இடம்பெற்ற பௌதீக ரீதியிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் காணப்பட்ட மீட்சி என்பன

2013இன் பின்னரைப் பகுதியில் அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தன. உத்வேகம் மிக்க கட்டுமான மற்றும் தயாரிப்பு நடவடிக்கைகளின் உதவியுடன் கைத்தொழில்துறை 9.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தமையின் மூலம் மொ.உ.உற்பத்தியில் இதன் பங்கு 31.1 சதவீதமாகக் காணப்பட்டது. பணிகள் துறையின் வளர்ச்சி 6.4 சதவீதத்தில் அமைந்து முன்னைய ஆண்டினை விட உயர்வாகக் காணப்பட்டமைக்கு மொத்த விற்பனை, சில்லறை வர்த்தகம் மற்றும் போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துணைத் துறைகளின் மேம்பட்ட செயலாற்றம் முக்கிய காரணமாக அமைந்தது. ஆண்டின் முதலரைப் பகுதியில் வேளாண்மைத் துறையின் நலிந்த செயலாற்றத்திற்கு மோசமான வானிலை நிலைமைகள் காரணமாக விளங்கி அதன் ஆண்டு வளர்ச்சி வீதத்தினை 4.7 சதவீதத்திற்கு குன்றச் செய்தது. இவ்வாண்டுப் பகுதியில் கைத்தொழில் துறையின் வலுவான செயலாற்றத்தின் விளைவாக மொ.உ.உற்பத்தியில் பணிகள் துறை மற்றும் வேளாண்மைத் துறையின் பங்குகள் முறையே 58.1 சதவீதத்திற்கும் 10.8 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன.

**வலுவான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கான அரசாங்க உபாயத்தின் முக்கியமானதொரு பாகமாக பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பின் முன்னேற்றங்கள் தொடர்ந்தும் காணப்பட்ட வேளையில், வளர்ச்சியின் நன்மைகள் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் குடித்தொகையின் அனைத்துப் பிரிவினரையும் சென்றடைவது உறுதிப்படுத்தப்பட்டது.** 2013ஆம் ஆண்டு, நாட்டின் இரண்டாவது பன்னாட்டு வானூர்தி நிலையம், இறங்குதுறைகள் மற்றும் துறைமுகங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், விரைவுப்பாதை மற்றும் நெடுஞ்சாலை அபிவிருத்திச் செயற்றிட்டம், வடபகுதி புகைவண்டிப்பாதைச் செயற்றிட்டம், வலுச் செயற்றிட்டங்கள் அதேபோன்று பல கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பல செயற்றிட்டங்கள் நிறைவடைந்தமையினையும் தொடர்ந்து இடம்பெறுகின்றமையினையும் எடுத்துக்காட்டியது. அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நலன் மற்றும் கல்விப் பணிகளை மேம்படுத்துவதற்காக பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் தனியார் துறையினால் வழங்கப்பட்ட இப்பணிகளும் கூட ஊக்குவிக்கப்பட்டதுடன் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டன. கொழும்பு நகரை அழகுபடுத்தல் மற்றும் நாடளாவிய நகரமயப்படுத்தல் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், உயர்தரச் சுற்றுலாப் பயணிகளின் சேரிடமாக இலங்கையை மேம்படுத்துவது போன்ற மற்றைய மேம்பாடுகள் இணைந்த வேறுபல நன்மைகளுடன் கூடிய விதத்தில்

வரைபடம் 1.3 ஆண்டுக்கான தொழிலின்மை வீதம் (1990-2012)




குடித்தொகையினரின் நலநோம்புகைகளுக்கு நன்மையாக அமைந்தன. அரசாங்கமும் பல முனைகளைக் கொண்ட வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது. வறுமை ஒழிப்பினை இலக்காகக் கொண்ட தொடர்ச்சியான வளர்ச்சி உத்வேகம் தாழ்ந்த பணவீக்கம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பனவற்றைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், குடியிருப்பாளர் வருமானம் மற்றும் செலவின அளவீடு - 2012/13 இல் பூர்வாங்கமாக கண்டறியப்பட்டவாறு வறுமை எண்ணிக்கைச் சுட்டெண் 6.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கிறது.

**அதிகரித்த பெண்களின் பங்கேற்புடன் இவ்வாண்டுப் பகுதியில் தொழிற்படை 4.1 சதவீதத்தினால் விரிவடைந்ததுடன், இது தொழிலுள்ளவர்களினதும் அதேபோன்று தொழில் இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணமாகிய வேளையில் தொழிலாளர் உற்பத்தித்திறன் தொடர்ந்தும் மேம்பட்டது.** கிராமியப் பெண்கள் உள்ளூர் தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்த்து தொழில் சந்தைக்குள் நுழைந்தமையானது 2013இல் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தின் அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. தொழிலிலுள்ள ஆட்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் தொழிற்படை வேளாண்மைத் துறையிலிருந்து பணிகள் துறைக்கு பெயர்ந்தமையும் 2013இல் அவதானிக்கப்பட்டது. தொழிற்சந்தையில் புதிதாக வேலைவாய்ப்பினை தேடுபவர்களின் நுழைவினால் தொழிலின்மை வீதமும் முன்னைய ஆண்டின் வரலாற்றிலேயே மிகக் குறைந்த வீதத்திலிருந்து 2013இல் 4.4 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காகச் சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்தது. எனினும், உயர்ந்த பெண்கள் தொழிற்படை பங்கேற்பு வீதத்திற்குப் பங்களித்த வீட்டுப் பணிப்பெண்கள் வகையின் கீழ் வேலை வாய்ப்பிற்காகச் சென்றவர்களின் எண்ணிக்கை கணிசமாக வீழ்ச்சியடைந்தது.

தொழில்நிலையில் அவதானிக்கப்பட்ட துறைவாரியான பெயர்வின் விளைவாக வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறைகளின் தொழிலாளர் உற்பத்தித்திறன் மேம்பட்ட வேளையில் பணிகள் துறையின் உற்பத்தித்திறன் வீழ்ச்சியடைந்தது. ஒட்டுமொத்த தொழிலாளர் உற்பத்தித்திறனில் தொடர்ந்தும் அதிகரித்த போக்கு காணப்பட்டமைக்கு அவற்றின் மீது கவனம் செலுத்திய கொள்கைகள் காரணமாக இருந்ததெனினும் அனைத்துத் துறைகளிலுமுள்ள உற்பத்தித்திறன் மேம்பாடுகளில் மேலும் உள்ளார்ந்த வாய்ப்புக்கள் காணப்பட்டன.

**ஆண்டின் பின்னரைப் பகுதியில் உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மேம்பட்ட ஏற்றுமதிக் கேள்வி என்பனவற்றிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறையின் உறுதிப்பாடு மேம்பட்டது.** ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இறக்குமதிகளின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் சேர்ந்து கொண்டமையினைத் தொடர்ந்து வர்த்தகப் பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்க குறைப்பொன்று அவதானிக்கப்பட்டது. உலகளாவிய வர்த்தகத்தில் காணப்பட்ட மீளெழுச்சி மற்றும் 2013இன் பின்னரைப் பகுதியிலிருந்து முக்கிய ஏற்றுமதி நாடுகளிலிருந்தான கேள்வியிலான அதிகரிப்பு என்பன ஏற்றுமதி வருவாய்களின் மீது சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்பு வரவேற்கத்தக்கதாக இருந்தது. இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது தாழ்ந்த பெற்றோலிய இறக்குமதிகளின் முக்கிய பெறுபேறாகும். பயணம் மற்றும் சுற்றுலாத் துறை பணிகளிலுள்ள வர்த்தகத்தின் மேம்பாட்டிற்கு வழிவகுத்த வேளையில் போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் என்பனவற்றிலிருந்தான வருவாய்களும் இத்தோற்றம் பெற்றுவருகின்ற துறைகளின் உள்ளார்ந்த வளர்ச்சிக்கு மீள் வலுவூட்டுவனவாக இருந்தன. பெருமளவிற்கு பன்முகப்படுத்தப்பட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுடன் தொழிலாளர் பணவனுப்பல்கள் அதிகரித்தன. வணிகப்பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான மேம்பட்ட வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பனவற்றின் விளைவாக வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 6.7 சதவீதத்திலிருந்து 2013இன் மொ.உ.உற்பத்தியின் 3.9 சதவீதத்திற்கு குறுக்கமடைந்தது. இவ்வபிவிருத்திகள், வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வடிவில் நிதியியல் கணக்கிற்கு ஏற்பட்ட உட்பாய்ச்சல்கள், அரச பிணையங்களில் ஏற்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் அரசாங்கம், வங்கித்தொழில் துறை மற்றும் நிதியியல் அல்லாத் துறைக்கான நீண்ட காலப் படுகடன் உட்பாய்ச்சல்கள் என்பனவற்றுடன் சேர்ந்து சென்மதி நிலுவையில் 2012ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 151 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 985 மில்லியன் கொண்ட மிகையைத் தோற்றுவித்தன. இதன் விளைவாக, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2013 இறுதியில் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனுக்கு அதிகரித்து 5 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாக விளங்கியது. மேம்பட்ட சென்மதி நிலுவையும் பன்னாட்டு ஒதுக்கு நிலைமையும் ஏனைய தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலான அதிகரித்த தளம்பல்களுக்கு மத்தியிலும் இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை ரூபாவினை ஒப்பீட்டு ரீதியில் உறுதியாக வைத்திருப்பதற்கு இயலச் செய்தது. இதன்படி, இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2.75 சதவீதத்தினால் மட்டும் தேய்வடைந்த வேளையில் ஏனைய பல முக்கிய நாணயங்களுக்கெதிராக உயர்வடைந்தது.

**இறைக் கொள்கையானது நடுத்தர காலத்தில் உறுதியானதும் சமச்சீரான வளர்ச்சியையும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்திய வேளையில் இறைத் திரட்சிப்படுத்தல் தொடர்பான தொடர்ச்சியான முயற்சிகளின் பெறுபேறாக முக்கிய இறைக் குறிகாட்டிகளில் படிப்படியான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது.** அரசாங்கம் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினத்தைக் கணிசமாக குறைத்துவிட்ட போதும், அரச முதலீடுகள் மொ.உ.உற்பத்தியின் 5.5 சதவீதத்தில் உயர்வானதாகக் காணப்பட்டமையானது நாட்டின் ஒட்டுமொத்த முதலீட்டு மட்டத்திற்குப் பக்கபலமாக விளங்கியது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசின் அரசிறை 13.1 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தமை மற்றும் அண்மைய ஆண்டுகளில் அரசிறைச் சேகரிப்புக்கள் எறிவு செய்யப்பட்ட மட்டங்களிலிருந்தும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தமை என்பன அரசாங்கத்தின் முக்கிய கரிசனைக்குரிய விடயங்களாகக் காணப்பட்டன. இதன் விளைவாக, வரி முறைமையினை விரிவாக்குவதற்காக மேலும் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் இதன் வினைத்திறனற்ற மற்றும் அதன் ஓட்டைகளைக் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒப்பீட்டு ரீதியில் குறைந்த அரசிறைச் சேகரிப்புக்கள் காணப்பட்ட போதும் செலவினச் சிக்கனப்படுத்தல்கள் இறைப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியின் 5.9 சதவீதத்தில் பேணுவதற்கு உதவியது.

இது வரவு செலவுத்திட்ட மதிப்பீடான 5.8 சதவீதத்தினை விடச் சிறிதளவே உயர்வானதாகும். நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதனூடாக நிதிகளைத் திரட்டுவதில்லை என்ற 2013இல் அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்தின் விளைவாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை முக்கியமாக உள்நாட்டு மூலங்களினூடாக நிதியிடப்பட்டது. மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதத்தின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு தொடர்ந்ததுடன், விகிதம் 2013இல் 78.3 சதவீதத்திற்கு மேம்பட்டது.

**2013ஆம் ஆண்டு, அரசாங்கத்தின் முக்கிய கூட்டுத்தாபனங்களின் நிதியியல் நிலைமையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டியது.** பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் உறுதியான வலு விலைகள், மற்றும் செலாவணி வீதம் என்பவற்றுடன் இணைந்து சாதகமான வானிலை நிலைமைகள் முக்கிய அரச கூட்டுத்தாபனங்களின் நிதியியல் நிலைமைகளுக்கு உதவியாகயிருந்த வேளையில் 2013 பெப்புருவரியிலும் ஏப்பிறலிலும் அறிமுகப்படுத்தப்பட்ட செலவைப் பிரதிபலிக்கும் பெற்றோலிய விலைத் திருத்தங்கள் மற்றும் மின்வலு தீர்வைத் திருத்தங்கள் இம்முன்னேற்றங்களுக்கு மேலும் வலுச் சேர்ப்பனவாக விளங்கின. இதன் விளைவாக, இலங்கை மின்சபை 2013இல் தொழிற்பாட்டு இலாபமொன்றினை உருவாக்கிய வேளையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் கணிசமான இழப்புக்கள் அவதானிக்கப்பட்டன. மின்சபையினதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் மேம்பட்ட நிதியியல் நிலைமைகள், வங்கித்தொழில் துறைக்கான அவற்றின் நிதியியல் கடப்பாடுகளில் ஒரு பகுதியை தீர்ப்பனவு செய்வதற்கும் இன்றியமையாத திட்டங்களை விரிவுபடுத்தி நவீனமயப்படுத்துவதற்கும் இந்நிறுவனங்களை அனுமதித்தது. இதன் மூலம் அவை அவற்றின் அதிகரித்த பணிகளை பொருளாதாரத்திற்கு வழங்கக்கூடியதாக இருக்கும்.

**நாணய விரிவாக்கம் விரும்பத்தக்க மட்டத்தினை நோக்கி மிதமடைந்த வேளையில், 2012 திசெம்பரிலிருந்தான நாணயக் கொள்கைத் தளர்த்தல்கள் சந்தை வட்டி வீதங்களுக்கு படிப்படியாக மாற்றப்பட்டன.** குறுங்காலச் சந்தை வட்டி வீதங்கள் கீழ் நோக்கி விரைவாக சீராக்கப்பட்ட போதும், நீண்ட காலச் சந்தை வட்டி வீதங்கள் ஆண்டின் முதல் ஒரு சில மாதங்கள் அவை வீழ்ச்சியடைவதற்கு முன்னதாக ஓரளவிற்கு நெகிழ்ச்சியற்ற போக்கினைக்காட்டின. நிருவாக ரீதியாக தீர்மானிக்கப்பட்ட வலு விலைகளுக்கான திருத்தங்கள் மற்றும் சாதகமான வானிலை நிலைமைகள் என்பனவற்றின் உதவியுடன் அரச கூட்டுத்தாபனங்களினால் பெறப்பட்ட கொடுகடன்கள் இவ்வாண்டுப் பகுதியில் மிதமடைந்தன. மத்திய வங்கியிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் கணிசமாக வீழ்ச்சியடைந்த வேளையில், வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன்கள் அதிகரித்து 2013இல் இறைப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு அரசாங்கம் வங்கிக் கடன்பாடுகளில் பெருமளவிற்கு தங்கியிருந்தமையினைப் பிரதிபலித்தது. இவ்வாண்டுப் பகுதியில் தனியார் துறைக்கான வர்த்தக வங்கிகளின் கொடுகடன் பகிர்ந்தளிப்புக்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு 2012இல் காணப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கையின் காலங்கடந்த தாக்கமும் அதேபோன்று அடகுபிடித்தல் முற்பணங்களில் ஏற்பட்ட திடீர் சரிவும் காரணங்களாக விளங்கின. 2013இல் தனியார் துறையின் உள்நாட்டு மற்றும் உலகளாவிய மூலதனச் சந்தைகளை அதிகளவில் நாடமுடிந்தமையும் வர்த்தக வங்கிகளிலிருந்து பெறப்பட்ட கொடுகடன் வீழ்ச்சியடைய பங்களித்திருக்கின்றது.

**உலகளாவிய சந்தை அபிவிருத்திகளிலிருந்து தோன்றிய நிச்சயமற்ற தன்மைக்கிடையிலும் நிதியியல் முறைமையில் உறுதிப்பாடு பேணப்பட்ட வேளையில் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டது.** வலுவான மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்புக்கள் மற்றும் ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ நடவடிக்கைகள் இவ்வாண்டுப் பகுதியில் நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மையினை உறுதிப்படுத்திய போதும் செயற்படா அடகுபிடித்தல் முற்பணங்கள் நிதியியல் துறையின் சொத்துக்களினது தரத்தினைப் பாதித்துள்ளன. அதிகரித்த முதலீடுகளின் விளைவாக நிதியியல் துறையின் மொத்தச் சொத்துக்கள் அதிகரித்த வேளையில் கிளை வலையமைப்பின், குறிப்பாக மேல் மாகாணத்திற்கு வெளியேயான கிளைகளின் விரிவாக்கம் நிதியினையும் அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் வசதிகளையும் பெற்றுக் கொள்வதனை மேம்படுத்தியிருக்கிறது. நாணயக் கொள்கையின் தளர்த்தல்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சந்தை வட்டி வீதங்கள் கீழ் நோக்கிப் படிப்படியாக சீராக்கப்பட்ட வேளையில் சந்தைகள் ஆண்டு முழுவதும் பெருமளவிற்கு திரவத்தன்மையுடனேயே காணப்பட்டன. ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அமைப்பு மேலும் பலப்படுத்தப்பட்டதுடன் நிதியியல் உறுதிப்பாட்டிற்கு ஏற்படக்கூடிய சாத்தியமான இடர்நேர்வுகளைச் சரியான முறையில் கட்டுப்படுத்துவதற்காக பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள் அதிகரிக்கப்பட்டன.

மத்திய வங்கியும் கொடுப்பனவு உட்கட்டமைப்பினையும் அதன் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது. தொகுதிக்கடன் வழங்கலின் எண்ணிக்கையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு கம்பனி முறிச் சந்தையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட வழிவகுத்த வேளையில் கூறுநம்பிக்கைத் துறை, 2013இல் பல புதிய நிதியங்கள் நிறுவப்பட்டதுடன் விரிவடைந்தது. உலகளாவிய சந்தை நிலைமைகளில் நிச்சயமற்றதன்மை காணப்பட்டமைக்கிடையிலும் பங்குச் சந்தை மற்றும் அரச பிணையங்கள் சந்தைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல் தொடர்ந்தும் இடம்பெற்றன. சொத்துக்கள் மற்றும் காப்புறுதிக் கட்டணம் ஆகிய இரு நியதிகளிலும் காப்புறுதித் துறை வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**அதிகரித்த முதலீடு, மேம்பட்ட பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மேம்படும் உலகளாவிய பொருளாதார நிலைமைகளினால் உதவப்பட்டு நடுத்தர காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் அதன் வளர்ச்சி உத்வேகத்தைத் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது.** நடுத்தர காலத்தில் இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் சவால்கள் இல்லாமல் இல்லையென்பதுடன், உறுதியானதொரு வேகத்தில் தொடர்ந்தும் வளர்ச்சி உத்வேகத்தினைக் கொண்டிருப்பதற்கு அமைப்பியல் சீராக்கங்களும் அவசியமாகவுள்ளன. பௌதீக உட்கட்டமைப்பில் ஏற்பட்ட பாரிய முன்னேற்றங்களையும் அதன் விளைவாக உற்பத்தி இயலாற்றலில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் கருத்திற்கொள்கையில், நாட்டின் உள்ளார்ந்த வெளியீடு மோதலுக்குப் பின்னரான காலப்பகுதியில் கணிசமானளவிற்கு மேம்பாடடைந்திருப்பதுடன் இவ்வுள்ளார்ந்த வளத்தினை நனவாக்கிக் கொள்வதற்கு பொருளாதார நடவடிக்கைகளில் தனியார் துறையினர் பெருமளவிற்கு ஈடுபடுவது அவசியமானதாகக் காணப்படுகின்றது. மொத்தக் காரணி உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், தோற்றம் பெற்று வருகின்ற துறைகளை முக்கிய கவனத்தில் கொண்டு நாட்டின் மனித மூலதனத்தளத்தினை உயர்த்துதல், சுபீட்சத்திற்கான உற்பத்தித்திறன் நடவடிக்கையை இயலுமைப்படுத்தக்கூடிய சூழலை உருவாக்குதல் என்பன வலுவான பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத கூறுகளாக விளங்குகின்றன. அத்தகைய மேம்பாடுகள் பொருளாதார நடவடிக்கைகள், உற்பத்திகள் மற்றும் வழங்கப்படுகின்ற பணிகள் என்பனவற்றின் பன்முகப்படுத்தலுக்கு வசதியளிக்கின்ற வேளையில் நாட்டின் வெளிநாட்டுச் சந்தையின் தளத்தினையும் விரிவாக்குகிறது. 5 + 1 மைய உபாயத்துடன் இணங்கிச் செல்லும் விதத்தில் பொருளாதார நடவடிக்கைகளை மேலும் பன்முகப்படுத்துவதற்காக நடைமுறைக்கிடப்பட்ட அரச கொள்கைகள் நடுத்தர காலத்தில் “மத்தியதர வருமானப் பொறி” இனூடாக நாடு சுமுகமாக மாற்றமடைந்து செல்வதற்கு வழிவகுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கொள்கைகள் அதேபோன்று வர்த்தகப் பங்காளர்களின் பொருளாதாரங்களின் எறிவு செய்யப்பட்ட மீட்சி என்பனவற்றின் விளைவாக அதிகரிக்கின்ற வணிக மற்றும் பணிகள் ஏற்றுமதிகளின் வழிப்படுத்தலுடன் வெளிநாட்டுத் துறை மேலும் மேம்பாடடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகரித்த மூலதனச் சந்தையின் வெளிப்படையான தன்மை காரணமாக வெளிநாட்டு அபிவிருத்திகளிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான சவால்களை எதிர்கொள்வதற்கு வலுவான தாங்கிருப்புக்கள் கிடைக்கத்தக்கதாக இருப்பது அவசியமானதாகும். இறைத் துறையில், நடுத்தர கால பேரண்ட இறைக் கட்டமைப்பில் எதிர்பார்க்கப்பட்டவாறு வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை மற்றும் பொதுப்படுகடன் என்பனவற்றை மேலும் குறைப்பதற்கான அரசின் கடப்பாடுகள் வரவேற்கத்தக்க அபிவிருத்திகளாகக் காணப்படுகின்றன. அரச முதலீடுகள் நாட்டின் மொத்த முதலீடுகளுக்கு துணை நிரப்பியாக விளங்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக சேமிப்புக்களில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்கள் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியினை நிரப்புவதற்கு வெளிநாட்டு மூலங்களில் தங்கியிருப்பதனைக் குறைக்கும் போல் தெரிகிறது. சிறந்த பன்னாட்டு நடைமுறைகளையும் திட்டமிடப்பட்ட ஒருங்கிணைத்தல் நிகழ்ச்சித்திட்டங்களையும் பின்பற்றுவதுடன் நிதியியல் துறை மேலும் வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேம்பட்ட உள்நாட்டு வழங்கல் நிலைமைகள் மற்றும் உற்பத்தித்திறன் என்பனவற்றின் ஆதரவுடன் கூடிய முன்மதியுடையதும் முன்னோக்கியதுமான நாணயக் கொள்கைத் தீர்மானங்களின் காரணமாக பணவீக்கம் நடுத்தர காலத்தில் அதன் நடு ஒற்றை இலக்க மட்டத்தில் உறுதியடையுமெனவும் அதன் மூலம் பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டிற்கு தொடர்ந்தும் ஆதரவளிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 1.2 2013இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உறுதிப்பாடு மற்றும் கொள்கை பதிலிறுப்புக்கள்


### உண்மைத் துறை அபிவிருத்திகள்

மொ.உ.உற்பத்தி 2012இன் 6.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 7.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் பொருளாதாரம் உயர்ந்ததும் வலுவானதுமான

**வளர்ச்சி விசையொன்றிற்கு மீளெழுச்சியுற்றது.** 2012இல் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை நோக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகள் 2012 திசெம்பரிலிருந்து தளர்த்தப்பட்டமையானது 2013இன் பொருளாதார வளர்ச்சிக்கு மிகத் தூண்டுதலான சூழலொன்றினை உருவாக்கியிருக்கிறது. குறைந்த பணவீக்கம், வீழ்ச்சியடைந்து செல்லும் வட்டி வீதங்கள் மற்றும் ஒப்பீட்டு ரீதியில் உறுதியான செலாவணி வீதம் என்பனவற்றை உள்ளடக்கிய மேம்பட்ட பேரண்டப் பொருளாதார நிலைமைகள் விரைந்த பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களித்தன. உள்நாட்டு வேளாண்மையில் சாதகமான தாக்கத்தினையும் உயர் பெறுமதிகூட்டப்பட்ட நீர்மின்வலு உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தையும் ஏற்படுத்தியதன் மூலம் சாதகமான வானிலைநிலைமைகள் வளர்ச்சிக்கு தூண்டுதலளிப்பதாக இருந்தது. அரசாங்கத்தின் தொடர்ச்சியான உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் இவ்வுயர்ந்த பொருளாதார வளர்ச்சியை எய்தப் பங்களித்தது. முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்களில், குறிப்பாக, ஆண்டின் பின்னரைப் பகுதியில் ஏற்பட்ட வளர்ச்சியின் ‘மறுமலர்ச்சி’ வர்த்தக செயலாற்றத்தில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தி ஆண்டின் பிற்பகுதியில் விரைந்த பொருளாதார வளர்ச்சியைத் தோற்றுவித்தது. பெரும்பாலான தோற்றம் பெற்றுவரும் சந்தைகளிலும் தென்னாசிய பிராந்தியம் உட்பட அபிவிருத்தயடைந்துவரும் பொருளாதரங்களிலும் காணப்பட்ட மெதுவான வளர்ச்சிக்கு மத்தியிலும் 2013இல் இலங்கையின் வளர்ச்சிச் செயலாற்றம் குறிப்பிடத்தக்கதொன்றாகக் காணப்பட்டது.

**அனைத்து மூன்று முக்கிய துறைகளிலும் காணப்பட்ட பரந்த அடிப்படையிலான வளர்ச்சி 2013இல் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் ஆதரவளித்தது.** போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துணைத் துறையின் உயர்ந்த பங்களிப்புடனும் அவற்றைத் தொடர்ந்து மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத் துறைகளின் பங்களிப்புடனும் 2013இல் ஆண்டில் பணிகள் துறை வளர்ச்சிக்கான முன்னணிப் பங்காளராக விளங்கியது. நிதியியல் பணிகளின் விரிவாக்கமும் பணிகள் துறையின் வளர்ச்சியைப் பலப்படுத்தியது. இவ்வாண்டுப் பகுதியில் கைத்தொழில் துறை உயர்ந்த துறை வாரியான வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன், தயாரிப்புத் துணைத் துறை, வெளிநாட்டுத் துறைக் கேள்வியில் ஏற்பட்ட மேம்பாட்டின் உதவியுடன் இத்துறையின் வளர்ச்சிக்கு உயர்ந்த பங்களிப்பினைத் தொடர்ந்தும் வழங்கியது. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் கட்டுமானத் துணைத் துறையும் உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தது. ஆண்டின் முதலரைப் பகுதியில் குறைவடைந்து காணப்பட்ட வேளாண்மைத் துறையின் வளர்ச்சி நெல், ஏனைய உணவுப் பயிர்கள் மற்றும் மீன் துணைத் துறைகளின் விரிவாக்கத்துடன் மேம்பட்டது.

வரைபடம் 1.4 காலாண்டுக்கான உண்மை மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி




**2013இல் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் 4.0 சதவீதத்திலிருந்து 4.4 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இவ்வதிகரிப்பிற்கு தொழில் சந்தைக்கு தொழில் எதிர்பார்போர் புதிதாக புகுந்தமையே காரணமாகும்.** தொழிற்படை பங்கேற்பு வீதம் முன்னைய ஆண்டின் 52.6 சதவீதத்திலிருந்து 2013இல் 53.8 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் தொழிற்படை 4.1 சதவீதத்தினால் அதிகரித்தது. இதில் பெண்கள் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த அதேவேளை, ஆண்கள் தொழிற்படை பங்கேற்பு வீதம் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. தொழிற்படையின் விரிவாக்கத்துடன் தொழிலிலுள்ளவர்களின் எண்ணிக்கை அதேபோல் தொழிலற்ற நபர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. பெண்கள் மற்றும் ஆண்களுக்கிடையிலான தொழிலின்மை 2012இன் 6.2 சதவீதம் மற்றும் 2.9 சதவீதத்திலிருந்து 2013இல் முறையே 6.6 சதவீதத்திற்கும் 3.2 சதவீதத்திற்கும் அதிகரித்தன. எனினும், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் தொழில்நிலையின் முக்கிய மூலமாக விளங்கியதுடன் 2013இலும் தொடர்ந்து நாட்டின் மிக முக்கிய வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளராகக் காணப்பட்டது.

**அதிகரித்த உற்பத்திகளுடன் வேளாண்மைத் துறை 2013இன் 4.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** துறை மேம்படுத்துவதற்கான அரச கொள்கைகள், இலாபகரமான உற்பத்தியாளர் விலைகள் மற்றும் சாதகமான வானிலை இவ்வளர்ச்சிக்குப் பங்களித்தது. நெல் உற்பத்தி 20 சதவீதத்தினால்

**அட்டவணை 1.1 நிலையான விலைகளில் (2002) கைத்தொழில் மூலத்தின்படி மொத்தத் தேசிய உற்பத்தி**

| துறை | பெறுமதி (ரூ. மில்லியன்) | | மொ.உ.உ. இன் பங்கு (%) | | மாற்றத்தின் வீதம் ( % ) | | மாற்றத்திற்கான பங்களிப்பு ( % ) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012(அ) | 2013(ஆ) | 2012(அ) | 2013(ஆ) | 2012(அ) | 2013(ஆ) | 2012(அ) | 2013 (ஆ) |
| **வேளாண்மை** | **336,817** | **352,641** | **11.1** | **10.8** | **5.2** | **4.7** | **9.2** | **7.2** |
| வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் காட்டுத்தொழில் | 295,923 | 309,192 | 9.7 | 9.5 | 4.7 | 4.5 | 7.3 | 6.0 |
| மீன்பிடித் தொழில் | 40,894 | 43,449 | 1.3 | 1.3 | 9.3 | 6.2 | 1.9 | 1.2 |
| **கைத்தொழில்** | **925,152** | **1,016,886** | **30.4** | **31.1** | **10.3** | **9.9** | **47.5** | **41.5** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 84,672 | 94,388 | 2.8 | 2.9 | 18.9 | 11.5 | 7.4 | 4.4 |
| தயாரிப்பு | 520,938 | 559,843 | 17.1 | 17.1 | 5.2 | 7.5 | 14.3 | 17.6 |
| மின்வலு, எரிவாயு மற்றும் நீர் | 72,452 | 79,913 | 2.4 | 2.4 | 4.2 | 10.3 | 1.6 | 3.4 |
| கட்டடவாக்கம் | 247,091 | 282,742 | 8.1 | 8.7 | 21.6 | 14.4 | 24.2 | 16.1 |
| **பணிகள்** | **1,783,318** | **1,896,572** | **58.6** | **58.1** | **4.6** | **6.4** | **43.3** | **51.3** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 701,408 | 739,826 | 23.0 | 22.7 | 3.7 | 5.5 | 13.7 | 17.4 |
| சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும் | 21,029 | 25,715 | 0.7 | 0.8 | 20.2 | 22.3 | 1.9 | 2.1 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் | 435,872 | 476,721 | 14.3 | 14.6 | 6.2 | 9.4 | 14.0 | 18.5 |
| வங்கியியல், காப்புறுதி, உண்மைச் சொத்து மற்றும் ஏனையவை | 269,744 | 285,750 | 8.9 | 8.7 | 6.7 | 5.9 | 9.4 | 7.2 |
| வதிவிட உரிமை | 76,926 | 79,175 | 2.5 | 2.4 | 1.7 | 2.9 | 0.7 | 1.0 |
| அரச பணிகள் | 207,559 | 213,439 | 6.8 | 6.5 | 1.4 | 2.8 | 1.6 | 2.7 |
| தனியார் பணிகள் | 70,779 | 75,946 | 2.3 | 2.3 | 5.5 | 7.3 | 2.0 | 2.3 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **3,045,288** | **3,266,099** | **100.0** | **100.0** | **6.3** | **7.3** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -62,253 | -88,454 | | | -97.4 | -42.1 | | |
| **மொத்த தேசிய உற்பத்தி** | **2,983,034** | **3,177,645** | | | **5.3** | **6.5** | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

4.62 பில்லியன் மெற்றிக்தொன்களுக்கு வளர்ச்சியடைந்த அதேவேளை உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் அரச கொள்கைகளின் ஆதரவுடன், மரக்கறிகள் மற்றும் ஏனைய உயர்நிலப் பயிர்கள், சீனி மற்றும் பால் என்பவற்றின் உற்பத்தியும் ஆண்டுக் காலத்தில் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டது. மேலும், தேயிலை உற்பத்தியும் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன், 2013இல் 3.6 சதவீதத்தால் 340 மில்லியன் கிலோகிராம்களுக்கு வளர்ச்சியடைந்து முன்னெப்போதுமில்லாத உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், 2013இல் இறப்பர் மற்றும் தெங்குத் துறையின் வெளியீடு முறையே 14.2 சதவீதத்தினாலும் 14.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து வேளாண்மைத் துறையின் வளர்ச்சியை தளர்வடையச் செய்தது. தெங்கு உற்பத்தியிலான வீழ்ச்சியானது முக்கியமாக முன்னைய ஆண்டின் வரட்சியின் காலந்தாழ்த்திய விளைவினால் ஏற்பட்ட அதேவேளை ஒன்பது மாத காலப்பகுதியில் பாலெடுக்கும் நடவடிக்கைகளை மோசமாகப் பாதித்த அடைமழையினால் இறப்பர் உற்பத்தி பாதிக்கப்பட்டது. ஆண்டுக் காலப்பகுதியில் நாட்டின் மீன்பிடித்துறை மேயிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளினால் பாதிப்புக்குள்ளான போதும், மீன் உற்பத்தி மேம்பட்டு 2013இல் 5.5 சதவீதமான திருப்திகரமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**வேளாண்மை மீதான அரசின் கொள்கையானது, தோற்றம் பெற்றுவரும் துறைகளின் பெறுமதிகூட்டலை மேம்படுத்துவதன் மீதும் உள்ளார்ந்த வளத்திற்குக் கீழ் தொழிற்படும் துறைகளின் விரைந்த வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மீதும் குவிந்திருந்தது.** அரிசி ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கும் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் பொருட்டும் புதிய அரிசி வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தேயிலைத் துறையில் மீள்பயிரிடல் மற்றும் புதிய பயிரிடலை ஊக்குவிப்பதற்காக உதவுதொகை நிகழ்ச்சித்திட்டங்கள் தேயிலைத் தொழிற்சாலை நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்து தொடரப்பட்டன. பாரம்பரியமற்ற இடங்களிலான இறப்பர் மற்றும் தெங்கின் பயிர்ச்செய்கையானது உயர்தர மூலப்பொருட்கள் மற்றும் விதைகளின் பகிர்ந்தளிப்பினூடாகத் தொடர்ந்து ஆதரவளிக்கப்பட்டது. கரும்புப் பயிர்ச்செய்கையானது, ஏனைய பொருட்களை விட சீனி உற்பத்திக்கு கூடிய கவனம் செலுத்தப்பட்டமையின் மூலம் விரிவுபடுத்தப்பட்டது. சலுகை ரீதியான கடன் திட்டங்களினால் ஆதரவளிக்கப்பட்டு உயர்தர இனப்பெருக்கத்துக்கான பசுக்களின் இறக்குமதி, பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் நாட்டில் புதிய கலப்பின பசுக்கூட்டத்தின் பெருக்கத்தை விரைவுபடுத்துவதற்கும் உதவியது. 2013இல் தொழிற்பாடுகளை ஆரம்பித்த மீன்பிடித்துறைமுகங்கள் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் பாரிய கலம்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. துறையில் மிகப் பிந்திய தொழில்நுட்பத்தைப் புகுத்துவதனை இலக்காகக் கொண்ட தியவற திறிய கடன் திட்டம் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகவும் 2013இல் தொடர்ந்தது. அதேவேளை, உள்நாட்டுப் பொருட்களுக்கு பதிலீடாக இறக்குமதி செய்யப்படும் உணவுப்

பண்டங்களின் மீது பேணப்பட்ட உயர்ந்த வரி வீதங்கள், உறுதியானதும் இலாபகரமானதுமான விலைகளை உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு வழங்கின.

**தயாரிப்பு வெளியீட்டில் ஏறத்தாழ 90 சதவீதத்திற்கு வகைகூறும் தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீடு, உலகளாவிய வர்த்தகப்படுத்தல் பங்காளர் பொருளாதாரங்களிலான மீட்சி, அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள், தூண்டுதலளிக்கும் வியாபாரச் சூழ்நிலை, மற்றும் கைத்தொழில் அதிபர்களினால் தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்ட உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வழிமுறைகள் என்பவற்றினால் உந்தப்பட்டு 2013இல் சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தான மேம்பட்ட கேள்விகள் உற்பத்தித்திறன் மேம்பாட்டு வழிமுறைகளின் பின்பற்றல் மற்றும் துறையின் பெறுமதிகூட்டலை மேம்படுத்திய பாரியளவான பின்னோக்கிய ஒருங்கிணைப்புக்கள் என்பவற்றால் உந்தப்பட்டு ஆண்டுக் காலத்தில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பதிவு செய்தது. ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றிலான தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீட்டிலான அதிகரிப்புடன் இறப்பர் உற்பத்தித் துறை சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. ஆண்டுக் காலத்தில் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் போன்ற மாற்று மூலங்களிலிருந்தான மசகெண்ணெயின் தடங்கலற்ற வழங்கல் 2013இல் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் வெளியீட்டிலான அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. இதேபோல், 2013 காலப்பகுதியில் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் மற்றும் மின்னியல் சாதனங்கள் துணைத் துறையின் வெளியீட்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டு, உற்பத்தி பன்முகப்படுத்தலின் அதிகரிப்பைப் பிரதிபலித்தது.

**அரசாங்கத்தின் கைத்தொழில் கொள்கை விசையானது 2013ஆம் ஆண்டுக் காலத்தில் அறிவை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பம் செறிந்த கைத்தொழில்களின் ஊக்குவிக்கும் அதேவேளையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்கு ஆதரவளித்தல் மற்றும் பிராந்திய கைத்தொழில் மயமாக்கம் என்பவற்றினை நோக்கி நெறிப்படுத்தப்பட்டது.** இலங்கையின் முதலாவது நனோ விஞ்ஞானப் பூங்காவானது 2013 ஒத்தோபரில் திறந்து வைக்கப்பட்டதுடன் இது உபாய ரீதியில் கவனம் செலுத்தும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புக்களை வசதிப்படுத்தியது. மேலும், அரசாங்கம் தொழில்நுட்பப் புத்தாக்கங்களை மேம்படுத்துதல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை கைத்தொழில்களில் தொழில்நுட்பத்தை உட்புகுத்துதல் என்பனவற்றை நோக்கிய வழிமுறையொன்றாக தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை எடுத்தது. அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் உருவாக்கம் மற்றும் 20 பிரதான மற்றும் சிறிய கைத்தொழில் பேட்டைகளின் நவீனமயமாக்கல் என்பன 2013இல் வேறுபட்ட மாவட்டங்களில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியைத் தரமுயர்த்தும் வேளையில் பிராந்திய ரீதியான கைத்தொழில் மயமாக்கலை ஊக்கப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும்.

**பணிகள் துறை 2012இல் பதிவு செய்த 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 6.4 சதவீதமான பாராட்டத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது.** பணிகள் துறையின் வளர்ச்சியானது ஆண்டு காலத்தில் அனைத்து துணைத் துறைகளிலும் காணப்பட்ட பொதுவான மேல் நோக்கிய உந்துதலின் விளைவாக ஏற்பட்டதாகும். போக்குவரத்து, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரம், சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் அதேபோல் வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துக்கள் துணைத் துறைகளிலான குறிப்பிடத்தக்க விரிவாக்கம் 2013இல் பணிகள் துறையின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு வழிவகுத்தது. போக்குவரத்து துணைத் துறையின் விரிவாக்கமானது அதிகரித்த உள்ளக நகர்வுகள் மற்றும் நாட்டின் பௌதீக உட்கட்டமைப்பில் அவதானிக்கப்பட்ட விரைந்த அபிவிருத்தி என்பவற்றுடன் இசைந்திருந்தது. வலுவான உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகளுடன் இணைந்த மேம்பட்ட உலகளாவிய சந்தை நிலைமைகளின் காரணமாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் புத்துயிரளிக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகம், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரத்தின் உறுதியான மீட்சிக்குப் பங்களித்தன. விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத் துறை முன்னைய ஆண்டின் வளர்ச்சியை விஞ்சியது. 2012இல் பின்பற்றப்பட்ட உறுதிப்படுத்தல் கொள்கை வழிமுறைகளின் காலங்கடந்த தாக்கங்கள் சில நிலைத்திருந்த போதும் வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துக்கள் துணைத் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்தது. பணிகள் துறை மொ.உ.உற்பத்தியின் 58.1 சதவீதமான பங்குடன் பொருளாதாரத்தின் ஆதிக்கம் செலுத்தும் துறையாக தொடர்ந்தும் விளங்கிய போதும், உயர் வீதத்திலான கைத்தொழில் துறையின் விரிவாக்கத்தின் காரணமாக இதன் முக்கியத்துவம் 2012 மற்றும் 2011இல் முறையே 58.5 சதவீதம் மற்றும் 59.5 சதவீதத்திலிருந்து தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது.

**செலவின நோக்கில், மொத்த உள்நாட்டு உற்பத்தியின்**

**வளர்ச்சி 2013இல் அதிகரித்த நுகர்வு அதேபோன்று முதலீட்டினால் ஆதரவளிக்கப்பட்டது.** எனினும், தனியார் நுகர்விலான குறைந்த வளர்ச்சியின் காரணமாக 2013இல் நுகர்விலான வளர்ச்சி வீழ்ச்சியடைந்த அதேவேளை, அரச நுகர்வுச் செலவினம் முன்னைய ஆண்டினை விடக் கூடிய வீதத்தில் வளர்ச்சியடைந்தது. முதலீட்டு நடவடிக்கைகள் மீதான செலவினம் வளர்ச்சியடைந்து உயர்ந்த வளர்ச்சி வாய்ப்புக்களுடன் பொருளாதாரத்தின் மீது அதிகரித்த நம்பிக்கையைப் பிரதிபலித்தது. மேம்பட்ட வெளிநாட்டுத் துறைக் கேள்விப் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியின் உயர் வளர்ச்சிக்கு வழிவகுத்த அதேவேளை பெயரளவு நியதிகளில் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதி சிறிதளவால் வளர்ச்சியடைந்தது.

**உள்நாட்டு சேமிப்புக்கள் மொ.உ.உற்பத்தியின் 20 சதவீதமாக மேம்பட்டு 2012இல் நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சிப் போக்கு தொடர்ந்ததை எடுத்துக்காட்டியது.** உள்நாட்டுச் சேமிப்புக்களின் மேம்பாடானது தனியார் சேமிப்பிலான மேம்பாடு அதேபோல் அரச துறையின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறுகியமையின் காரணமாக அரச குறைச் சேமிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பவற்றின் இணைந்த விளைவாகும். தொழிலாளர் பணவனுப்பல்களிலான தொடர்ச்சியான வளர்ச்சியுடன் 2013இல் தேசிய சேமிப்புக்களும் மேம்பட்டன. எனினும், அதிகரித்த வெளிப்பாய்ச்சல்களுடன் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தின் வீழ்ச்சி தேசிய சேமிப்புக்களிலான வளர்ச்சியைப் பாதித்தது. அதேவேளை 2013 காலப்பகுதியில் மூலவள இடைவெளி குறுக்கமடைந்து நிதி முதலீடுகளுக்காக வெளிநாட்டுத் துறை தங்கியிருக்கும் தன்மையைக் குறைத்தது.

**நுகர்வோர் விலைப் பணவீக்கம் (ஆண்டுக்காண்டு) தொடர்ச்சியான ஐந்தாவது ஆண்டாக ஒற்றை இலக்கத்தில் காணப்பட்டு 2013இல் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கைத் தொடர்ந்தது.** கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் (2006/07=100) அளவிடப்படும் ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம், பாதகமான வானிலை நிலைமையின் காரணமாக உணவு வழங்கலில் ஏற்பட்ட தடங்கலின் முக்கிய காரணமாக 2013 சனவரி மற்றும் பெப்புருவரியில் பதிவு செய்யப்பட்ட 9.8 சதவீதத்துடன் ஆண்டின் ஆரம்பத்தில் ஒப்பீட்டளவில் உயர்வாக இருந்தது. ஆண்டுக் காலத்தில் மேம்பட்ட உள்நாட்டு வழங்கல், மெதுவடைந்த பன்னாட்டுப் பண்ட விலைகள் மற்றும் முன்மதியான நாணயக் கொள்கை என்பன 2013 மார்ச்சிலிருந்து பணவீக்கம் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. 2013ஆம் ஆண்டில் உணவல்லா வகையில் அவதானிக்கப்பட்ட விலை மெதுவடைவானது உணவு வகையிலான விலை அதிகரிப்பில் ஆதிக்கம் செலுத்தியது. ஆண்டுப் பகுதியில் சில


**அட்டவணை 1.2 கூட்டுக் கேள்வியும் சேமிப்பு முதலீட்டு இடைவெளியும்**

| விடயம் | ரூ. பில்லியன் | | வளர்ச்சி % | | மொ.உ.உ. இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2012(அ) | 2013(ஆ) | 2012(அ) | 2013(ஆ) | 2012(அ) | 2013(ஆ) |
| **1. உள்நாட்டுக் கேள்வி** | **8,618.6** | **9,500.3** | **14.9** | **10.3** | **113.7** | **109.5** |
| 1.1 நுகர்வு | 6,295.9 | 6,934.8 | 13.7 | 10.1 | 83.1 | 80.0 |
| தனியார் | 5,274.5 | 5,797.5 | 15.5 | 9.9 | 69.6 | 66.8 |
| அரசு | 1,021.4 | 1,137.3 | 5.6 | 11.3 | 13.5 | 13.1 |
| 1.2 முதலீடு (மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்) | 2,322.7 | 2,565.5 | 18.3 | 10.7 | 30.6 | 29.6 |
| தனியார் | 1,798.1 | 1,969.1 | 15.8 | 9.7 | 23.7 | 22.7 |
| அரசு | 524.6 | 596.4 | 27.9 | 13.9 | 6.9 | 6.9 |
| **2. தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-1,036.3** | **-826.4** | **-8.8** | **20.2** | **-13.7** | **-9.5** |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,729.0 | 1,949.3 | 14.7 | 12.6 | 22.8 | 22.5 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 2,765.3 | 2,775.7 | 12.4 | 0.3 | 36.5 | 32.0 |
| **3. மெத்தக் கேள்வி (மொ.உ.உ.) (1 + 2)** | **7,582.4** | **8,673.9** | **15.8** | **14.5** | **100.0** | **100.0** |
| **4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் (3 - 1.1)** | **1,286.5** | **1,739.1** | **27.3** | **35.6** | **16.9** | **20.0** |
| தனியார் | 1,392.9 | 1,806.8 | 28.0 | 32.6 | 18.0 | 20.8 |
| அரசு | -106.4 | -67.7 | -39.5 | 14.9 | -1.0 | -0.8 |
| **5. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம்** | **-148.4** | **-234.9** | **-115.1** | **-51.6** | **-2.0** | **-2.7** |
| **6. தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள்** | **681.7** | **728.7** | **34.2** | **5.8** | **9.1** | **8.4** |
| **7. தேசிய சேமிப்புக்கள் (4 + 5 + 6)** | **1,819.8** | **2,232.8** | **25.4** | **22.9** | **24.0** | **25.7** |
| **8. சேமிப்பு முதலீட்டு இடைவெளி** | | | | | | |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீடு (4 - 1.2) | -1,036.3 | -826.4 | | | -13.7 | -9.5 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7 - 1.2) | -503.0 | -332.7 | | | -6.6 | -3.8 |
| **9. அலுவல்சார் கொடைகளற்ற வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை (2 + 5 + 6)** | **-503.0** | **-332.7** | | | **-6.6** | **-3.8** |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 1.5** சேமிப்பும் முதலீடும் (மொ.உ.உ. இன் சதவீதமாக)




**வரைபடம் 1.6** ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் (கொ.நு.வி.சு. அடிப்படையில்: 2006/07=100)




நிர்வகிக்கப்பட்ட விலைகளிலான மேல் நோக்கிய திருத்தம் சில விலை அழுத்தத்தைத் தோற்றுவித்த போதும் இது மிகக் குறைந்த இரண்டாம் சுற்றுத்தாக்கங்களுடன் நன்கு முகாமை செய்யப்பட்டது. ஆண்டுக்காண்டு பணவீக்கம் 2013 திசெம்பரில் 4.7 சதவீதத்தையடைந்து ஆண்டுக்கான அதன் மிகக் குறைந்த மட்டத்தைப் பதிவு செய்த வேளையில், ஆண்டுச் சராசரிப் பணவீக்கமும் 2012 இறுதியின் 7.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013 இறுதியில் 6.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நன்கு கட்டுப்படுத்தப்பட்ட கேள்வி நிலைமைகளைப் பிரதிபலித்து ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கமும் தொடர்ந்து குறைவாக இருந்ததுடன் 2013 திசெம்பரில் அதன் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த மட்டமான 2.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

**உள்நாட்டுச் சூழலின் இயலுமை மற்றும் உலகளாவிய பொருளாதாரத்திலான சாதகமான அபிவிருத்திகளின் ஆதரவுடன் வெளிநாட்டுத் துறை 2013இல் சிறப்பாகச் செயலாற்றியது.** அதிகரித்த ஏற்றுமதி வருமானங்களும் வீழ்ச்சியடைந்த இறக்குமதிச் செலவினமும் வர்த்தகப் பற்றாக்குறையை குறிப்பிடத்தக்களவு குறுக்கின. தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக்காட்டி வர்த்தகப் பற்றாக்குறையைக் குறிப்பிடத்தக்களவிற்குத் தணித்தது. இவ்வபிவிருத்திகள் ஏனைய பணிகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்புடன் இணைந்து வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையைக் குறுக்கின. 2013இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் அரசாங்கம், வங்கித்துறை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளுக்கான பெறுகைகளின் வடிவிலான நிதியியல் கணக்கிற்கான குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்கள், சென்மதி நிலுவை 2013இல் ஐ.அ.டொலர் 985 மில்லியன் பொதுவான மிகையைப் பதிவு செய்து பலப்படுத்துவதற்கு உதவியதுடன் அதன் மூலம் நாட்டின் ஒதுக்கு நிலைமையை மேம்படுத்தியது. அதேவேளை, செலாவணி வீதத்தினைத் தீர்மானிப்பதிலான தளர்வு தொடரப்பட்ட வேளையில் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து தேறிய அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணி உள்ளீர்க்கப்பட்டமையும் 2013இல் ரூபாவின் தளம்பலைக் குறைத்தன. ஐக்கிய அமெரிக்காவின் கணியம்சார் தளர்த்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் அளவுக் குறைப்பின் அறிவிப்பினைத் தொடர்ந்து தேறிய வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சலுடன் பாரியளவான தேய்மானத்தைச் சந்தித்த ஏனைய பல பிராந்திய நாணயங்களுக்கு மாறாக ரூபா உறுதியாக இருந்தது.

**அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தைப் பிரதிபலித்து, ஏற்றுமதிகளிலான அதிகரிப்புடன் இணைந்த இறக்குமதிகளிலான தொடர்ச்சியான வீழ்ச்சியுடன் 2013இல் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை கூடியளவிற்கு சுருக்கமடைந்தது.** 2012இல் 7.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்த ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான மீட்சியுடன் 2013இல் 6.4 சதவீதத்தால் அதிகரித்தது. ஒட்டுமொத்த ஏற்றுமதி வளர்ச்சிக்கு 61 சதவீதம் பங்களிக்கும் கைத்தொழில் ஏற்றுமதிகள் புடவைகள் மற்றும் ஆடைகளிலான மேம்பட்ட செயலாற்றத்தின் முக்கிய காரணமாக 2013இல் 5.1 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த ஏற்றுமதிகளில் 43.4 சதவீதத்திற்குப் பங்களிக்கும் புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2013இல் 13 சதவீதத்தால் அதிகரித்தன. ஆடைகளுக்கான முக்கிய ஏற்றுமதி சேரிடங்களான ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் முறையே 6.8 சதவீதத்தினாலும் 21.0 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், வேளாண்மை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 74 சதவீதத்திற்கு வகைகூறும் தேயிலை மற்றும் வாசனைத்திரவியங்களின் ஏற்றுமதியிலான வலுவான வளர்ச்சியின் முக்கிய காரணமாக 2013இல் 10.7 சதவீதத்தினால் அதிகரித்தன. குறைவான உலகளாவிய கேள்வியின் காரணமாக ஏனைய பண்டங்களின் விலைகள் வீழ்ச்சியடைந்த போதும் பொருட்களின் உயர்தரம் காரணமாக இலங்கைத் தேயிலை மற்றும் வாசனைத்திரவியங்கள் பன்னாட்டுச் சந்தையில் மிக உயர்ந்த விலைகளைப் பெற்றுக்கொண்டன.

**2013இல் இறக்குமதிகள் மீதான செலவினம் 6.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் எரிபொருள் அல்லா இறக்குமதிகள் மீதான செலவினம் 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான பாரிய பங்களிப்பு, இடைநிலைப் பொருட்களிலிருந்து கிடைத்ததுடன் இது எரிபொருள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்களின் இறக்குமதிகளால் வழிநடத்தப்பட்டு 2013இல் 8.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஆண்டுக் காலத்தின் வெப்ப வலுவின் குறைந்த உருவாக்கத்தின் முக்கிய காரணத்தால் 2013இல் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 14.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பின்னோக்கிய ஒருங்கிணைப்பிலிருந்து தோன்றிய ஆடைக் கைத்தொழிலின் உயர் உள்நாட்டுப் பெறுமதிகூட்டலின் விளைவாக புடவை மற்றும் புடவைப் பொருட்களின் இறக்குமதி 9.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் பொறிகள் மற்றும் கருவிகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியின் காரணமாக ஆண்டுக் காலத்தில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 7.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 63 சதவீதத்திற்கு அதிகரித்து, உணவு மற்றும் குடிபானம் அதேபோன்று உணவல்லா விடயங்களிலான இறக்குமதியின் அதிகரிப்பைப் பிரதிபலித்தது. உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தமைக்கு உந்து ஊர்திகளின் இறக்குமதிகளிலான 17.6 சதவீத அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

**வர்த்தகக் கணக்கின் செயலாற்றத்திலான மேம்பாடு, பணிகளின் ஏற்றுமதியின் பேரிலான உயர் மொத்த வருவாய்கள் மற்றும் உயர்ந்த தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பன 2013 காலப்பகுதியில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவு குறுக்கமடைவதற்குப் பங்களித்தன.** பயணம் மற்றும் சுற்றுலா, போக்குவரத்து மற்றும்

**அட்டவணை 1.3 வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்**

| விடயம் | ஐ.அ.டொ.மில்லியன் 2012 (அ) | 2013 (ஆ) | மாற்ற வீதம் (%) |
|---|---|---|---|
| **நடைமுறைக் கணக்கு** | **-3,982** | **-2,607** | **-34.5** |
| **வர்த்தக நிலுவை** | **-9,417** | **-7,609** | **-19.2** |
| **ஏற்றுமதிகள்** | **9,774** | **10,394** | **6.4** |
| வேளாண்மை உற்பத்திகள் | 2,331 | 2,581 | 10.7 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 7,371 | 7,749 | 5.1 |
| கனிப்பொருள் உற்றுமதிகள் | 61 | 52 | -15.9 |
| ஏனைய ஏற்றுமதிகள் | 10 | 12 | 26.6 |
| **இறக்குமதிகள்** | **19,190** | **18,003** | **-6.2** |
| நுகர்வுப் பொருட்கள் | 2,995 | 3,182 | 6.3 |
| இடைநிலைப் பொருட்கள் | 11,578 | 10,554 | -8.8 |
| முதலீட்டு பொருட்கள் | 4,590 | 4,253 | -7.3 |
| ஏனைய இறக்குமதிகள் | 28 | 14 | -50.0 |
| **பணிகள் (தேறிய)** | **1,262** | **1,180** | **-6.5** |
| பெறுகைகள் | 3,800 | 4,685 | 23.3 |
| கொடுப்பனவுகள் | 2,538 | 3,505 | 38.1 |
| **முதனிலை வருமானம் (தேறிய)** | **-1,219** | **-1,817** | **49.1** |
| பெறுகைகள் | 142 | 148 | 4.1 |
| கொடுப்பனவுகள் | 1,361 | 1,965 | 44.4 |
| **இரண்டாம் நிலை வருமானம் (தேறிய)** | **5,392** | **5,639** | **4.6** |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) | 5,339 | 5,619 | 5.2 |
| பெறுகைகள் | 5,985 | 6,407 | 7.0 |
| கொடுப்பனவுகள் | 646 | 788 | 22.0 |
| அலுவல்சார் மாற்றல்கள், (தேறிய) | 53 | 21 | -60.5 |
| **மூலதனக் கணக்கு** | **130** | **71** | **-45.6** |
| **நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு** | **-3,851** | **-2,536** | **-34.2** |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **4,263** | **3,126** | **-26.7** |
| நிதியியல் சொத்துக்களின் தேறிய கைப்படுத்துகை | **1,177** | **955** | **-18.8** |
| நேரடி முதலீடு (தேறிய) | 64 | 65 | 1.8 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு | -10 | ... | 100.0 |
| கடன் பிணையங்கள் | -10 | ... | 100.0 |
| ஏனைய முதலீடு | 363 | -222 | -161.1 |
| நாணய மற்றும் வைப்புக்கள் | 162 | -459 | -383.4 |
| வர்த்தக கடன் மற்றும் முற்பணங்கள் | 90 | 195 | 116.0 |
| ஏனைய பெறுகை கணக்குகள் | 111 | 42 | -61.8 |
| ஏனைய ஒதுக்குகள் | 760 | 1,112 | 46.2 |
| பொறுப்புக்களின் தேறிய ஏற்பாடு | **5,440** | **4,081** | **-25.0** |
| நேரடி முதலீடு (தேறிய) | 941 | 916 | -2.7 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு | 2,116 | 2,106 | -0.5 |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீடு நிதிப் பங்குகள் | 272 | 263 | -3.4 |
| படுகடன் பிணையங்கள் | 1,844 | 1,843 | -0.1 |
| ஏனைய முதலீடு | 2,384 | 1,060 | -55.5 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 447 | 108 | -75.9 |
| கடன்கள் | 3,070 | 949 | -69.1 |
| வர்த்தக கடன் மற்றும் முற்பணங்கள் | -571 | -54 | -90.5 |
| செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள் | -563 | 58 | -110.2 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - |
| தவறுகளும் விடுபாடுகளும் | -412 | -590 | |
| **திரண்ட நிலுவை** | **151** | **985** | |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் | **7,106** | **7,495** | |
| இறக்குமதி மாதங்கள் | **4.4** | **5.0** | |
| மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் | 8,586 | 8,574 | |
| இறக்குமதி மாதங்கள் | 5.4 | 5.7 | |
| ஏற்றுமதி விலைச் சுட்டெண் (2010 ஸ்ரீ 100) | 103.1 | 103.5 | 0.4 |
| இறக்குமதி விலைச் சுட்டெண் (2010 ஸ்ரீ 100) | 115.2 | 108.4 | -5.9 |
| வர்த்தக மாற்று விகிதம் | **89.5** | **95.5** | **6.7** |
| **செலாவணி வீதங்கள் (சராசரி)** | | | உயர்வு(+) /தேய்வு(-) |
| ரூ./ஐ.ெ.டொலர் | 127.60 | 129.11 | -1.2 |
| ரூ./யப்பான் யென் | 1.60 | 1.32 | 20.7 |
| ரூ./யூரோ | 164.01 | 171.51 | -4.4 |
| ரூ./ஸ்ரேலிங் பவுண் | 202.28 | 202.08 | 0.1 |
| ரூ./இந்தியன் ரூபா | 2.39 | 2.21 | 8.2 |

(அ) இவ்வட்டவணையில் பயன்படுத்தப்பட்டுள்ள வகைப்படுத்தல்கள் ப.நா.நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேடு 6ஆம் பதிப்பை (2009) பின்பற்றுகின்றது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத் துறைகளின் செழிப்பான செயலாற்றத்தின் முக்கிய விளைவாக 2013இல் பணிகள் கணக்கு தொடர்ந்தும் மிகையைப் பதிவு செய்தது. பயணிகள் கட்டணம், சரக்குக் கட்டணம், துறைமுகம் மற்றும் வானூர்தி நிலையத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்கிய, பணிகள் கணக்கிலுள்ள முக்கிய துறையான போக்குவரத்துத் துறைக்கான மொத்த உட்பாய்ச்சல்கள் 2013இல் 9.2 சதவீதத்தினால் உறுதியாக வளர்ச்சியடைந்தன. உயர் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் சரக்குக் கையாளல் அளவுகளின் வளர்ச்சி மற்றும் உள்நாட்டு வானூர்தி நிலையங்களினால் பணி வழங்கப்பட்ட சேரிடங்களின் எண்ணிக்கையிலேற்பட்ட அதிகரிப்பு என்பன போக்குவரத்துத் துணைத் துறையின் வளர்ச்சிக்குப் பெருமளவில் பங்களித்தன. பயனுறுதியான ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் மற்றும் மேம்பட்ட உட்கட்டமைப்பு என்பன இலங்கையை 2013இல் அதிகளவான சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு இயலச் செய்ததுடன் சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த சராசரிச் செலவுடன், ஆண்டு 2012 உடன் ஒப்பிடுகையில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 65.1 சதவீத விரைந்த வளர்ச்சியைப் பதிவு செய்தது. தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகளும் கூட மேம்பட்ட செயலாற்றத்தைக் காட்டின. 2013 ஒத்தோபரில் ஐக்கிய இராச்சியத்தின் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் தேசிய அமைப்பினால் வழங்கப்படும் “ஆண்டிற்கான வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் நாடு” என்ற விருது இலங்கைக்கு வழங்கப்பட்டமையானது மென்பொருள் மற்றும் வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வெளியிலிருந்து அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகளில் இலங்கைக்கு இருக்கும் பாரிய உள்ளார்ந்த வளத்தை எடுத்துக்காட்டியது. மேலும், தென்னாசியாவின் தோற்றம் பெற்றுவரும் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்கள் 2013இல் இலங்கைக்கான கணிசமான வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளராகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் வர்த்தகப் பற்றாக்குறையைக் கணிசமானளவிற்குத் தணிப்பதற்கும் உதவியது. இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர் விபரப்பட்டியலின் தோற்றப்பாடானது, தேர்ச்சியற்ற மற்றும் வீட்டுப் பணிப்பெண்கள் வகையிலிருந்து கூடியளவிற்கு தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் தேர்ச்சியுற்ற தொழிலாளர் வகைகளுக்கு படிப்படியாக மாறுகின்றமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். இவ்வபிவிருத்திகளுடன் இணைந்து செல்லும் விதத்தில், வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை 2012இன் ஐ.அ.டொலர் 3,982 மில்லியனிலிருந்து 2013இல் 34.5 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 2,607 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் தொடர்ச்சியாகக் குறுக்கமடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2012இன் மொ.உ.உற்பத்தியின் 6.7 சதவீதத்திலிருந்து 2013இல் மொ.உ.உற்பத்தியின் 3.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, சென்மதி நிலுவையின் மூலதனக் கணக்கு 2012இன் ஐ.அ.டொலர் 130 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 71 மில்லியனான தேறிய உட்பாய்ச்சல்களைப் பதிவு செய்தது.


**2013 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க நிதியியல் உட்பாய்ச்சல்கள் பதிவு செய்யப்பட்டு உலகப் பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி மற்றும் இலங்கையில் மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கையைப் பிரதிபலித்தன.** உட்கட்டமைப்பு மற்றும் தயாரிப்புத் துறைகள் உயர்ந்தளவான வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்ந்து கொண்டமையுடன் முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2013இல் 2.8 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,421 மில்லியனுக்கு வளர்ச்சியடைந்தன. அதேவேளை, வெளிநாட்டு மூலதனச் சந்தைகளில் வங்கித்தொழில் துறையினால் வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள் 2013இல் குறிப்பிடத்தக்க நிதியியல் பாய்ச்சல்களுக்கு வழிவகுத்தது. 2012இல் இலங்கை வங்கியினால் திரட்டப்பட்ட ஐ.அ.டொலர் 500 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி மற்றும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (டிஎவ்சிசி) என்பவற்றினால் மொத்தமாக ஐ.அ.டொலர் 1.35 பில்லியன் திரட்டப்பட்டது. வெளிநாட்டுக் கடன்கள் வடிவிலான நிதியியல் உட்பாய்ச்சல்களும் குறிப்பிடத்தக்கதாக இருந்து, 2013இல் மொத்தமா ஐ.அ.டொலர் 2.9 பில்லியனாக விளங்கியது. இவற்றில் 85 சதவீதமானவை நீண்ட கால அடிப்படையில் காணப்பட்டன. புகைவண்டிப் பாதை மீள்கட்டுமானம் மற்றும் விரிவாக்கம் மற்றும் முன்னுரிமை வாய்ந்த வீதிகளின் புனரமைப்பு போன்ற குறிப்பான பாரிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்கு செயற்திட்ட கடன்கள் வடிவிலான அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் சிறிதளவான அதிகரிப்பைப் பதிவு செய்தன. அதேநேரம், பல வங்கிகள் பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் நீண்ட காலப் படுகடன் பிணையங்கள் வழங்குவதை தெரிவு செய்தமையுடன் வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களுக்கான

வெளிநாட்டுக் கடன்கள் ஆண்டுப் பகுதியில் குறைவடைந்தன.

**மேம்பட்ட வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவை மற்றும் நிதியியல் கணக்கிற்கான குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களின் உதவியுடன் சென்மதி நிலுவை 2013இல் மிகையைப் பதிவு செய்தது.** 2012இன் ஐ.அ.டொலர் 151 மில்லியனான மிகையுடன் ஒப்பிடுகையில் சென்மதி நிலுவை 2013இல் ஐ.அ.டொலர் 985 மில்லியனான ஒட்டுமொத்த மிகையைப் பதிவு செய்தது. மேம்பட்ட சென்மதி நிலுவை நிலையைப் பிரதிபலித்து, நாட்டின் ஒதுக்குச் சொத்து நிலைமை 2012 இறுதியின் ஐ.அ.டொலர் 7.1 பில்லியனிலிருந்து 2013 இறுதியளவில் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனுக்கு மேலும் மேம்பட்டது. இதன்படி, ஒதுக்குச் சொத்துக்கள் 5.0 மாத காலப் பொருட்களின் இறக்குமதிக்கும் 4.2 மாத கால பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிக்கும் சமனானதாக இருந்தன. மேலும், வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் அதிகரிப்பு 2013 இறுதியளவில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 8.6 பில்லியனுக்கு அதிகரிப்பதற்கு வழிவகுத்ததுடன் இது 5.7 மாத கால பொருட்களின் இறக்குமதிக்கும் 4.8 மாத கால பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிக்கும் சமனானதாக இருந்தது.

**தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களுக்கான உட்பாய்ச்சல்கள், 2013இல் மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலைமையின் அதிகரிப்பிற்கு வழிவகுத்தன.** 2013இல் தனியார் துறையினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் 16 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் தளர்த்தலும் நாட்டின் பேரண்டப் பொருளாதார அடித்தளமும் வங்கித்துறை ஆண்டுக் காலத்தில் ஐ.அ.டொலர் 1.35 பில்லியன் பெறுமதியான படுகடன் பிணையங்களை பன்னாட்டு மூலதனச் சந்தையில் வழங்குவதனூடாக நிதி திரட்டுவதனை இயலச்செய்தன. நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலைமை 2012 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 37.1 பில்லியனிலிருந்து 2013 இறுதியில் ஐ.அ.டொலர் 39.7 பில்லியனுக்கு 7.1 சதவீத அதிகரிப்பைக்காட்டியது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த வெளிநின்ற படுகடன் 2012இன் மொ.உ.உற்பத்தியின் 62.5 சதவீதத்திலிருந்து 2013இல் 59.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அரச மற்றும் தனியார் துறை இரண்டும் நீண்ட காலக் கடன் பெறுகைகளின் மீது கூடிய முக்கியத்துவம் செலுத்தியமை காரணமாக மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக குறுங்காலப் படுகடனின் உள்ளடக்கம் 2012இன் 17.3 சதவீதத்திலிருந்து 2013இல் 16.4 சதவீதத்திற்கு

வரைபடம் 1.7 சென்மதி நிலுவை




வீழ்ச்சியடைந்தது. அதேநேரம், மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2013இல் அதிகரித்தன. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான பெறுகைகளின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2012இன் 19.7 சதவீதத்திலிருந்து 2013இல் 25.3 சதவீதத்திற்கு அதிகரித்தன. இது முக்கியமாக 2013இல் பன்னாட்டு நாணய நிதிய துணைநில் ஒழுங்கு வசதி, அரச பிணையங்களின் அதிகரித்த முதிர்ச்சி மற்றும் தனியார் துறைக் கடன் பொறுப்புக்கள் தொடர்பான உயர் மீள்கொடுப்பனவுகள் போன்ற அதிகரித்த மூலதனக் கொடுப்பனவுகள் மற்றும் அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளினால் ஏற்பட்டதாகும்.

**2013இல் செலாவணி வீதக் கொள்கை செலாவணி வீதத்தைத் தீர்மானிப்பதில் நெகிழ்ச்சித்தன்மையைப் பேணியது.** ஆண்டின் முதலரைப்பகுதியின் பெரும்பாலான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக உறுதியாகவிருந்த ரூபா யூன் மற்றும் யூலையில் காணப்பட்ட உயர்ந்த இறக்குமதிக் கேள்வி மற்றும் ஐக்கிய அமெரிக்க முறிகள் வாங்குகின்ற நிகழ்ச்சித்திட்டம் ஒடுங்கிவிடக்கூடிய சாத்தியங்கள் எதிர்பார்க்கப்பட்டமையின் முக்கிய காரணமாக யூன் நடுப்பகுதியிலிருந்து ஒகத்து இறுதிவரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 5 சதவீதத்தினால் தேய்வடைந்தது. எனினும், ஐக்கிய அமெரிக்க பெடரல் வங்கியின் கணியம்சார் தளர்த்தல் நிகழ்ச்சித்திட்டத்தின அளவு குறைக்கப்படுவதற்கான அறிகுறிகளைத் தொடர்ந்து கடுமையான தேய்வுக்குட்பட்ட இந்திய ரூபா மற்றும் இந்தோனிசிய ரூபியா போன்ற ஏனைய தோற்றம் பெற்றுவரும் சந்தை நாணயங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபா குறைந்த தளம்பலைக் கொண்டிருந்தது. இருப்பினும், செத்தெம்பர் ஆரம்பத்திலிருந்து வங்கித் துறைக்கான அதிகரித்த உட்பாய்ச்சல்களினால் ஆதரவளிக்கப்பட்டு இலங்கை

ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக பெறுமதி உயர்வடைந்தது. ஒட்டுமொத்தமாக, 2013 இறுதியில் ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக ரூ.130.75 இற்கு 2.75 சதவீதத்தினால் தேய்வடைந்தது. குறுக்கு நாணயச் செலாவணி வீத அசைவுகளைப் பிரதிபலித்து 2013 காலப்பகுதியில் முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா கலப்பான செயலாற்றத்தைக் காட்டியது. அதேவேளை தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 2012இல் அவதானிக்கப்பட்ட தேய்வுடன் ஒப்பிடுகையில் மிதமான உயர்வினைக்காட்டின. இதன்படி, 24 நாணயக் கூடையை அடிப்படையாகக் கொண்ட பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் இரண்டும் அத்துடன் 5 நாணயக் கூடையை அடிப்படையாகக் கொண்ட உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் ஆகியவை மிதமான வீதத்தில் உயர்வடைந்த வேளையில் 5 நாணயக் கூடையை அடிப்படையாகக் கொண்ட பெயரளவுத் தாக்கமுள்ள நாணய வீதம் 2013 இறுதியில் சிறிதளவால் தேய்வடைந்தது. மேலும், அண்மைய எதிர்காலத்தில் ரூபா உயர்வடையும் என்ற சந்தை எதிர்பார்ப்புக்களை எடுத்துக்காட்டி மூன்று மாத கால மற்றும் ஆறு மாத காலத்திற்கான முன்னோக்கிய மிகை மதிப்பு 2013இல் சராசரியாக வட்டி வீத வேறுபாடுகளை விடக் குறைவானதாகக் காணப்பட்டது.

## இறைத்துறை அபிவிருத்திகள்


**நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கான நாட்டின் தொலைநோக்குடன் இசைந்து செல்லும் விதத்தில், 2013இன் இறைக் கொள்கை உபாயம் இறைத் திரட்சி செயன்முறையினை மேலும் வலுப்படுத்தும் விதத்திலும் அதேவேளை பரந்த அடிப்படையிலான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கு ஆதரவளிக்கும் விதத்திலும் வடிவமைக்கப்பட்டது.** இதன்படி, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2012இன் பதிவு செய்யப்பபட்ட மொ.உ.உற்பத்தியின் 6.5 சதவீதம் கொண்ட பற்றாக்குறையிலிருந்து 2013இல் மொ.உ.உற்பத்தியின் 5.8 சதவீதத்திற்குக் குறைவடையுமென எதிர்பார்க்கப்பட்டதன் மூலம் 2009இலிருந்து பின்பற்றப்பட்ட பற்றாக்குறையினைக் குறைக்கும் பாதை தொடங்கியது. அண்மைய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு மாறாக 2013இல் கொடைகள் உட்பட அரசின் அரசிறை மொ.உ.உற்பத்தியின் 14.7 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்ட வேளையில் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 20.5 சதவீதத்தில் பேணப்பட்டது. இவ்வெறிவுகளை அடையும் பொருட்டு அரசிறை மற்றும் செலவினப் பக்கங்களில் அநேக கொள்கை வழிமுறைகள் நடைமுறைக்குவிடப்பட்டன. எனினும், இறக்குமதியுடன் தொடர்பான வரிகளில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியின் காரணமாக அரச அரசிறையில் காணப்பட்ட குறைந்த செயலாற்றம், குறிப்பாக ஆண்டின் தொடக்கப் பகுதியில் இறைத் தொழிற்பாடுகளின் சுமுகமான தொழிற்பாட்டினைப் பாதித்தன. ஆண்டின் பிற்பகுதியில், இறக்குமதி தொடர்பான வரிகள் உயர்வடையத் தொடங்கியமை, உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்தமை என்பனவற்றின் காரணமாக இப்போக்கு மாற்றமடைந்து, அரசாங்கம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை வரவு செலவுத்திட்ட இலக்கிடலான 5.8 சதவீதத்திலும் பார்க்க சிறிதளவு உயர்வாக மொ.உ.உற்பத்தியில் 5.9 சதவீதத்தில் பேணுவதற்கு அரசாங்கத்தினை இயலச்செய்ததுடன் இதன் மூலம் அண்மைய கடந்த காலத்தில் இறைத் திரட்சிப்பாதையும் அடையப்பட்டது. அரசிறையில் மந்தமான முன்னேற்றம் காணப்பட்ட போதும், இறைத் திரட்சியானது செலவினத்தினை முகாமைப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சியின் பெறுபேறாக இருந்தது. உண்மை நியதிகளின்படி மொத்த செலவினத்திலும் தேறிய கடன் வழங்கலிலும் காணப்பட்ட குறைப்பு மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம் ஆகிய இரண்டிலும் பதிவு செய்யப்பட்டது. இருப்பினும் அரசிறை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திலும் பார்க்கக் குறைவாக இருந்தமையின் காரணமாக அரசாங்கம், அதன் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் முன்னுரிமையளித்தமையினைத் தொடர்ந்து அரச முதலீடு மொ.உ.உற்பத்தியின் 5.5 சதவீதத்தில் பேணப்பட்டு ஆண்டு முழுவதும் பல உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கான மற்றும் கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட வெளிநாட்டு நிதியிடல் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதனையும் பிரதிபலித்தது. மூலவள இடைவெளியினை நிதியிடுவதில் உள்நாட்டு மூலவளங்கள் முக்கியமாக உள்நாட்டு வங்கித்தொழில் துறைகளினூடாக 76 சதவீதத்திற்குப் பங்களித்தன.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, அரச அரசிறை, மொ.உ.உற்பத்தியின் மதிப்பிடப்பட்ட 14.5 சதவீதத்துடனும் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 13.9 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 2013இல் மொ.உ.உற்பத்தியின் 13.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த போதும், பெயரளவு நியதிகளில் அரசிறை 2012இனை விட 8.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** ஆண்டின் முதலரைப் பகுதியில் இறக்குமதி தொடர்பான வரிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி

மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்தான இலாபமாற்றல்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பு என்பன அரச அரசிறையின் பலயீனமான செயலாற்றத்திற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. 2013இல் மொத்த அரசிறைச் சேகரிப்பு ரூ.1,137.4 பில்லியன் ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தின் ஆண்டு மதிப்பீடுகளிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவு குறைவாக இருந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரி அரசிறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 12.0 சதவீதத்திலிருந்து 11.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு பொருளாதாரப் பணிகள் கட்டணம், துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வையில் காணப்பட்ட குறைப்பு மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் மீதான உற்பத்தி வரியிலிருந்தான குறைந்த அரசிறைச் சேகரிப்புக்கள் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரியல்லா அரசிறை முன்னைய ஆண்டின் 1.9 சதவீதத்திலிருந்து 1.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் பெயரளவு நியதிகளில் 7.7 சதவீதமாகக் காணப்பட்ட வீழ்ச்சியானது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் மத்திய வங்கியிலிருந்தான மாற்றல்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மிதமான தன்மையினைப் பிரதிபலித்தது.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த அரச செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2012இல் பதிவு செய்யப்பட்ட 20.5 சதவீதத்திலிருந்து 2013இல் 19.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** இவ்வீழ்ச்சியானது, ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினத்தின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் அரச அரசிறையில் காணப்பட்ட பலயீனமான செலவினத்தினைக் கருத்திற்கொண்டு மூலதனச் செலவினம் முன்னுரிமைப்படுத்தப்பட்டமை

வரைபடம் 1.8
அரசிறை, செலவினம் மற்றும் மொத்த இறைப் பற்றாக்குறை (மொ.உ.உ. இன் சதவீதமாக)




என்பனவற்றின் இணைந்த விளைவாகும். மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக செலவினம் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 14.9 சதவீதத்திலிருந்து 2013இல் மொ.உ.உற்பத்தியின் 13.9 சதவீதத்திற்குக் குறைவடைந்த வேளையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2012இன் 5.6 சதவீதத்திலிருந்து 2013இல் 5.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதில், அரசாங்கம், உள்நாட்டுப் பிணையங்கள் சந்தையில் நிலவிய தாழ்ந்த வட்டி வீதங்களிலிருந்து நன்மைகளைப் பெறும் விதத்தில் உள்நாட்டுப் படுகடன் சாதனங்களின் மீது கூடியளவிற்கு தங்கியிருந்தது.** இதன்படி, தேறிய உள்நாட்டு நிதியிடல் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 41.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த நிதியிடலில் 76 சதவீதத்திற்குப் பங்களித்ததுடன் எஞ்சிய 24 சதவீதமும் வெளிநாட்டு மூலங்களினூடாக நிதியிடப்பட்டது. உள்நாட்டு வங்கித்தொழில் துறையிலிருந்தான தேறிய கடன்பாடுகள் மொத்த தேறிய உள்நாட்டு நிதியிடலில் 75.7 சதவீதத்திற்கு வகைகூறி ரூ.297 பில்லியனாக விளங்கின. இது 2013ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட வங்கி நிதியிடலின் ரூ.70 பில்லியனையும் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வங்கி நிதியிடலான ரூ.131.5 பில்லியனையும் விஞ்சிக் காணப்பட்டது. உள்நாட்டு வங்கியல்லாத் துறையிலிருந்தான மொத்த நிதியிடல் இவ்வாண்டுப் பகுதியில் ரூ.95.4 பில்லியனாக விளங்கியது. வெளிநாட்டுச் செயற்றிட்ட நிதியிடல் மற்றும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் சாதனங்களிலான வெளிநாட்டு முதலீடுகள் ரூ.123.7 பில்லியனாக விளங்கின.

**2013 திசெம்பர் இறுதியில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வெளிநின்ற அரச படுகடன் 2012 இறுதியின் 79.2 சதவீதத்திலிருந்து 78.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** பெயரளவு நியதிகளில் மொத்தப் படுகடன் இருப்பு ரூ.6,793.2 பில்லியனுக்கு 13.2 சதவீதத்தினால் அதிகரித்தது.


## நாணயத்துறை அபிவிருத்திகள்

**குறைந்த பணவீக்க சூழலை கருத்திற்கொண்டு உயர் வளர்ச்சி உத்வேகத்திற்கு சீராக்கம் ஒன்றினை மேற்கொள்ளும் விதத்தில் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் 2012ஆம் ஆண்டு திசெம்பரில் தொடங்கப்பட்ட நாணய கொள்கை நிலைமையை தளர்த்துதல் 2013 இலும் தொடர்ந்தது.** மத்திய வங்கியின் கொள்கை வட்டி

வீதங்கள் 2013ஆம் ஆண்டுப் பகுதியில் இரு தடவைகளில் 100 அடிப்படை புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. மேயில் 50 அடிப்படை புள்ளிகளினால் கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டமைக்கு, குறுங்கால சந்தை வட்டி வீதங்கள் உடனடியான பதிலிறுப்பினை காட்டியபோதும் ஆண்டின் முதலரைப்பகுதியில் சந்தை கடன் வழங்கல் வட்டி வீதங்களுக்கு ஓரளவு நெகிழ்ச்சியற்ற தன்மையை கொண்டிருந்தன. இதன் விளைவாக, கொள்கை வட்டிவீதங்கள் 2013 ஒத்தோபரில் மேலும் ஒரு 50 அடிப்படை புள்ளிகளினால் தளர்த்தப்பட்டன. அதேநேரம், கொள்கை வட்டி வீதங்களின் குறைப்பிற்கு வசதியளிக்கும் பொருட்டும் வர்த்தக வங்கிகளின் வைப்பு மற்றும் கடன் வழங்கும் வீதங்களுக்கமிடையிலான வீழ்ச்சினை குறைப்பதற்குமாக மத்திய வங்கி அதன் நியதி ஒதுக்கு விகிதத்தினை 2 சதவீதத்தினால் 6 சதவீதத்திற்கு 2013 யூலையிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் குறைந்தது. இந் நாணய கொள்கை முறைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் சந்தை கடன் வழங்கும் விதங்கள் குறிப்பிடதக்களவில் வீழ்ச்சியடைந்த போதும் கொடுகடன் வளர்ச்சியின் வேகம் எறிவுகளுக்கும் கீழேயே காணப்பட்டது.

**நாணய கொள்கை தளர்த்தல்களுடன் உடன் இசைந்து செல்லும் விதத்தில் உள்நாட்டு பணச்சந்தையில் ரூபாவின் திரவத் தன்மை குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்வடைந்து ஆண்டு முழுவதும் மிகையாக காணப்பட்டது.** இவ்வாண்டுப் பகுதியில் ரூபாவின் திரவத்தன்மை மிகை சராசரியாக ஏறத்தாழ ரூ.23 பில்லியனாக காணப்பட்டது. உரிமம் பெற்ற வங்கிகளினால் பன்னாட்டு முறிகள் வழங்கப்பட்டமையின் காரணமாக செழிப்பான முலதன உட்பாய்ச்சல், பல உள்நாட்டு கம்பனி படுகடன்களில் ஏற்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் பங்குடமை முலதனத்தின் வழங்கல் அதனைத் தொடர்ந்து மத்திய வங்கியினால் இந்நிதியங்கள் ஈர்த்துக் கொள்ளப்பட்டமை

**வரைபடம் 1.9** அரச படுகடன் (மொ.உ.உ. இன் சதவீதமாக)





உள்நாட்டு திரவத்தன்மையை அதிகரித்தன. 2013 யூலையில் நியதி ஒதுக்கீடு தேவைப்பாடு குறைக்கப்பட்டமையுடன் சந்தைக்கு விடுவிக்கப்பட்ட மேலதிக திரவத்தன்மை ஏறத்தாழ ரூ.48 பில்லியனாக காணப்பட்டது. மத்திய வங்கி மிகையான திரவத்தனமையினை ஓரிரவு ஏலங்களின் ஊடாக தொடர்ச்சியாக ஈர்த்துக் கொண்டது. மூன்றாம் காலாண்டு தொடக்கம் திரவத் தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கு நீண்ட கால அடிப்படையில் கிரமமான கால மீள்கொள்வனவு ஏலங்கள் நடாத்தப்பட்டன. இத்திரவத் தன்மையினை ஈர்த்துக் கொள்ளும் இவ்வழிமுறைகளானது மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகளின் மூலதனம் பூரணப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் இவ்வாண்டுப் பகுதியில் பெரும்பாலும் முழுமையாக இல்லாமல் போய்விட்டன. ஆகவே, மத்திய வங்கி திறந்த சந்தை தொழிற்பாடுகளின் ஊடாக திரவத் தன்மையை ஈர்த்துக் கொள்வதற்காக கடன்பட்ட பிணையங்களை பயன்படுத்திக்கொண்டது.

**தனி ஒற்றை இலக்க மட்டத்தில் பணவீக்கத்தினைப் பேணுகின்ற கவனத்துடன், நாணயக் கொள்கை நடத்தை, தொழிற்பாட்டு இலக்காக ஒதுக்குப் பணத்தையும் இடையீட்டு இலக்காக விரிந்த பணத்தையும் கொண்ட நாணய இலக்கிடல் கட்டமைப்பினைத் தொடர்ந்தும் அடிப்படையாகக் கொண்டிருக்கும்.** விரிந்த பணமானது ($M_{2b}$) ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட எறிவு செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 7.5 சதவீதத்துடனும் 7.0 சதவீதம் கொண்ட மொ.உ.உற்பத்திச் சுருக்கியுடனும் இசைந்து செல்லும் விதத்தில் 2013ஆம் ஆண்டுப் பகுதியில் 15 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது. ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சி 16.5 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டமைக்கு 2012ஆம் ஆண்டில் ஒதுக்குப் பணத்தில் காணப்பட்ட தாழ்ந்த வளர்ச்சியின் தளத் தாக்கமே காரணமாகும். எனினும், 2013 யூலை 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்த நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் குறைப்பு, இலக்கிடப்பட்ட பாதையுடன் சேர்த்து விரிந்த பணத்தினைப் பேணுவதற்கு ஆண்டின் எஞ்சிய பகுதிக்காக எறிவு செய்யப்பட்ட ஒதுக்குப் பணப் பாதைக்காக கீழ் நோக்கிய திருத்தத்தினை அவசியமாக்கியது. ஆண்டின் முதலரைப் பகுதியில் ஏறத்தாழ சராசரியாக 10.7 சதவீதமாகவிருந்த ஒதுக்குப் பணத்தின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் குறைப்புடன் எதிர்காலத்திற்கு நேரெதிராக மாறியதுடன் ஆண்டிற்கான திருத்தப்பட்ட சராசரி எறிவான 5.5 சதவீதத்திற்குள் அமைந்திருந்தது. விரிந்த பணத்தின் வளர்ச்சி 2012 இறுதியின்

17.6 சதவீதத்திலிருந்து 2013 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 16.7 சதவீதத்திற்கு மிதமடைந்து, இவ்வாண்டுப் பகுதியில் 16.5 சதவீதம் கொண்ட சராசரியில் காணப்பட்டது.

**வங்கித்தொழில் துறையின் சொத்துக்களினது நியதிகளில், அரச துறைக் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு விரிந்த பணத்தின் விரிவாக்கத்திற்குப் பங்களித்த வேளையில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் மிதமானதாகக் காணப்பட்டது.** அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் 2013இல் ரூ.256 பில்லியனினால் அதிகரித்தமைக்கு வங்கித்தொழில் துறையின் அரச பிணையங்களின் உடைமைகள் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்த வேளையில் அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் அதிகரிததன. எனினும், வர்த்தக வங்கிகளினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட உயர்ந்த கொடுகடனின் விரிவுத்தாக்கம் மத்திய வங்கி அதன் திறைசேரி உண்டியல் உடைமையை விற்பனை செய்தமையின் மூலம் ஏறத்தாழ ரூ.163 பில்லியனால் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டது. அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2012இன் ரூ.94 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.72.6 பில்லியனாகக் காணப்பட்டமைக்கு இரண்டு முக்கிய அரசிற்குச் சொந்தமான முயற்சிகளினால் செய்யப்பட்ட இடைக்கால மீள்கொடுப்பனவுகளே காரணமாகும். வர்த்தக வங்கிகளிலிருந்து தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சி இவ்வாண்டுப் பகுதியில் கரிசனைக்குரியதொன்றாகக் காணப்பட்டது. சந்தைக் கடன் வழங்கல் வீதங்களில் காணப்பட்ட மந்தமான கீழ் நோக்கிய சீராக்கங்கள் மற்றும் உண்மையான நியதிகளில் அடகுபிடித்தல் முற்பணங்களில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலதனச் சந்தைகளை அதிகரித்தளவில் அணுகக் கூடியதாக இருந்தமையும் தனியார் துறையிலிருந்து வங்கிக் கொடுகடனுக்கான கேள்வி வீழ்ச்சியடைவதற்குப் பங்களித்தது. 2013 இறுதியில், தனியார் துறைக்கான கொடுகடனின் ஆண்டிற்காண்டு வளர்ச்சி 2012 இறுதியில் அவதானிக்கப்பட்ட 17.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.5 சதவீதமாகக் காணப்பட்டது. 2013இல் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட குறைப்பு காரணமாக இருந்த வேளையில் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தன. வெளிநாடுகளிலிருந்து திரட்டப்பட்ட நிதியங்கள் பின்னர் உள்நாட்டுச் சொத்துக்களில்

வரைபடம் 1.10 தனியார் துறைக்கான பண மற்றும் கொடுகடனின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி




முதலீடு செய்யப்படும் பொழுது வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடையப் பங்களித்தன. இவ்வாண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிலிருந்து மாற்றமடைந்ததுடன் 2013இன் இறுதியில் ரூ.132.7 பில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய ஈர்ப்பு, உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் கொடுக்கல்வாங்கல்கள் அதேபோன்று வர்த்தக வங்கிகளுடனான வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்களைத் தொடர்ந்து ஆண்டின் பிற்பகுதியில் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தன.


**கொள்கை வட்டி வீதங்களில் செய்யப்பட்ட குறைப்பு மற்றும் பணச் சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மை என்பன இவ்வாண்டுப் பகுதியில் சந்தை வட்டி வீதங்கள் கீழ் நோக்கிச் சீராக்கப்படுவதற்கு வசதியளித்தது.** குறுங்காலச் சந்தை வட்டி வீதங்கள் கடுமையாகச் சீராக்கப்பட்ட போதும் நீண்ட கால வீதங்களின் சீராக்கங்கள் மெதுவாகக் காணப்பட்டன. யூன் இறுதி வரை கொள்கை வட்டி வீத வீச்சின் ஏறத்தாழ மேல் எல்லையில் தளம்பலுற்றிருந்த சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதங்கள் படிப்படியாக வீச்சின் மையப் பகுதியை நோக்கி நகர்ந்து இவ்வாண்டுப் பகுதியில் 214 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் 2013இல் 427 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் அனைத்து முதிர்ச்சிகளுக்குமான விளைவு வீழ்ச்சியடைந்ததுடன் இதே மாதிரியான தன்மையானது, அரச பிணைங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்களில் காணப்பட்ட கீழ் நோக்கிய பெயர்வில் பிரதிபலிக்கப்பட்டவாறு,

இரண்டாந்தரச் சந்தையில் அவதானிக்கப்பட்டது. 2013இல் வர்த்தக வங்கிகள் அவற்றின் வைப்பு வீதங்களையும் கடன் வழங்கல் வீதங்களையும் படிப்படியாகக் குறைத்தது. இதன்படி, சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் 2013இல் 80 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்த வேளையில் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதமும் இவ்வாண்டுப் பகுதியில் முறையே 73 அடிப்படைப் புள்ளிகளினாலும் 143 அடிப்படைப் புள்ளிகளினாலும் வீழ்ச்சியடைந்தன. மத்திய வங்கியின் கடன் வசதிகளை வழங்குகின்ற நாணயக் கொள்கை நிலையினால் வட்டி வீதங்களின் வீழ்ச்சியடைந்து செல்லும்போக்கு 2014 இலும் தொடர்ந்ததுடன், துணைநில் வீச்சானது, 2014 சனவரியில் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் 50 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டதன் மூலம் ஒடுக்கப்பட்டது.

## நிதியியல் துறை அபிவிருத்திகள்

**நிதியியல் துறை மீளெழுச்சி கொண்டதாக விளங்கியதுடன் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளிப்பதற்காக முதலீடுகளுக்கும் நிதியியல் தேவைகளுக்கும் வசதியளிக்கப்படுகின்றது.** இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினை முக்கிய கவனத்தில் கொண்டு, மத்திய வங்கி மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கொள்கையினூடாக நிதியியல் துறையின் வீரியத்தினையும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினையும் தொடர்ந்தும் உறுதிப்படுத்தியதுடன், வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரத்தின் தோற்றம் பெற்றுவரும் தேவைகளுக்குப் பணிகளை வழங்கும் விதத்தில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் என்பனவற்றை உள்ளடக்கிய உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வியாபார மாதிரிகளையும் செயன்முறைகளையும் அளவிடுகின்றது. 2013ஆம் ஆண்டின் பெரும்பாலான காலப்பகுதியில் நிதியியல் சந்தைகள் திரவத்தன்மையுடன் காணப்பட்டதுடன் சந்தை வட்டி வீதங்கள் படிப்படியாக கீழ் நோக்கிச் சீராக்கப்பட்டன. பன்முகப்படுத்தப்பட்ட கடன் வழங்கல் சொத்துப்பட்டியல், வலுவான மூலதனம் மற்றும் திரவ தாங்கிருப்பு என்பனவற்றைப் பரிசீலனையில் கொள்கையில், நிதியியல் நிறுவனங்கள் தொடர்ந்தும் ஆற்றல் வாய்ந்ததாக விளங்கின. உலகளாவிய நிதியியல் சந்தைகளில் தளம்பல்கள் காணப்பட்டமைக்கிடையிலும் தொடர்ச்சியான முதலீட்டாளர் நம்பிக்கையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கொழும்பு பங்குச் சந்தைக்கான உட்பாய்ச்சல்கள் வலுவானதாகக் காணப்பட்ட வேளையில் அரச பிணையங்கள் சந்தையும் குறிப்பிடத்தக்க மூலதன உட்பாய்ச்சலை எடுத்துக்காட்டின. உள்நாட்டுக் கம்பனி படுகடன் சந்தையும் முன்னொருபோதுமில்லாத எண்ணிக்கையிலான நீண்ட கால படுகடன் சாதனங்களை வழங்கியதன் மூலம் உயரத் தொடங்கியது. மத்திய வங்கியும் கொடுப்பனவு உட்கட்டமைப்பின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக பல வழிமுறைகளை மேற்கொண்டது. இவ்வாண்டுப் பகுதியில் மத்திய வங்கி நிதித் துறையினை ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத் திட்டமொன்றினை வெளியிட்டதுடன் இது வலுவான, இயக்கவாற்றல் மிக்க பன்னாட்டு ரீதியில் போட்டித்தன்மை மிக்க நிதியியல் துறையொன்றினை எல்லைகள் கடந்த இணைப்புக்களுடனும் குறிப்பிடத்தக்க வெளிநாட்டுப் பிரசன்னத்துடனும் கட்டியெழுப்புகின்ற இலக்குடன் வடிவமைத்தது.

**வரைபடம் 1.11 கொள்கை வட்டி வீத வீச்சு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்**




**முக்கிய செயலாற்ற குறிகாட்டிகளின் நியதிகளில் நிதியியல் துறை விரிவடைந்ததுடன் நிதியியல் நிறுவனங்களின் ஆற்றலும் மேம்பட்டது.** 2013ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கித்தொழில் துறை, வியாபார அளவு மற்றும் பாரிய செயல் விளைவு ஆகிய இரு நியதிகளிலும் விரிவடைந்தது. மேல் மாகாணத்திற்கு வெளியே கிளைகளைத் திறப்பதற்கு செய்யப்பட்ட வலியுறுத்தல்கள், நிதியியல் பணிகளை பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகள் அதிகரிக்கப்பட்டமை மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சி வலியுறுத்தப்பட்டமை என்பனவற்றுடன் 2013இல் வங்கித்தொழில்துறையின் கிளை வலையமைப்பு மேலும் விரிவடைந்தது. தொடர்ச்சியான இறைத்திரட்சி அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்தங்கள் மற்றும் தங்கத்தினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட முற்பணங்களுக்கான வெளிப்படுத்துகைகளில் குறைப்பு என்பனவற்றிற்கிடையிலும் வங்கிகளின் கொடுகடன் வளர்ச்சி இவ்வாண்டுப் பகுதியில்

மிதமடைந்தது. ஆரோக்கியமான மூலதனம் மற்றும் திரவத்தன்மை மட்டங்கள், மேம்பட்ட முகாமைத்துவ வினைத்திறன் மற்றும் சிறந்த ஆளுகை நடைமுறைகள் என்பன வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேலும் வலுப்படுத்தியது. மூலதன வடிவில் காணப்பட்ட போதுமான மூலவளங்களின் போதுமான கிடைப்பனவினை கவனத்தில் கொள்கையில், இவ்வாண்டுப் பகுதியில் செயற்படாக் கடன்களின் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் வங்கித்தொழில் துறையின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைப்படுத்தக்கூடிய மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையின் சொத்துக்கள் அதிகரித்ததுடன் வங்கில்லா நிதியியல் துறையின் கிளை வலையமைப்பும் வரிவடைந்தது. 2013இல் சொத்துக்களின் வளர்ச்சி, மூலதனம் மற்றும் இலாபத்தன்மை ஆகிய நியதிகளில் முதனிலை வணிகர்களின் செயலாற்றம் அதிகரித்தது. விளைவு வளையியில் ஏற்பட்ட படிப்படியான கீழ் நோக்கிய பெயர்வு முதனிலை வணிகர்கள் தமது வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் மீது மூலதன இலாபங்களை ஈட்டிக் கொள்ள அவர்களை இயலச் செய்ததன் மூலம் அத்துறையின் இலாபத்தன்மையினை அதிகரிக்கச் செய்தது. இத்துறையில் போட்டித்தன்மையினை அதிகரிக்கும் நோக்குடன், தனியான முதனிலை வணிகர்களுக்கு ஏற்புடைத்தான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடாக குறைந்தபட்ச மூலதனத்தினைப் பேண வேண்டும் என்ற தேவைப்பாடு இல்லாமல் அரச பிணையங்களில் முதனிலை வணிகர்கள் தொழிற்படுவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கி, மத்திய வங்கி அனுமதியளித்தது. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் 16 புதிய நிதியங்கள் உருவாக்கப்பட்டதுடன் கூறுநம்பிக்கை தொழில் விரிவடைந்ததுடன், துறையின் இலாபத்தன்மையும் இத்துறைக்கு வழங்கப்பட்ட வரிச்சான்றுகளுடன் அதிகரித்தது. காப்புறுதிக் கம்பனிகளும் மொத்தச் சொத்துக்கள், காப்புறுதிக் கட்டுப்பணம், முதலீட்டு வருமானம் மற்றும் இலாபத்தன்மை போன்ற முதனிலைக் குறிகாட்டிகளின்படி அவற்றின் ஆற்றல்வாய்ந்த தன்மையினைப் பேணியதுடன் இவ்வாண்டுப் பகுதியில் மேல் நோக்கிய போக்கினையும் பதிவு செய்தது. சொத்துக்கள், முகாமைத்துவத்தின் கீழ் நன்கு செயலாற்றியதுடன் ஓய்வு நிதியத்துறையின் உறுப்புரிமையும் 2013ஆம் ஆண்டுப் பகுதியில் மேலும் விரிவடைந்தது. தனியார் துறைக்கான முக்கிய ஓய்வுகால நன்மைகள் நிதியமான ஊ.சே.நிதியம், ஊ.சே. நிதியத்தின் காத்திரமானதும் முன்மதியுடையதுமான முகாமைத்துவத்தினூடாக 2013 இறுதியில் வருமானத்தினை உருவாக்கிக்க கொண்டதுடன் நிதியத்தின் மொத்தப் பெறுமதி ரூ.1,300 பில்லியனுக்கு 13.6 சதவீதத்தினால் அதிகரித்தது.

**உள்நாட்டு நிதியியல் சந்தைகள் 2013இல் திரவத்தன்மை கொண்டனவாகவும் உறுதியாகவும் காணப்பட்டன.** 2013இன் பெரும்பாலான காலப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மை மிகை நிலையில் காணப்பட்டது. உள்நாட்டுப் பணச் சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மைக்கு பதிலிறுத்தும் விதத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதங்கள் இவ்வாண்டுப் பகுதியில் கீழ் நோக்கிச் சீராக்கப்பட்டதுடன் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் வீச்சின் நடுப்பகுதியை நோக்கி படிப்படியாக நகர்ந்ததன் மூலம் நாணயக் கொள்கை பரிமாணத்தின் காத்திரமான தன்மைக்கு வசதியளிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வர்த்தகப் பத்திரங்களுக்கான சந்தை குறைந்த சுறுசுறுப்புடன் காணப்பட்டது. கம்பனி முறிகள் சந்தையில் வழங்கப்பட்ட தொகுதிக் கடன்களின் பெறுமதியும் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமையின் காரணமாக தொகுதிக் கடன்களுக்கான சந்தையின் நடவடிக்கை மட்டம் அளவுக்கதிகமாக அதிகரித்தது. கம்பனிப் படுகடன் வழங்கலுக்காக 2013ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத்திட்டத்தில் வழங்கப்பட்ட வரி விலக்கல்கள் இவ்வாண்டுக் காலப்பகுதியில் தொகுதிக் கடன்களின் வழங்கல்களில் ஏற்பட்ட குறிப்பிடப்பட்ட அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக அமைந்தது. தொடர்ந்து இரண்டாண்டு காலம் பதிவு செய்யப்பட்ட மந்தமான செயலாற்றத்தினைக் கருத்திற்கொள்கையில், அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண்ணும் கொழும்பு பங்குச் சந்தையின் ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் சிறிலங்கா 20 சுட்டெண்ணும் 2013இல் இலாபங்களைப் பதிவு செய்தன. இவ்வாண்டுப் பகுதியில் உள்நாட்டு வட்டி வீதங்களில் ஏற்பட்ட கீழ் நோக்கிய போக்கு ஒப்பீட்டு ரீதியில் உறுதியான செலாவணி வீதம், உலகளாவிய பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி உள்நாட்டுப் பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றத்தின் மீது கொண்டிருந்த சாதகமான தாக்கம் என்பன பங்குச் சந்தைச் செயலாற்றத்திற்கு உதவிய காரணிகளாகும். வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய உட்பாய்ச்சலை விளைவித்த நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அதிகரித்த பங்கேற்பு முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்களின் நாணயம் கொள்கைகளுக்கான தோற்றப்பாட்டின் நோக்கம் பல பிராந்திய சந்தைகளில் காணப்பட்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களின் பின்னணியில் இது முக்கியமானதொரு அம்சமாகும்.

**நிதியியல் துறையுடன் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மற்றும் மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்தல் அமைப்பு என்பன 2013இல் மேலும் வலுப்படுத்தப்பட்டன.** பாசல்

II மூலதன உடன்படிக்கைக்கிணங்கவும் புதிய இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் என்பனவற்றிற்கிணங்க வெளிப்படையான தன்மை மற்றும் ஒப்பீட்டுத்தன்மை என்பனவற்றை உயர்த்தும் நோக்குடன் வெளிப்படுத்துகை தேவைப்பாடுகளை உயர்த்துவதற்காகவும் வங்கிகளுக்கான மேற்பார்வை மீளாய்வு செயன்முறைப்படுத்தலின் நடைமுறைப்படுத்தல் உட்பட, வங்கித்தொழில் துறையின் உள்ளார்ந்த இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்காக பல ஒழுங்குவிதிகளை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. வங்கியல்லாத நிதித் துறையில் மத்திய வங்கி கடன் வசதிகளைப் பதிவழிப்பது தொடர்பான முன்னொப்புதலை எதிர்பார்க்கின்றமை தொடர்பில் தொடர்பான தரப்பினருக்கு பணிப்புரைகளை விடுத்ததுடன் நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட படுகடன் சாதனங்கள் தொடர்பில் குறிப்பாக திரவத்தன்மை மற்றும் வட்டி வீதங்கள் போன்ற துறைகளைக் கையாள்வதற்காக மேற்பார்வைக் கட்டமைப்பொன்றினையும் அறிமுகப்படுத்தியது. பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்த வசதியளிப்பதற்ககவும் அதேபோன்று ஈர்ப்பு தொடர்பான இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கான அதன் இயலாற்றலை வலுப்படுத்துவதற்காகவும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் இயலாற்றலைக் கட்டியெழுப்பும் விதத்தில் மத்திய வங்கி பல வழிமுறைகளைப் பின்பற்றியது. இவ்வழிமுறைகளிடையே முக்கியமானவைகளாக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் ஒருங்கிணைப்பினை மேம்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காணப்படுகின்றன. இவ்வழிமுறைகள் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பாதுகாத்துக் கொள்ளக்கூடியனவாக விளங்கிய வேளையில் எதிர்காலத்தில் பொருளாதார நடவடிக்கையின் விரிவாக்கத்திற்கு தொடர்ந்தும் வசதியளிக்கின்றது.

**வினைத்திறனின் அதிகரிப்பு, பாதுகாப்பு மற்றும் தேசிய கொடுப்பு முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மை என்பன தொடர்பில் 2013இல் நாட்டின் கொடுப்பனவு உட்கட்டமைப்பில் மேலும் மேம்பாடு காணப்பட்டது.** தேசிய கொடுப்பனவு முறைமையின் மாற்றமடைந்து வருகின்ற இடர்நேர்வுகளைக் கருத்தில் கொண்டும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை அபிவிருத்திக்கு வழிகாட்டல்களையும் ஆதரவினையும் வழங்குவதற்காகவும் மத்திய வங்கி 2013இல் நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை நிருவகிக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் திருத்தியது. மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்பட்ட லங்கா செட்டில் முறைமை தொடர்பான முறைமை விதிகள் பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க இற்றைப்படுத்தப்பட்டன. தேசிய கொடுப்பனவு முறைமையின் ஒழுங்குமுறைப்படுத்துநர் என்ற அதன் பொறுப்புக்களை நிறைவேற்றும் விதத்தில் மத்திய வங்கி, உறுதிப்பாட்டினை அதிகரித்தல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் என்பனவற்றின் பொருட்டு, ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டமைப்பினை மேலும் ஒழுங்குமுறைப்படுத்துதல் தொடர்பில் அதன் கவனத்தினை மேலும் ஊன்றிச் செலுத்தியது. கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பில் புதிய ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. இவ்வாண்டுப் பகுதியில் கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குவோராக தொழிற்படுவதற்கு மூன்று நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்ட வேளையில் தொலைத்தொடர்பூட்டல் வலையமைப்புத் தொழிற்பாட்டாளர்களும் செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமையின் தொழிற்பாட்டிற்கான உரிமங்களையும் வழங்கினர்.

## 1.3 உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும்

**ஆண்டின் பிற்பகுதியில் அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளுக்கான உறுதியான அறிகுறிகள் தென்பட்டமைக்கிடையிலும் உலகளாவிய பொருளாதாரம் 2013இல் மெதுவான வேகத்திலேயே வளர்ச்சியடைந்தது.** விரிவடைந்த உள்நாட்டுக் கேள்வி, இலகுவான நிதியியல் சந்தை நிலைமைகள் மற்றும் மேம்பட்ட நுகர்வோர் மற்றும் வியாபார நம்பிக்கை என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டு குறிப்பாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்களில் பொருளாதார நடவடிக்கைகள் மேம்பட்டன. அதேவேளை, சில தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் வளர்ச்சியானது, அவற்றின் ஏற்றுமதிகளுக்கான மேம்பட்ட வளர்ச்சி வாய்ப்புக்கள் காணப்பட்டமைக்கிடையிலும் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவடைந்த உள்நாட்டுக் கேள்வியின் காரணமாக மெதுவடைந்தது. குறிப்பாக, தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்கள் உள்நாட்டுக் கேள்வியைப் பெருமளவிற்குக் கட்டுப்படுத்திய இறுக்கமான நிதியியல் நிலைமைகளைக் கொண்டிருந்ததுடன் பெரும்பாலான முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் மரபு ரீதியற்ற நாணயக் கொள்கைகள் மாற்றமடைந்தமையின் பின்னணியில் புதுப்பிக்கப்பட்ட சந்தை அழுத்தம் முதலீட்டாளர் மனோபாவத்தைப் பாதித்தது. தொழில்

உருவாக்கம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் உயர் பெறுமதிசேர் உற்பத்திக்கான பன்முகப்படுத்தல் போன்ற துறைகளில் பல்வேறு சவால்கள் காணப்பட்டமைக்கிடையிலும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் சாதகமான வளர்ச்சியைத் தொடர்ந்து பேணின.

**உள்ளார்ந்த உத்வேகம் உறுதியாகக் காணப்பட்டமைக்கிடையிலும், உலக வளர்ச்சி 2012இல் பதிவுசெய்யப்பட்ட 3.1 சதவீத வளர்ச்சியை விட சற்று குறைவாக 2013இல் 3 சதவீதமாக மதிப்பிடப்பட்டது.** முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் 2013இன் 1.3 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் இது 2012இல் பதிவு செய்யப்பட்ட 1.4 சதவீத வளர்ச்சியை விட சிறிதளவு குறைவாக இருந்தது. நுகர்வு, முதலீடு மற்றும் ஒன்றுசேர்ந்த இருப்புக்களிலிருந்தான உறுதியான பங்களிப்புக்களுக்கிடையிலும் ஐக்கிய அமெரிக்கா 2012இன 2.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 1.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, யூரோ பிராந்தியத்தில் நீண்ட காலம் நிலைத்திருந்த பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வந்தமையானது அதன் எதிர்மறையான பொருளாதார வளர்ச்சியை 2012இன் 0.7 சதவீதத்திலிருந்து 2013இல் 0.4 சதவீதத்திற்குக் குறைத்தது. யூரோ பிராந்தியத்தின் மீட்சிக்குக் குறிப்பாக ஜேர்மனியின் ஏற்றுமதி வளர்ச்சியும் வளர்ந்துவரும் உள்நாட்டுக் கேள்வியும் உதவின. ஐக்கிய இராச்சியம் இலகுவான கொடுகடன் நிபந்தனைகள் மற்றும் அதிகரித்த நம்பிக்கை என்பவற்றின் பயனாக 2012இன் 0.3 சதவீதத்திலிருந்து 2013இல் 1.7 சதவீதத்தினால் விரிவடைந்தது. யப்பானில் 2012 பிற்பகுதியிலிருந்து பின்பற்றப்பட்ட உறுதியான தூண்டுதலளிக்கும கொள்கைகளின் தொகுதி, பொருளாதார வளர்ச்சியை 2012இன் 1.4 சதவீதத்திலிருந்து 2013இல் 1.7 சதவீதத்திற்கு உயர்த்தியது. எனினும், 2014 ஏப்பிறலில் ஆரம்பித்து அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குத் திட்டமிடப்பட்ட நுகர்வு வரி வீதங்களிலான அதிகரிப்பு உள்ளிட்ட கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்களை இலக்காகக் கொண்ட மேலதிக வழிமுறைகள் யப்பானின் உள்நாட்டுக் கேள்வியைக் கட்டுப்படுத்தக்கூடும். அதேவேளை, தோற்றம் பெற்றுவரும் சந்தை அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களிலான வளர்ச்சி 2012இன் 4.9 சதவீதத்திலிருந்து 2013இல் 4.7 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. சீனாவில், குறிப்பாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் காணப்பட்ட உறுதியான உள்நாட்டுக் கேள்வியினால் ஆதரவளிக்கப்பட்டு வளர்ச்சி முன்னைய ஆண்டினைப் போன்றே 2013இலும் 7.7 சதவீதமாகக் காணப்பட்டது. இந்தியாவின் நடவடிக்கைகளும் கூட சாதகமான பருவமழைக்காலம் மற்றும் உயர் ஏற்றுமதி வளர்ச்சியின் விளைவாக 2012இன் 3.2 சதவீதத்திலிருந்து 2013இல் 4.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து அதிகரித்தன. எனினும், ஏனைய நாடுகளுள் ருஷியா, தென்னாபிரிக்கா மற்றும் மெக்சிக்கோ போன்ற ஏனைய முக்கிய தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்கள் 2013இல் குறிப்பிடத்தக்களவில் நலிவடைந்து பிராந்தியங்களுக்கிடையிலான உறுதியற்ற மீட்சியைப் பிரதிபலித்தது. லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் பிராந்தியங்கள் அதேபோன்று மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கப் பிராந்தியங்களின் வளர்ச்சி 2012இன் முறையே 3.0 சதவீதம் மற்றும் 4.1 சதவீதத்திலிருந்து 2013இல் 2.6 சதவீதம் மற்றும் 2.4 சதவீதத்திற்கு மெதுவடைந்தது.

**2013இல் முக்கியமான மத்திய வங்கிகளின் நாணயக் கொள்கையானது நீண்ட காலச் சொத்துக்களின் பாரியளவிலான கொள்வனவு மற்றும் கொள்கைக் கருவியொன்றாக "முன்னோக்கிய வழிகாட்டல்" இன் பயன்பாடு என்பவற்றுடன் தொடர்பான அபிவிருத்திகளினால் பெரும்பாலும் எடுத்துக்காட்டப்பட்டது.** 2014 இறுதிக்கு முன்னர் ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் இன் தூண்டுதலளிக்கும் முயற்சிகளை படிப்படியாகக் குறைக்கும் நோக்குடன் ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் வங்கி அதன் ஐ.அ.டொலர் 85 பில்லியன் பெறுமதியான மாதாந்த முறிக் கொள்வனவில் 2014 சனவரியிலிருந்து ஐ.அ.டொலர் 10 பில்லியன் குறைப்பை 2013 திசெம்பரில் அறிவித்தது. 2014 பெப்புருவரியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஐ.அ.டொலர் 10 பில்லியன் மேலதிகக் குறைப்பொன்றும் அதைத் தொடர்ந்து 2014 ஏப்பிறலிலிருந்து நடைமுறைக்குவரும் அதேயளவிலான இன்னொரு குறைப்பும் செயற்படுத்தப்படவுள்ளது. அதேவேளை, 2014 சனவரியளவில் கொள்வனவு செய்யப்பட்ட ஸ்ரேலிங் பவுண் 375 பில்லியன் பெறுமதியான சொத்துக்களின் இருப்புடன் இங்கிலாந்து வங்கி அதன் கணியம்சார் தளர்த்தல் கொள்கையைத் தொடர்ந்தும் பேணியது. அதேநேரம், ஐரோப்பிய மத்திய வங்கி பொருளாதார நடவடிக்கைகளிலான எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைந்த வளர்ச்சியை மாற்றும் பொருட்டு பிரதான மீள்நிதியிடல் தொழிற்பாடுகள் மீதான வட்டி வீதத்தை 0.5 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதத்திற்குக் குறைத்ததன் மூலம் அதன் கடன் வசதிப்படுத்தல் நாணயக் கொள்கையினைத் தொடர்ந்தது. அத்துடன் யப்பான் வங்கி ஏறத்தாழ 60 - 70 றில்லியன் யென் என்ற ஆண்டு வேகத்தில் அதன் சொத்துக் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்ந்தது. உறுதியான விலைகளைப் பேணுதல் மற்றும் அதிகபட்சத் தொழில் வாய்ப்பு

**அட்டவணை 1.4 வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகளும் தோற்றப்பாடும் (அ)**

| விடயம் | 2011 | 2012 | 2013 (மதிப்பீடுகள்) | 2014 (எறிவுகள்) |
|---|---|---|---|---|
| **உலக வெளியீடு** | **3.9** | **3.1** | **3.0** | **3.7** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 1.7 | 1.4 | 1.3 | 2.2 |
| ஐக்கிய அமெரிக்கா | 1.8 | 2.8 | 1.9 | 2.8 |
| யூரோ பகுதி | 1.5 | -0.7 | -0.4 | 1.0 |
| ஐக்கிய இராச்சியம் | 1.1 | 0.3 | 1.7 | 2.4 |
| யப்பான் | -0.6 | 1.4 | 1.7 | 1.7 |
| தோற்றம்பெற்று வரும், அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 6.2 | 4.9 | 4.7 | 5.1 |
| அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 7.8 | 6.4 | 6.5 | 6.7 |
| சீனா | 9.3 | 7.7 | 7.7 | 7.5 |
| இந்தியா | 6.3 | 3.2 | 4.4 | 5.4 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | **6.1** | **2.7** | **2.7** | **4.5** |
| இறக்குமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 4.7 | 1.0 | 1.4 | 3.4 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 8.8 | 5.7 | 5.3 | 5.9 |
| ஏற்றுமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 5.7 | 2.0 | 2.7 | 4.7 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 6.8 | 4.2 | 3.5 | 5.8 |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 2.7 | 2.0 | 1.4 | 1.7 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 7.1 | 6.0 | 6.1 | 5.6 |
| பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொ.) | | | | |
| எண்ணெய் | 31.6 | 1.0 | -0.9 | -0.3 |
| எண்ணெய் அல்லாதவை | 17.9 | -10.0 | -1.5 | -6.1 |
| **ஐ.அமெ. வைப்புக்கள் மீதான ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கு இடையிலான வழங்கல் வீதம் (சதவீதம்)** | **0.5** | **0.7** | **0.4** | **0.4** |

(அ)வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம். மூலம்: உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (சன 2013 மற்றும் செத் 2012), ப.நா.நிதியம்

மற்றும் 2 சதவீத பணவீக்கம் ஆகிய குறிக்கோள்களை அடைவதன் முன்னேற்றத்தின் அடிப்படையில் கொள்கை வீதங்களை குறைந்த மட்டத்தில் பேணுவதற்கான கடப்பாட்டை முன்னோக்கிய வழிகாட்டலில் பெடரல் றிசேர்வ் வலியுறுத்தியது. நீண்ட காலத்தில் 2 சதவீதம் கொண்ட பணவீக்கம் மற்றும் 6.5 சதவீதம் கொண்ட தொழிலின்மை வீதம் பெடரல் நிதியினை திரட்டுவதற்கான அளவுப்புள்ளியொன்று நிர்ணயிக்கப்பட்டது. எனினும், தொழிலின்மை வீதம் அடைவுமட்டங்கள் இலக்கிடப்பட்ட வீதத்திற்கு மிக அணித்தாகக் காணப்பட்டது. றிசேர்வ், குறைந்த வட்டி வீத அமைப்பு தொடர்வதனைத் தேவைப்படுத்துகின்ற பொருளாதார நிலையையொன்றாக அதன் முன்னோக்கிய வழிகாட்டல்களை இற்றைப்படுத்தியது. திருத்தியமைக்கப்பட்ட முன்னோக்கிய வழிகாட்டல் நிலைகள் தொழிலாளர் சந்தை நிலைமைகள், பணவீக்க அழுத்தக் குறிகாட்டிகள் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் போன்ற பரந்தளவிலான குறிகாட்டிகளை உள்ளடக்கியதுடன் நிதியியல் சந்தைகளின் அபிவிருத்தி இதன் பொருளாதாரத்தின் மதிப்பீடாக இருக்கிறது. இங்கிலாந்து வங்கியின் முன்னோக்கிய வழிகாட்டலானது, தொழிலின்மை வீதம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவாக வீழ்ச்சியடைந்தமைக்கிடையில், தொழிலின்மை வீதத்திற்கு மேலதிகமாக ஏனைய பலதரப்பட்ட வழிமுறைகளையும் வங்கி கண்காணிக்குமென்பதை குறித்துக்காட்டுவதற்காக, தொழிலின்மை வீதம் அளவுமட்டமான 7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையும் வரையாவது வங்கி வீதத்தை 0.5 சதவீத மட்டத்திலிருந்து உயர்த்துவதில்லை எனக் குறித்துரைத்த முன்னைய நிலையிலிருந்து சிறிது மாற்றப்பட்டது. அதேவேளை, ஐரோப்பிய மத்திய வங்கி ஏற்கனவேயிருக்கும் கடன் வசதிப்படுத்தல் கொள்கை நிலைக்கான எண்ணியல் இலக்கை குறித்துரைக்காமல் தற்போதிருக்கும் கொள்கை நிலையான குறைந்த வட்டி வீதக் கட்டமைப்பை நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்குப் பேணியது. யப்பான் வங்கி நுகர்வோர் விலைச்சுட்டெண் பணவீக்க வீதம் 2 சதவீத இலக்கை அடையும் வரை நாணயத் தளர்த்தலைத் தொடரும் நிலையைப் பேணியது. மாறாக தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களின் மத்திய வங்கிகள் நாணயக் கொள்கையைத் தீர்மானிப்பதில் தெளிவாகத் தெரியக்கூடிய பொதுவான போக்கைக்காட்டவில்லை. முக்கிய மத்திய வங்கிகளின் கணியம்சார் தளர்த்தலின் மாற்றங்கிலிருந்தான கசிவுத்தாக்கங்களுக்கான பதிலிறுப்புக்கள், செலாவணி வீதங்களிலான தளம்பல்கள், மூலதன உட்பாய்ச்சல்களின் நிச்சயமற்றதன்மை மற்றும் பணவீக்கம், தொழிலின்மை மற்றும் வளர்ச்சியிலான அசைவுகள் உள்ளிட்ட அவற்றால் எதிர்நோக்கப்பட்ட சவால்களுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சில நாடுகள் நாணயக் கொள்கையை இறுக்கமாக்கிய அதேவேளை சில நாடுகள் நாணயக் கொள்கையைத் தளர்த்தின.

**முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் பாதுகாப்பான நிதியியல் துறைக்கு நகர்வதற்காக முயற்சியெடுக்கும் அதேவேளை, தோற்றம் பெற்றுவரும் சந்தைகள் கூடிய தளம்பலுள்ள வெளிநாட்டு நிலைமைகள் மற்றும் உயர் இடர்நேர்வு மிகை மதிப்புக்களின் இடர்நேர்வை எதிர்நோக்குவதனால் உலகளாவிய நிதியியல் முறைமை தொடர்ச்சியான மாற்றத்திற்குட்பட்டு வருகின்றது.** முக்கிய மத்திய வங்கிகள் நீண்ட காலச் சொத்துக்களின் கொள்வனவை ஒடுக்கும் என்ற எதிர்பார்ப்பு தோற்றம் பெற்றுவரும் சந்தைகளில் சொத்துக்களின் விலைகளிலான அசைவைத் தூண்டியதுடன் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களில் சொத்துப்பட்டியல் மீள் ஒதுக்கத்திற்கும் மூலதன வெளிப்பாய்ச்சல்களுக்கும் வழிவகுத்தது. 2013 மேயில் ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் அதன் முறி கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் சாத்தியமான குறைப்பை அறிவித்ததைத் தொடர்ந்து வந்த இரண்டு

வாரங்களில் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான முறிகள் மீதான விளைவுக்கும் முக்கிய அபிவிருத்தியடைந்த நாடுகளின் அரச முறிகள் மீதான அளவுத்திட்ட விளைவுக்குமிடையிலான வீச்சு 100 அடிப்படைப் புள்ளிகளை விடக் கூடியளவால் அதிகரித்தது. 2013ஆம் ஆண்டு காலத்தில் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களுக்காக தேறிய மூலதன உட்பாய்ச்சல்கள் 2012இன் ஐ.அ.டொலர் 1.3 றில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1.1 றில்லியனுக்கு 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருப்பதாக மதிப்பிடப்பட்டது. மூலதன உட்பாய்ச்சல்களுக்கான கீழ் நோக்கிய இடர்நேர்வானது, ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வின் ஒடுக்கும் அறிவிப்பினால் பகுதியளவு தூண்டப்பட்ட அதேவேளை, தேய்வடைந்த வளர்ச்சி வாய்ப்புக்கள் மற்றும் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலான பேரண்டப் பொருளாதார சமநிலையற்ற தன்மையும் மூலதன உட்பாய்ச்சல்களின் வீழ்ச்சிக்குப் பங்களித்தன. அதேவேளை, கூடியளவு ஊக்கமளிக்கும் அரச கொள்கைகளால் ஆதரவளிக்கப்பட்டு சீனா அதன் வெளிமுக நேரடி முதலீட்டை அதிகரித்ததனால் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலிருந்தான தேறிய மூலதன வெளிப்பாய்ச்சல்கள் 2013இல் ஐ.அ.டொலர் 1.3 றில்லியனுக்கு ஏறத்தாழ 1.3 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டதுடன், பிரேசில், சிலி, கொலம்பியா, மெக்சிக்கோ மற்றும் பெரு போன்ற பல லத்தீன் அமெரிக்க பொருளாதாரங்கள் பெரும்பாலும் சொத்துப்பட்டியல் முதலீடுகள் வடிவில் வெளிமுக மூலதனப் பாய்ச்சல்களை அதிகரித்து அவற்றின் சொத்துக்கள் பன்னாட்டு ரீதியான பன்முகப்படுத்தப்பட வேண்டியதன் தேவையைப் பிரதிபலித்தது.

**உலகம் முழுவதும் நாணயக் கொள்கையின் மாற்றத்தின் எதிர்பார்ப்புக்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட ஆண்டான 2013 காலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகள் சில நாணயங்களில் உயர்ந்த தளம்பலை அனுபவித்தன.** யப்பானிய யென் குறிப்பாக ஆண்டின் முற்பகுதியில் பாரியளவான தேய்வைப் பதிவு செய்து, 2013 காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 18.1 சதவீதத்தினால் கூர்மையாக வீழ்ச்சியடைந்தது. 2013 யென்னின் பொதுவான எதிர்மறையான செயலாற்றத்திற்கு, யப்பான் வங்கியின் பாரியளவான நாணயத் தளர்த்தல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தொடர்ந்திருந்த பணச் சுருக்க அழுத்தங்களைக் குறைப்பதை இலக்காகக் கொண்ட அரசின் முனைப்பான இறை விரிவாக்கம் என்பனவே பெருமளவிற்குக் காரணமாகும். அதேவேளை, 2013 ஏனைய முக்கிய நாணயங்களுள் யூரோ ஐ.அ.டொலருக்கெதிராக மிகப் பெரிய இலாபத்தைப் பதிவு செய்து 4.4 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அதேபோல, பொருளாதாரத்திலான குறிப்பிடத்தக்க மீட்சியுடன் ஸ்ரேலிங் பவுண் 2013இல் ஐ.அ.டொலருக்கெதிராக 2.0 சதவீதத்தினால் உயர்வடைந்தது. எனினும், அவுத்திரேலியன் டொலர் 2013ஆம் ஆண்டு காலத்தில் ஐ.அ.டொலருக்கெதிராக 14.2 சதவீதத்தினால் அதன் பெறுமதியை இழந்தது. 2013 மேயில் பெடரல் றிசேர்வின் முறிக் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் சாத்தியமான அளவுக் குறைப்பு தொடர்பான அறிவிப்பைத் தொடர்ந்தது. பல தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள், குறிப்பாக 2013 மே இறுதியிலிருந்து யூன் வரையான காலப்பகுதியில் அவற்றின் நாணயங்களில் கூரிய பெறுமதித்தேய்வைக் காட்டின. தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களில் நாணயங்களின் குறிப்பிடத்தக்க பெறுமதித்தேய்வு பிரேசில் (13 சதவீதம்), இந்தியா (11.7 சதவீதம்), இந்தோனிசியா (20.9 சதவீதம்), தென்னாபிரிக்கா (19 சதவீதம்) மற்றும் துருக்கி (16.4 சதவீதம்) ஆகியவற்றில் பதியப்பட்டது. மாறாக, சீன ரென்மின்பியானது, பாரியளவான வெளிநாட்டு ஒதுக்குகள், உயர்ந்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் மற்றும் அதிகரித்த மூலதன உட்பாய்ச்சல்கள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் ஆதரவளிக்கப்பட்டு 2013இல் ஐ.அ.டொலர் மற்றும் ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக படிப்படியாகத் தொடர்ந்து பெறுமதி உயர்வடைந்தது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்காவின் கணியம்சார் தளர்த்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒடுக்கும் வாய்ப்புக்களுடன் இணைந்து 2013இல் விரிவடைந்த நடைமுறைப் பற்றாக்குறையின் காரணமாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்த இந்திய ரூபாவிற்குப் புறம்பாக தெற்காசியாவிலுள்ள ஏனைய முக்கிய நாணயங்கள், குறிப்பாக வங்காளதேசம் மற்றும் பாகிஸ்தான் நாணயங்களில் கலப்பான செயலாற்றம் அவதானிக்கப்பட்டது. வங்காளதேசம் உள்நாட்டு நாணயமான டாக்கா, பல கைத்தொழில் விபத்துக்கள் தொழிலாளர் உரிமை தொடர்பான பன்னாட்டுக் கரிசனைகளைத் தூண்டியமைக்கிடையிலும், 2013இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் ஆடை ஏற்றுமதிகள் விரைவாக அதிகரித்தமையின் காரணமாக, 2013இல் ஐ.அ.டொலருக்கெதிராக 3.1 சதவீதத்தினால் படிப்படியாக பெறுமதி உயர்வடைந்தது. பாகிஸ்தானில் ரூபா 2013இல் ஐ.அ.டொலருக்கெதிராக 7.9 சதவீதத்தினால் அதன் பெறுமதியை இழந்தது.

**2013இல் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் பணவீக்கம் தொடர்ந்து குறைவாகவிருந்து சில நாடுகளில் குறிப்பாக யூரோ பகுதியில் பணச் சுருக்க அழுத்தங்களின் கரிசனைகளைத் தோற்றுவித்த அதேவேளை, பிரேசில் மற்றும்**

**இந்தியா போன்ற குறிப்பிட்ட சில நாடுகள் தவிர ஏனைய தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் பணவீக்கம் தொடர்பில் பாரிய சவால்கள் எதனையும் எதிர்நோக்கவில்லை.** முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் நுகர்வோர் விலைப் பணவீக்கம் 2012இன் 2.0 சதவீதத்திலிருந்து 2013இல் 1.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை, தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் 2013இல் பணவீக்கம் பெருமளவில் மாற்றமின்றி ஏறத்தாழ 6.0 சதவீதத்திலிருந்தது. எதிர்பார்க்கப்பட்டதிலும் குறைவாகவிருந்த பணவீக்கம் முக்கிய அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் மிகையான இயலளவு, உயர் தொழிலின்மை, இறைச் சிக்கனம் மற்றும் தொடர்ச்சியாக நிதியியல் கடன் சுமை குறைவடைதலைப் பிரதிபலித்தது. அதேவேளை, யப்பான் 2012 திசெம்பரில் அதன் பிரதம மந்திரியினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'அபினொமிக்ஸ்' என்று பரந்தளவில் அறியப்படுகின்ற நாணயத் தளர்த்தல், இறை விரிவாக்கம் மற்றும் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்களை இலக்காகக் கொண்ட கொள்கைகளால் ஆதரவளிக்கப்பட்டு தசாப்த காலத்திற்கு நிலைத்திருந்த அதன் பணச் சுருக்கத்தை முடிவுக்குக் கொண்டு வரக்கூடியதாக இருந்தது. மத்திய கிழக்குப் பிராந்தியத்திலுள்ள எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் புவிசார் அரசியல் பதற்றங்களினால் சில தளம்பல்கள் மற்றும் தாக்கங்கள் காணப்பட்டமைக்கிடையிலும், 2013இல் எண்ணெய் விலைகள் கீழ் நோக்கிய போக்கினைக் கொண்டிருந்தன. ஈரானுடனான புவிசார் அரசியல் பதற்றத்தின் காரணமாக சனவரி மற்றும் பெப்புருவரியில் எண்ணெய் விலைகள் மிக உயர்வடைந்த அதேவேளை, சிரியா அரபுக் குடியரசில் அதிகரித்த புவிசார் அரசியல் பதற்றத்தின் காரணமாக யூலை மற்றும் ஓகத்தில் மற்றுமொரு சுற்றுத்தாக்கம் ஏற்பட்டது. ஐக்கிய இராச்சிய பிறென்ட், துபாய் பட்டே மற்றும் மேற்கு ரெக்ஸாஸ் இடையீட்டு மசகெண்ணெயின் எளிய சராசரி விலைகள் 2012இன் பீப்பாய் ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 105.01 உடன் ஒப்பிடுகையில் 2013இல் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 104.11 ஆக இருந்தது. பொதுவாக, எண்ணெய் விலைகளிலான கீழ் நோக்கிய போக்கு, மெதுவான உலகளாவிய பொருளாதார வளர்ச்சிக்கு மத்தியில் எண்ணெய்க்கான குறைந்த கேள்வியைப் பிரதிபலித்த அதேவேளை, களிப்பாறை வாயு போன்ற மாற்றுவலு மூலங்களின் அதிகரித்த பயன்பாடு எண்ணெய் விலைகள் மீதான அழுத்தத்தைக் குறைத்தது. இதேபோல், கனிமங்கள், தாதுக்கள் மற்றும் உலோகங்கள் அதேபோன்று உணவு மற்றும் வேளாண்மைப் பண்டங்களின் விலைகளும் 2013இல் பொதுவாகக் குறைவடைந்தன.

**உலகளாவிய பொருளாதார தோற்றப்பாடு 2013 பின்னரைப் பகுதியிலிருந்து முன்னேற்றத்திற்கான உறுதியான அறிகுறிகளைக் காட்டியது.** குறிப்பாக, முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்களில் தனியார் நுகர்வு, தொழில்வாய்ப்பின் வளர்ச்சி மூலம் உருவாக்கப்பட்ட செலவிடக்கூடிய வருமானத்திலான அதிகரிப்புக்கு மேலதிகமாக, மீட்சியடைந்துவரும் வீடமைப்பு விலைகள் மற்றும் அதிகரிக்கும் உரிமை மூலதன விலைகளிலிருந்தான சொத்துத் தாக்கங்களினால் ஆதரவளிக்கப்பட்டு படிப்படியாக விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நீண்ட கால சொத்துக் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் தளர்த்தலுக்கிடையிலும் நீடிக்கப்பட்ட காலத்திற்குக் கொள்கை வீதங்களை குறைவாகப் பேணுவதற்காக முக்கிய மத்திய வங்கிகளின் உறுதியான கடப்பாடு முதலீட்டாளர் நம்பிக்கையை உறுதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் மேம்பட்ட நிலைமைகளுக்கிடையில் ஏற்றுமதிகளிலான படிப்படியான மீட்சியினால் முக்கியமாக உந்தப்பட்டு, தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களில் 2014 மற்றும் 2015 இற்காக மேலுமொரு சிறிய அதிகரிப்பு எறிவு செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான கிழக்காசிய பொருளாதாரங்களில், உறுதியான தொழிற்சந்தை நிலைமைகள், குறைந்த பணவீக்கம், விரும்பத்தக்க அளவிலான கடன் வசதிப்படுத்தல் நாணயக் கொள்கைகள் மற்றும் சுருக்கம் குறைவான இறைக் கொள்கைகளால் ஆதரவளிக்கப்பட்டு தனியார் நுகர்வு மற்றும் முதலீடு உறுதியாக விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் எதிர்வரும் ஆண்டுகளில் வளர்ச்சியில் அதிகரிப்பை எடுத்துக்காட்டும் அதேவேளை, உயர் தொழிலின்மை, உட்கட்டமைப்பின் பற்றாக்குறை, உயர் பெறுமதிகூட்டப்பட்ட நடவடிக்கைக்கான பன்முகப்படுத்தலின் குறைந்ததன்மை மற்றும் குறிப்பாக பாரியளவு வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையைக் கொண்ட பொருளாதாரங்களில் உலகளாவிய அதிர்வுகளின் கசிவுத் தாக்கத்தினை முகாமை செய்தல் போன்ற சவால்களை வெற்றி கொள்வதற்கான வழிமுறைகள் நடைமுறைக்கிடப்படல் வேண்டும்.

**மேம்பட்ட உலகளாவிய தோற்றப்பாட்டின் பின்னணியில், உலகளாவிய வளர்ச்சி 2013இன் 3 சதவீதத்திலிருந்து 2014இல் 3.7 சதவீதத்திற்கும் 2015இல் 3.9 சதவீதத்திற்கும் அதிகரிக்குமென எறிவு செய்யப்பட்டது.** ஐக்கிய அமெரிக்காவில் பொருளாதாரம் 2014இல் 2.8 சதவீதத்தினாலும் 2015இல் 3.0 சதவீதத்தினாலும் உறுதியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், நாணயக் கொள்கை மற்றும் இறைக் கொள்கை இரண்டு பக்கங்களிலிருந்தும் வளர்ச்சித் தோற்றப்பாட்டிற்கு இடர்நேர்வுகள் தோன்றக்கூடும். நாணயக் கொள்கையைப் பொறுத்தவரை, மிக நீண்ட காலத்திற்கு நீண்ட காலச் சொத்துக்களின் கொள்வனவைத் தொடர்வது சொத்துக் குமிழிகளை உருவாக்கக்கூடிய அதேவேளை, குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் தளர்த்துவது நிதியியல் சந்தைகளின் நிலையற்ற தன்மைக்கு வழிவகுக்கக்கூடும். மறுபுறத்தில், படுகடன் உச்சவரம்பு மற்றும் வரவு செலவுத்திட்டப் பிரச்சனைகள் தொடர்பான அரசியல் வேறுபாடுகள் தொடருமாயின், இறைக் கொள்கையுடன் தொடர்பான இடர்நேர்வுகள் இன்னும் அதிகமாக இருக்கக்கூடும். இதேவேளை, யூரோ பிராந்தியத்தின் நீண்ட கால மந்தநிலை முடிவுக்கு வந்தமையுடன், ஒட்டுமொத்த ரீதியில் பிராந்தியத்திற்கான மொத்த உள்நாட்டு வளர்ச்சி 2014இல் 1.0 சதவீதமாகவம் 2015இல் 1.4 சதவீதமாகவும் மதிப்பிடப்பட்ட அதேவேளை, தொடர்ச்சியான இறை இறுக்கம் மற்றும் பாதிக்கப்படக்கூடிய வங்கித்தொழில் முறைமை காரணமாக இடர்நேர்வுகள் கீழ்ப்பக்கத்தில் காணப்பட்டன. யப்பானில் 2012 பிற்பகுதியிலிருந்து பின்பற்றப்பட்ட துணிவான கொள்கைகளின் தொகுதி பொருளாதார வளர்ச்சியைத் தூண்டிய போதும், நுகர்வு வரி வீதத்திலான திட்டமிடப்பட்ட அதிகரிப்புடன் இணைந்த நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் பொருளாதார விரிவாக்கத்தின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதுடன் இது வளர்ச்சியை 2014இன் 1.7 சதவீதத்திற்கும் 2015இல் 1.0 சதவீதத்திற்கும் மெதுவடையச் செய்யும். இதேவேளை, நுகர்வோர் கேள்வியிலான அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதிகளிலான உறுதியான மீட்சியினால் உதவப்பட்டு தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் 2014இல் 5.1 சதவீதத்தினாலும் 2015இல் 5.4 சதவீதத்தினாலும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவில், வளர்ச்சி மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டுக்கான இடர்நேர்வுகளை பயனுறுதியுடன் கட்டுப்படுத்துவதற்காக முதலீட்டிலிருந்து நுகர்வு வரையான உள்நாட்டுக் கேள்வியை மீள்சமநிலைப்படுத்துவது தொடர்பில் கூடிய முன்னேற்றம் தேவைப்படும் சரிசனைகளுக்கு மத்தியிலும் வளர்ச்சியானது 2014இன் 7.5 சதவீதத்திலிருந்து 2015இல் 7.3 சதவீதத்திற்கு மெதுவடையுமென எறிவு செய்யப்பட்டது. இந்தியாவின் பொருளாதார நடவடிக்கை, முதலீட்டினாலான மீட்சி மற்றும் மேம்பட்ட உலகளாவிய நிலைமைகள் மற்றும் தேய்வடைந்த உள்நாட்டு நாணயத்தால் ஆதரவளிக்கப்பட்ட உறுதியான ஏற்றுமதி வளர்ச்சி என்பவற்றைப் பிரதிபலித்து 2014 மற்றும் 2015இல் முறையே 5.4 சதவீதத்தாலும் 6.4 சதவீதத்தாலும் விரிவடையுமென மதிப்பிடப்பட்டது. பொதுவாக, எதிர்கால வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் மேம்படுகையில் மிகை இயலளவு இன்னமும் கூடுதலாக இருக்கும் அதேவேளை பணவீக்கம் குறைவாக இருப்பதுடன் இறைத் திரட்சி தொடரப்படுவதினால், நாணயக் கொள்கை கடன் வசதிப்படுத்தலை உரிய காலத்திற்கு முன்னர் மீளப் பெறுவதை தவிர்ப்பது முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களுக்கு முக்கியமானதாக இருக்கும். மேலும், எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்கள் வங்கி ஐந்தொகைகளை சீர்ப்படுத்துதல் மற்றும் நலிந்த வங்கிகளை மீள்மூலதனமயப்படுத்தல் என்பற்றினூடாக முதலீட்டை உயர்த்துவதற்கு இலக்கிடப்பட்ட உலகளாவிய நிதியியல் முறைமையிலான அதிகளவான கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்களின் மீது கூடியளவிற்குச் சார்ந்திருப்பதுடன் இது முதலீட்டாளர் நம்பிக்கையை உயர்த்துவதுடன் ஏறத்தாழ நடுத்தர காலத்தில் கொடுகடனுக்கான கேள்வியை மீள்எழுச்சிப்படுத்தும்.

## 1.4 நடுத்தர கால பேரண்டப் பொருளாதார தோற்றப்பாடு

**உள்நாட்டில் காணப்படும் சாதகமான பொருளாதார நிலைமைகள், மீண்டும் ஆரம்பமாகியுள்ள உலகளாவிய வளர்ச்சி என்பனவற்றிலிருந்தான நன்மைகளுடன் இலங்கையின் பொருளாதாரம் நடுத்தர காலப்பகுதியில் மேலும் விரைவடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது.** நடுத்தர காலப்பகுதியில் 8 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சிப் பாதைக்கு நகர முன்னர் 2013இல் 7.3 சதவீத வளர்ச்சியுடன் உறுதியாகக் காணப்பட்ட பொருளாதாரம் 2014இல் 7.8 சதவீதத்தால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விரிவாக்கமானது அனைத்து முக்கிய துறைகளினதும் அதாவது வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் இனிவரும் ஆண்டுகளில் சாதகமாக பங்களிப்பதுடன் பரந்த தளமொன்றினைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறைகளில் இடம்பெற்ற உட்கட்டமைப்பு வசதிகளின் விரிவாக்கம் மற்றும் முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பங்களின் பயன்பாடு என்பன பெருமளவு இயலளவு மற்றும் மேம்பட்ட உற்பத்தித்திறனுக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, சுற்றுலா, போக்குவரத்து, தொலைத் தொடர்பூட்டல், துறைமுகங்கள் மற்றும் நிதியியல் பணிகள் போன்ற துறைகளிலுள்ள பணிகளிலுள்ள வர்த்தகத்தின் வளர்ச்சி, எதிர்பார்க்கப்பட்டவாறான உத்வேகத்திற்குத் தேவையான தூண்டுதலை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய பொருளாதாரத்தில்

காணப்படும் படிப்படியான மீட்சி இலங்கையின் வெளிநாட்டுக் கேள்வியை சாதகமான மட்டமொன்றில் பேணி நடுத்தர காலப்பகுதியில் உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்தினை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணுவதற்கு முதலீடுகளை மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 30 சதவீதத்திற்கும் மேலாக அதிகரிப்பது இன்றியமையாததாகும். பொருளாதாரத்தில் அதிகரிக்கப்பட்ட இயலளவு, குறைந்த பணவீக்கத்தினை பேணுவதனை இலக்காகக் கொண்ட வழிமுறைகள் என்பனவற்றின் மூலம் கூடுதலான உற்பத்தியாக்க முதலீடுகளைத் தூண்டுவதன் மூலமான உதவியுடன் நடுத்தர காலப்பகுதியில் மொ.உ.உற்பத்திச் சுருக்கி நடுத்தர காலப்பகுதியில் ஏறத்தாழ 5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதாரத்தில் காணப்படும் சாதகமான அபிவிருத்திகளின் காரணமாக 2015இல் தலைக்குரிய வருமானம் ஐ.அ.டொலர் 4,000 இனை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகின்றமையானது “மத்தியதர வருமானப் பொறி” யினைத் தவிர்ப்பதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான அவசியத்தினை எடுத்துக்காட்டுகின்ற வேளையில் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளினதும் வளர்ச்சியும் பேணப்படுகின்றது.

**நடுத்தர காலப்பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடு மேலும் முன்னேற்றமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.** 2013ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் மீளெழுச்சியுற்ற வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகள் முக்கியமாக இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பங்காளர்களான ஐக்கிய அமெரிக்கா மற்றும் யூரோப் பிராந்தியங்களின் எறிவு செய்யப்பட்ட மீட்சியுடன் வரும் ஆண்டுகளில் மேல் நோக்கிய அசைவுகளைப் பேணும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், “சுதந்திர துறைமுகங்கள்” மற்றும் “சுங்க வரி செலுத்தப்படாது களஞ்சியப்படுத்தும் இடங்கள்” போன்றவற்றை உருவாக்குதல் போன்ற கொள்கை வழிமுறைகளும், ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட வரி ஊக்குவிப்புக்களும் நடுத்தர காலத்தில் ஏற்றுமதி வருவாய்களைக் கணிசமாக மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, எறிவு செய்யப்பட்ட வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணுவதற்கு உயர்ந்தளவு முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி தேவைப்படுவதன் பெருமளவு காரணமாக இறக்குமதிகளும் உயர்ந்த வேகத்தில் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், ஏற்றுமதி வருவாய்களில் எதிர்பார்க்கப்படுகின்ற உயர்ந்த வளர்ச்சி நடுத்தர காலத்தில் வர்த்தகப் பற்றாக்குறையில் கணிசமான சுருக்கத்தினை ஏற்படுத்தும். அதேவேளை, கடந்த காலப்பகுதியில் பணிகளிலுள்ள வர்த்தகத்தின் திருப்திகரமான செயலாற்றமானது, சுற்றுலா, துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலையத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகளிலிருந்தான உயர்ந்த வருவாய்களுடன் தொடர்ந்தும் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், புலம்பெயர்கின்ற ஊழியர்கள் சிலரைப்பிடித்து வைத்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற மேம்பட்ட உள்நாட்டுத் தொழிலாளர் சந்தை நிலைமைகளின் காரணமாக அண்மைய ஆண்டுகளில் உறுதியாக வளர்ச்சியடைந்த தொழிலாளர் பணவனுப்பல்கள் நடுத்தர காலப்பகுதியில் மெதுவான வேகத்திலென்றாலும் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**உட்கட்டமைப்பு வசதிகளில் ஏற்பட்டுவரும் மேம்பாடுகள் மற்றும் வியாபாரம் செய்தலை இலகுபடுத்துதல் என்பன மேலும் தளர்த்தப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுடன் சேர்ந்து நடுத்தர காலத்தில் முதலீடுகளுக்குப் பக்கபலமாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.** தூண்டுதலளிக்கும் வியாபார சூழல் மற்றும் முக்கிய பொருளாதாரத் துறைகளுக்கு உபாயம் மிக்க முதலீடுகளைக் கவர்வதற்காக முதலீட்டுச் சபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பனவற்றின் உதவியுடன் நடுத்தர காலத்தில் பங்குரிமை மூலதனம் மற்றும் படுகடன் பிணையங்கள் மீதான முதலீடுகளும் வெளிநாட்டு நேரடி முதலீகளும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, விரிவடைந்துவரும் வியாபார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் வங்கித்தொழில் மற்றும் தனியார் துறைகள் பன்னாட்டுச் சந்தையிலிருந்து கூடியளவு மூலதனத்தினைத் திரட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. நடுத்தர காலத்தில் அரசாங்கம் வெளிநாட்டு நிதியினைப் பெறுவதற்கான வசதி வெளிநாட்டு மூலதனத்திற்கான முக்கிய மூலமாக இருக்கும். வெளிநாட்டுத் துறையில் காணப்படும் இவ்வபிவிருத்திகள் சென்மதி நிலுவையில் கணிசமானளவு மிகையினை உருவாக்கும் என்பதுடன் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கங்களையும் வசதியானதொரு மட்டத்திற்கு உயர்த்துவதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் வெளிநாட்டு அதிர்வுகளுக்குத் தாக்குப்பிடிக்கும் நாட்டின் வலுவினை உயர்த்துவதற்கும் இயலக்கூடியதாக இருக்கும்.

**நிரம்பல் பக்க வழிமுறைகளை உயர்த்துகின்ற உற்பத்தித்திறனின் உதவியுடன், நாணயக் கொள்கையினை முன்மதியுடன் நடத்துவதனூடாக நடுத்தர காலப்பகுதியில்**

**பணவீக்கத்தினை ஏறத்தாழ நடு ஒற்றை இலக்கத்தில் பேணுவதற்கு மத்திய வங்கி எதிர்பார்க்கிறது.** ஐந்தாண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியில் முதன்மைப் பணவீக்கத்தினையும் மையப் பணவீக்கத்தினையும் ஒற்றை இலக்க மட்டத்தில் பேணியமையானது நன்கு உறுதி நிலையடைந்த பணவீக்க எதிர்பார்ப்புக்களுக்கு வழிவகுத்ததுடன் நடுத்தர காலத்தில் சந்தை வட்டி வீதங்களை தாழ்ந்ததும் உறுதியானதுமான மட்டங்களில் பேணுவதற்கு அனுமதித்தது. மேலும், தற்பொழுது இடம்பெற்று வருகின்ற இறைத்திரட்சி முயற்சிகளை மேலும் வலுப்படுத்துவதும் அரச கூட்டுத்தாபனங்களின் செலவைப் பிரதிபலிக்கும் விலைகளும் தனியார் முதலீடுகளுக்காக மேலதிக வங்கித்தொழில் மூலவளங்களை காத்திரமான முறையில் விடுவிக்கும். அதேவேளை, வங்கித்தொழில் துறைக்கான வெளிநாட்டுப் படுகடன் மற்றும் பங்குரிமை மூலதனம் என்பனவற்றின் மிகப் பெருமளவு உட்பாய்ச்சல்கள் உள்நாட்டு வங்கித்தொழில் துறையிலிருந்தான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான கொடுகடன் வழங்கல்களை அதிகரிக்கும்.

**இறைப்பக்கத்தில், அரசாங்கத்தின் நடுத்தர கால பேரண்ட இறைக் கட்டமைப்பு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மேலும் குறைக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டதுடன் அரச படுகடன் மட்டம் பரந்த அடிப்படையிலான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கு உதவியளிக்கூடிய தூண்டுதல் மட்டமொன்றில் காணப்பட்டது.** குறிப்பிடப்பட்ட இறை உபாயம் அரசிறையில் அதிகரிப்பினை ஏற்படுத்திய நடுத்தர காலப்பகுதியில் மீண்டெழும் செலவினத்தில் மிதமான வளர்ச்சியொன்றை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் அரச முதலீடுகள் உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளிக்கக்கூடிய மட்டமொன்றில்

**அட்டவணை 1.5** நடுத்தர கால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு (அ)

| குறிகாட்டி | அலகு | 2012 (ஆ) | 2013 (இ) | எறிவுகள் 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை** | | | | | | | |
| சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.பில் | 7,579 | 8,674 | 9,911 | 11,314 | 12,860 | 14,637 |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 6.3 | 7.3 | 7.8 | 8.2 | 8.3 | 8.4 |
| மொ.உ.உ. சுருக்கி | % | 8.9 | 6.7 | 6.0 | 5.5 | 5.0 | 5.0 |
| தலைக்குரிய மொ.உ.உ. | ஐ.அ.டொ. | 2,922 | 3,280 | 3,718 | 4,243 | 4,825 | 5,485 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ. இன் % | 30.6 | 29.6 | 31.0 | 32.0 | 33.1 | 34.0 |
| உள்நாட்டு சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 16.9 | 20.0 | 22.6 | 25.9 | 28.9 | 31.2 |
| தேசிய சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 24.0 | 25.7 | 28.4 | 31.1 | 33.2 | 34.2 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | | | | |
| வர்த்தக இடைவெளி | ஐ.அ.டொ. மில் | -9,417 | -7,609 | -8,364 | -7,959 | -7,326 | -6,501 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ. மில் | 9,774 | 10,394 | 11,854 | 13,671 | 15,915 | 18,521 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ. மில் | 19,190 | 18,003 | 20,218 | 21,630 | 23,242 | 25,023 |
| பணிகள் (தேறிய) | ஐ.அ.டொ. மில் | 1,262 | 1,180 | 1,907 | 2,564 | 3,006 | 3,249 |
| பணிகள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ. மில் | 13,574 | 15,079 | 17,694 | 21,191 | 25,149 | 28,901 |
| பணிகள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிகள் | மொ.உ.உ.இன் % | 22.9 | 22.4 | 23.0 | 23.9 | 24.7 | 24.7 |
| தொழிலாளர் பண அனுப்பல்கள் | ஐ.அ.டொ. மில் | 5,985 | 6,407 | 6,999 | 7,632 | 8,287 | 8,825 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | ஐ.அ.டொ. மில் | -3,982 | -2,607 | -1,949 | -831 | 101 | 268 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ.இன் % | -6.7 | -3.9 | -2.5 | -0.9 | 0.1 | 0.2 |
| திரண்ட நிலுவை | ஐ.அ.டொ. மில் | 151 | 985 | 1,510 | 2,185 | 2,967 | 3,606 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | ஐ.அ.டொ. மில் | 7,106 | 7,495 | 8,251 | 9,883 | 12,349 | 15,693 |
| **இறைத்துறை** | | | | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ.இன் % | 14.1 | 13.3 | 14.8 | 15.5 | 16.6 | 16.8 |
| மொத்த அரசிறை | மொ.உ.உ.இன் % | 13.9 | 13.1 | 14.5 | 15.3 | 16.5 | 16.6 |
| கொடைகள் | மொ.உ.உ.இன் % | 0.2 | 0.2 | 0.3 | 0.2 | 0.2 | 0.2 |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ.இன் % | 20.5 | 19.2 | 20.0 | 19.9 | 20.4 | 20.6 |
| நடைமுறை கணக்கு நிலுவைய | மொ.உ.உ.இன் % | -1.0 | -0.8 | 1.1 | 1.6 | 2.3 | 2.3 |
| திரண்ட வரவு செலவு திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ.இன் % | -6.5 | -5.9 | -5.2 | -4.4 | -3.8 | -3.8 |
| உள்நாட்டு நிதியிடல் | மொ.உ.உ.இன் % | 2.7 | 4.5 | 2.3 | 2.2 | 2.2 | 2.3 |
| அரச படுகடன் | மொ.உ.உ.இன் % | 79.2 | 78.3 | 74.3 | 70.6 | 65.0 | 62.0 |
| **நிதியியல் துறை (ஈ)** | | | | | | | |
| ஒதுக்குப் பண வளர்ச்சி | % | 10.2 | 0.9 | 14.0 | 14.0 | 14.0 | 14.0 |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) | % | 17.6 | 16.7 | 14.0 | 14.0 | 14.0 | 14.0 |
| அரசுக்கான தேறிய கொடுகடனின் மாற்றம் | ரூ.பில் | 211.6 | 256.1 | 100.0 | 50.0 | 50.0 | 50.0 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் மாற்றம் | ரூ.பில் | 352.6 | 175.9 | 355.0 | 433.0 | 498.0 | 573.0 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி | % | 17.6 | 7.5 | 14.0 | 15.0 | 15.0 | 15.0 |

(அ) 2014 மாச்சு மாத நடுப்பகுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) ஆண்டு இறுதிப் பெறுமதிகளின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி

மூலங்கள்: நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு
தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

பேணப்படும். இதன்படி, இலகுபடுத்தப்பட்டு விரிவாக்கப்பட்ட வரித்தளம், அதிகரிக்கப்பட்ட வரி இணங்குவிப்புக்கள் மற்றும் வரி நிருவாகத்தில் காணப்பட்ட மேம்பட்ட வினைத்திறன் என்பனவற்றின் காரணமாக எதிர்பார்க்கப்படும் உயர்ந்த அரசிறைத் திரட்சிகளுடன் அரசின் அரசிறை, மொ.உ.உற்பத்தியின் 15 சதவீதத்திலிருந்து 16 சதவீதம் வரையிலான அளவினை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, மீண்டெழும் செலவினத்தினை சிக்கனப்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளுடன் எதிர்பார்க்கப்படும் குறைந்த வட்டி வீத அமைப்பும் சேர்ந்து நடுத்தர காலத்தில் மீண்டெழும் செலவினத்தில் மிதமான அதிகரிப்பொன்று ஏற்பட இது உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக 2014இல் நடைமுறைக் கணக்கு மிகை நடுத்தர காலத்தில் மேலும் வலுவடைந்து அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை அனுமதிக்கத்தக்க விதத்தில் கூடியளவு வசதிகளை உருவாக்குகின்றது. இதன் விளைவாக, நடுத்தர காலத்தில் அரச முதலீடுகள் மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 6 சதவீதத்தில் பேணப்பட்டு நாட்டின் ஒட்டுமொத்த முதலீட்டு மட்டத்தில் எறிவு செய்யப்பட்ட முன்னேற்றங்களுக்கு உதவுவதாக அமையும். இவ்வபிவிருத்திகள் நடுத்தர காலப் பேரண்ட இறைக் கட்டமைப்பில் எதிர்பார்க்கப்படும் இறைக் குறைப்புப் பாதையுடன் இசைந்துசெல்லும் விதத்தில் 2016 அளவில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியின் 4 சதவீதத்திற்கும் கீழே குறைப்பதற்கு எதிர்பார்க்கிறது. குறைந்த வரவு செலவுத்திட்ட நிதியிடல் தேவைப்பாடுகள் வங்கிக் கடன்பாடுகளில் தங்கியிருப்பதனைக் குறைத்து அதன் மூலம் தனியார் முதலீடுகளுக்கான வங்கிக் கொடுகடன்களை அதிகரிப்பதன் மூலம் மத்திய வங்கியை விரும்பத்தக்க மட்டமொன்றில் நாணய விரிவாக்கத்தைப் பேணுவதற்கு அனுமதிப்பதன் மூலம் பணவீக்கத்தின் மீதான கேள்வி அழுத்தம் குறைவடைகின்றது. மேலும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அவற்றின் ஐந்தொகையினை வலுப்படுத்துவதற்காக பின்பற்றிய விலையிடல் உபாயங்கள் மற்றும் தொழில்துறையினை மீள்பொறியியல்படுத்தும் செயன்முறைகள் அரச தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றலை உயர்த்தின. அதேவேளை, அரசின் நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ உபாயம் எதிர்பார்க்கப்படும் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியின் உதவியுடன் அடையப்படும் குறைந்த பற்றாக்குறையினூடாக படுகடன் இருப்பினை படிப்படியாகக் குறைக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, மொ.உ.உற்பத்தியின் விகிதமாக படுகடன் 2016இல் ஏறத்தாழ 65 சதவீதத்திற்கு குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பொதுப்படுகடனின் முன்மதியுடைய முகாமைத்துவம் படுகடன் இருப்பின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலத்தினை நீடிக்கக்கூடியதாக இருக்கின்ற வேளையில் நடுத்தர காலத்தில் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகளும் குறைக்கப்படுகின்றன.

## 1.5 பிரச்சனைகளும் கொள்கைகளும்

**வேளாண்மைத் துறையின் உற்பத்தித்திறனையும் இலாபத்தன்மையினையும் உயர்த்துவது நாட்டின் அபிவிருத்தியில் இத்துறை உபாயம் மிக்க வகிபாகமொன்றினை ஆற்றுவதற்கு மிக இன்றியமையாததாக இருக்கும்.** மொ.உ.உற்பத்திக்கான வேளாண்மைத் துறையின் பங்களிப்பு ஏறத்தாழ 11 சதவீதமாக மாத்திரம் இருக்கின்ற வேளையில் அது தொழிற்படையில் ஏறத்தாழ 29 சதவீதத்தினை ஈர்த்துக் கொண்டிருக்கின்றது. வேளாண்மைத் துறையின் குறைந்த உற்பத்தித்திறன் உற்பத்திச் செலவினை அதிகரித்து போட்டித்தன்மையினைக் குறைக்கின்றது. புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதனூடாக வேளாண்மைத் துறையினை நவீனமயப்படுத்துவது உற்பத்தித்திறனை மேம்படுத்த உதவுகின்ற வேளையில் உலகளாவிய பெறுமதிச் சங்கிலியுடன் இணைக்கப்படுவது புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதற்கு வழிவகுக்கும். வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறனை வளர்ப்பது, தற்பொழுது வேளாண்மை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் புதிய துறைகளுக்கு தொழிலாளர்களை விடுவிக்கும். உற்பத்தி அலகுகளை மீளமைப்பதன் மூலம் நில உடமைகளின் அளவினை அதிகரித்தல் மற்றும் சிறந்த பண்ணை முகாமைத்துவ நடைமுறைகளை ஊக்குவித்தல் என்பன நிலம், தொழிலாளர் விகிதம் மேம்பட உதவும். இதன் மூலம் வேளாண்மைத் துறையின் உற்பத்தித்திறன் மேம்படுகிறது. கூடியளவு வினைத்திறன் மிக்க உள்ளீடுகளைப் பயன்படுத்துவதனூடாகவும் உள்நாட்டு உள்ளீட்டு கைத்தொழில்களின் அபிவிருத்தியூடாகவும் உணவு பதனிடல் மற்றும் விலங்குத்தீன் உற்பத்தி, கைத்தொழில்களின் உள்ளீடுகளான வளமாக்கி, வேளாண் இரசாயன விதை மற்றும் பொறி மற்றும் கருவிகள் மற்றும் பண்டங்கள் போன்ற உள்ளீடுகளின் தளம்பலுறும் இறக்குமதி விலையிலிருந்து தோன்றுகின்ற உயர்ந்த உற்பத்திச் செலவுகளைக் கட்டுப்படுத்துவது சாத்தியமானதாக இருக்கக்கூடும். வேளாண்மை ஏற்றுமதிகளை உயர்த்தும் விடயத்தில் பண்டங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை விட உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் அபிவிருத்தியின் மீது கவனம் செலுத்துவது அவசியமாகும். இது தொடர்பில் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளைப் பயன்படுத்திக் கொள்வது உயர்ந்த

பெறுமதிகூட்டப்பட்ட உற்பத்திகளை உருவாக்குவதற்கு உதவுவதுடன், இதன் மூலம் தேசிய வருமானத்திற்கும் ஏற்றுமதி வருவாய்களுக்குமான இத்துறையின் பங்களிப்பினை உச்சப்படுத்த முடிகின்ற வேளையில் இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வருமானத்தையும் கூட உயர்த்தமுடியும்.

**காப்புறுதி மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் போதுமானளவில் இல்லாமையின் காரணமாக வேளாண்மைத் துறை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் வங்கிக் கொடுகடன் வசதிகளைப் பெறுவதில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றன.** தற்பொழுது, வேளாண்மைத் துறையில் பயிர் காப்புறுதியின் உள்ளடக்கம் மிகக் குறைவேயாகும். ஆகவே, இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு பாரம்பரியமான மற்றும் பாரம்பரியமற்ற காப்புறுதித் திட்டங்களையும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களையும் ஊக்குவிப்பதன் மூலம் வேளாண்மைத் துறைக்கான கொடுகடன் விரிவாக்கம் ஊக்குவிக்கப்படுகிறது. கொடுகடன் விரிவாக்கத்தினை வசதிப்படுத்துவதற்காக, சில நாடுகள் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதி உற்பத்திகள் மற்றும் கொடுகடன் உத்தரவாத நிதியங்கள் போன்ற புதிய நிதியியல் இடர்நேர்வு மாற்றல் உற்பத்திகளை உருவாக்கியிருக்கின்றன. காப்புறுதி உற்பத்திகள் பயிரழிவு போன்றவற்றிலும் பார்க்க மழைவீழ்ச்சி போன்ற வானிலைச் சுட்டெண்களுடன் இணைக்கப்படுகின்றன. அத்தகைய உற்பத்திகளின் கொடுக்கல்வாங்கல் செலவு குறைவாக இருப்பதனால் அது தாங்கக்கூடியதொன்றாக இருக்கின்ற வேளையில் பயிர்களைத் தெரிவு செய்வது தொடர்பில் வேளாண்மையாளர்களுக்குக் கூடுதலான தகவல்களை வழங்குவதன் மூலம் அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். கடன் வழங்குபவர்களும் கொடுகடன் செலுத்தத் தவறுவதிலிருந்தும் பாதுகாக்கப்படுகின்றனர். கொடுகடன் உத்தரவாதத்திட்டங்கள் நன்கு மூலதன மயப்படுத்தப்பட்டதும் நன்கு முகாமைப்படுத்தப்பட்டதுமான கூட்டுறவுச் சங்கங்கள், அரசல்லா அமைப்புக்கள், அபிவிருத்தி வங்கிகள் மற்றும் காணி வங்கிகள் என்பனவற்றின் பங்களிப்புக்களை ஒன்றுதிரட்டுவதனூடாக உருவாக்கப்பட்டன. கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் பிணைத் தொகைக்கு கடன் வழங்குகின்ற வங்கிகளின் பெயரில் அத்தகை கூட்டுறவுச் சங்கங்களின் அல்லது அரசல்லா அமைப்புக்களின் உறுப்பினர்களது சார்பில் கடனுக்கான பிணையமாக வழங்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களினால் அல்லது அரசல்லா அமைப்புக்களினால் ஏற்றுக்கொள்ளத்தக்க பிணையங்கள் வர்த்தகத்திலுள்ள இருப்பு, வேளாண்மைக் காணி, சொத்து மற்றும் ஊர்திகள் போன்ற வங்கிகளினால் ஏற்றுக்கொள்ளத்தக்கவை போலன்றி இருப்பதனால் வங்கிகளிலிருந்து நேரடியாகப் பெறப்படுகின்ற கடன்களுடன் ஒப்பிடுகையில் கொடுகடன் உத்தரவாதங்களுடன் கூடிய கடன்பாடுகள் பல அநுகூலங்களைக் கொண்டிருக்கின்றன. மேலும், ஈடுகள் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது அரசல்லா நிறுவனங்கள் வசமிருப்பதனால் அதனை கடன் வழங்கல் நிறுவனங்களின் பெயரில் மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை. இத்திட்டம் சில தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களில் பிரபல்யம் பெற்றிருப்பதுடன் வேளாண்மைத் துறையின் வலுவான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு அத்தகைய திட்டங்களை இலங்கையிலும் வெற்றிகரமாக நடைமுறைக்கிட முடியும்.

**இலங்கை பண்டைக் காலத்தில் அதன் வினைத்திறன் மிக்க நீர் முகாமைத்துவ முறைமைகளுக்காக சிறந்த அங்கீகாரத்தைப் பெற்றிருந்த போதும், விரிவடைந்துவரும் பொருளாதார நடவடிக்கைகளிலிருந்தான அதிகரித்த கேள்வியை ஈடுசெய்யும் விதத்தில் நீரை வழங்குவதில் அது அதிகரித்த சவால்களை எதிர்நோக்குமொன்றாக மாறியிருக்கிறது.** மற்றைய பல நாடுகளைப் போன்றே, இலங்கையும் நீடித்து நிலைபெறக்கூடிய நீர் முகாமைத்துவத்திற்கான உபாயத்தினை வடிவமைப்பதில் சவால்களை எதிர்கொள்கிறது. நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை போன்றன உட்பட பல அரசாங்க முகவர்களும் நாட்டின் நீர் முகாமைத்துவ முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். பின்னைய இரண்டு நிறுவனங்களும் பருவகால தொழிற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் நீர்ப்பாசன நோக்கங்களுக்காக நீரை வழங்குகின்றவிடத்து இறுதிப் பகிர்ந்தளிப்புத் தீர்மானங்கள், நீர்ப்பாசனத் திணைக்களம், வேளாண்மைத் திணைக்களம் அதேபோன்று இலங்கை மின்சபை என்பனவற்றிலிருந்தான பிரதிநிதிகள் உட்பட பல்வேறு ஆர்வலர்களை உள்ளடக்கிய குழுவொன்றினால் மேற்கொள்ளப்படுகின்றன. பயிர்ச்செய்கைத் திட்டம் நீரின் கிடைப்பனவின்படி தீர்மானிக்கப்படுவதுடன் வேளாண்மையாளர்கள் குறிப்பிட்ட பருவ காலத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட எண்ணிக்கையான எக்யேடர்களை மட்டுமே பயிரிடுவதற்கு பணிக்கப்பட்டனர். மிகையான நீர் கிடைக்கத்தக்கதாக இருக்குமிடத்து வலு உருவாக்கத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இலங்கையின் நீர் முகாமைத்துவ சிக்கல்களுக்குக் காரணம் வேறுபட்ட பணிகளைக்கொண்ட பல்வேறுபட்ட நிறுவனங்கள் இச்செயன்முறையில் ஈடுபட்டிருப்பதேயாகும். நீர்ப்பாசனத்திற்கு அல்லது நீர்மின்வலு

உருவாக்கத்திற்கு விடுவிக்கப்படுகின்ற உடன் நீர் பொதுச் சொத்தாகக் கருதப்படுவதுடன் அரசாங்கம் பாதுகாவலராகவே தொழிற்படுகின்றது. பொதுச் சொத்தொன்றாக இருக்கின்ற நீர் பலரினாலும் “பொதுவான துன்பம்” ஒன்றிற்கு இட்டுச்செல்லும் விதத்தில் பயன்படுத்தப்படுவதுடன், தனிப்பட்டவர்களினால் பகிர்ந்து நுகரப்பட வேண்டியதும் அவர்கள் தமது தனிப்பட்ட மூலவளம் போன்று பயன்படுத்திக் கொள்ளப்படுவதும் சுயநலத்துடன் பயன்படுத்தப்படுதலை குறைந்து போகக்கூடிய அல்லது மூலவளங்களே அழிந்து போகக்கூடிய ஒரு மூலவளமாக நீர் விளங்குகின்றது. ஆகவே, மூலவளங்களின் பயன்பாடு கணக்கிடப்படுகையில், சாத்தியமானவிடத்து ஒருமையைப்படுத்தப்பட்ட முறைமையொன்றின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையொன்றினை உருவாக்குவது இன்றியமையாததாக இருப்பதுடன் நீரின் சொத்துடமையும் பயன்பாடும் முகவரொருவரிடம் சரியான முறையில் கையளிக்கப்படல் வேண்டும். அந்நிறுவனம் பொருத்தமான கொடுப்பனவு பொறிமுறையொன்றின் மூலம் பரஸ்பர நடவடிக்கையினை மேற்கொள்ளல் வேண்டும். அத்தகைய பொறிமுறையானது அருந்தலான மூலவளத்தினை முகாமைப்படுத்துவதற்கு உதவுவது மட்டுமன்றி நீடித்த அபிவிருத்தியையும் ஊக்குவிக்கும். வீடுகள் மற்றும் கைத்தொழில் நுகர்வுகளுக்காக நீரை வழங்குவதையும் விநியோகிப்பதையும் பொறுத்தவரை நீரொழுக்குகளைக் குறைப்பதற்கும் மானி முறைமையினை மேம்படுத்துவதற்கும் விநியோகத்தில் ஏற்கனவேயுள்ள நீர்க்குழாய்களையும் கடத்திகளின் வலையமைப்பையும் புத்தாக்கம் செய்வதற்கான முயற்சி அவசியமாகும்.

**நாடு மேல் மத்தியதர வருமான அந்தஸ்தை நோக்கி நகர்வதனால் உயர் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளுக்காக தயாரிப்புத் தளத்தினை பன்முகப்படுத்துவதற்கு என்ற புத்தம்புதிய விடயங்களையும் ஆராய்ச்சிகளையும் அபிவிருத்திகளையும் வலியுறுத்துவதற்கான தேவை காணப்படுகின்றது.** உயர்வடைந்துவரும் கூலிகளின் காரணமாக பொருளாதாரம் தொழிலாளர் செறிவினைக் கொண்ட கைத்தொழில்களில் அதன் போட்டியிடக்கூடிய அநுகூலங்களை இழப்பதனால் அக்கைத்தொழில்கள் நடைமுறை மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் செறிவுமிக்க தொழிற்சாலைக் கைத்தொழில்களுக்கு அப்பால் அறிவினை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பச் செறிவினைக் கொண்ட கைத்தொழில்களுக்கு மாறுதல் வேண்டும். இது நனோ தொழில்நுட்பவியல் போன்ற உயர் தொழில்நுட்பவியல் உற்பத்திகளை மேம்படுத்துவது உயிரியல் தொழில்நுட்ப உற்பத்திகள், மின்னியல் உற்பத்திகள், இலத்திரனியல் உற்பத்திகள் போன்றவற்றை இயலுமைப்படுத்தியதுடன் இவை நாட்டிற்கான கூடுதலான வெளிநாட்டுச் செலாவணியினை கணிசமாக உருவாக்கக்கூடிய கைத்தொழில் தளத்தினை உயர் பெறுமதிகூட்டப்பட்ட உற்பத்திகளுக்கு பன்முகப்படுத்துகிறது. புத்தம்புதிய விடயங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் அண்மைய ஆண்டுகளில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்கி வருகின்றது. இவ்வூக்குவிப்புக்கள் குறைக்கப்பட்ட வருமான வரி வீதங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் பொருட்டு ஏற்பட்ட செலவினத்திற்கான வரிக் குறைப்புக்கள், விஞ்ஞானவியல் ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட சாதனங்கள் மற்றும் கருவிகள் மீதான சுங்கத் தீர்வை நீக்கம், ஆராய்ச்சி செயற்றிட்டங்களுக்கான ஆராய்ச்சிப் படிகள் மற்றும் நிதியிடல்கள் ஆகிய வடிவில் காணப்படுகின்றன. நனோ தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானப் பூங்கா என்பன உருவாக்கப்பட்டமையானது இவ்வகையுடன் தொடர்பான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான மிக அருமையான வாய்ப்பினை வழங்கியுள்ளது. மேலும், புத்தம்புதிய விடயங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறுபட்ட பன்னாட்டு முகவர்களின் ஆதரவுடன் தொழில்நுட்பவியல் தொழில் பாதுகாப்பு இடங்களையும் தொழில்நுட்பவியல் மாற்றல்மையங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறுபட்ட அரச நிறுவனங்களும் எதிர்பார்க்கின்றன. எடுத்துக்காட்டாக, தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையானது இரண்டு அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் மொறட்டுவவிலுள்ள மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்ப தொழில் பாதுகாப்பு இடம் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் தொழில்நுட்ப தொழில் பாதுகாப்பிடமொன்றினை நிறுவுவதற்கு அனுமதியை எதிர்பார்த்தது. இத்தொழில்நுட்ப தொழில் பாதுகாப்பு இடங்களும் தொழில்நுட்பவியல் மாற்றல்மையங்களும் தொழில்நுட்பவியலை வழங்குவதில் இதுவரை மட்டுப்படுத்தப்பட்ட வகிபாகத்தினையே ஆற்றியதுடன் இவ்வொத்துழைப்புக்களிலிருந்து அடையப்பட்ட விடயங்கள் கைத்தொழில்துறை மேலும் பன்முகப்படுத்துப்படுவதற்கு வழிவகுக்கும். மற்றைய நாடுகளின் அனுபவங்கள் உற்பத்திகளை பன்முகப்படுத்துவதற்கும் ஏற்றுமதிச் சந்தைகளில் நுழைவதற்கும் அவசியமான புத்தம்புதிய விடயங்களினதும் அபிவிருத்திகளினதும் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டின. இவற்றைப் பொறுத்தவரை தொழில்நுட்பவியல் நுணுக்கங்களை

அடைந்து கொள்வதற்கான முயற்சிகளும் புத்தம்புதிய விடயங்களினால் வழிநடத்தப்படும் கைத்தொழில்களும் ஏற்றுமதி வளர்ச்சியும் ஊக்குவிக்கப்படல் வேண்டும். பெறுமதிச் சங்கிலியினை உயர்த்துகின்ற முன்னோக்கி நகர்கின்ற தயாரிப்புக்களும் தேவையான தேர்ச்சிகளில் பயிற்சி பெற்ற தொழிற்படையினைத் தேவைப்படுத்துகின்றது. பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்பான பாடக் கல்வி ஊக்குவிக்கப்படுவது அவசியமாகவுள்ள வேளையில் வேலை செய்யும் பொழுதே பயின்று கொள்வதன் பெறுமானங்களை புறந்தள்ளிவிட முடியாது என்பதுடன் கைத்தொழில்துறை அடுத்த கட்டத்திற்கு உயர்வதனை இயலச் செய்கின்ற தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வதனை ஊக்குவிக்கின்ற பயிலுதல் சூழலை உருவாக்குகின்ற நிலையினை நிறுவனங்கள் ஊக்குவித்தல் வேண்டும்.

**கைத்தொழில் கொத்தணிகளை ஏற்படுத்துவதற்கான உபாயத்தினை தொடர்வது நாட்டின் உற்பத்தியினை உத்வேகப்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தினையும் 2016 அளவில் ஐ.அ.டொலர் 100 பில்லியனுக்கு விரிவடையச் செய்ய உதவும்.** இலங்கையில், அணியும் ஆடைகள், இறப்பர், மட்பாண்டம் மற்றும் தேயிலை போன்ற துறைகளில் பல கைத்தொழில் கொத்தணிகள் ஏற்கனவே விருத்தி செய்யப்பட்டுள்ளன. யப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவர், மொறட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் கைத்தொழில் அமைச்சு என்பனவற்றிக்கிடையிலான கூட்டு ஒத்துழைப்புடன் மின்னியல்/ இலத்திரனியல் கொத்தணியொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. கைத்தொழில் கொத்தணிகள் நிறுவப்படுவதுடன் ஆரம்பப் பணியிலுள்ள கைத்தொழில்கள், கைத்தொழிலுள்ள முக்கிய உலகளாவிய தொழில்துறையினருடன் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளும். மேலும், கொத்தணிகளுடன் தொழிற்படுவது புத்தம்புதிய விடயங்களுக்கான வாய்ப்புக்களையும் குறிப்பிட்ட தேர்ச்சி அபிவிருத்திகளையும் வழங்குகின்ற வேளையில் கைத்தொழில் துறையில் காணப்பட்ட வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் என்பனவற்றுடன் தொடர்பான பிரச்சனைகளையும் கட்டுப்படுத்துகிறது. வலுவான உள்நாட்டுக் கைத்தொழில் கொத்தணி நாட்டிற்கான நேரடி வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்கு உதவும். 1990 களின் நடுப்பகுதியிலிருந்து நாடுகள் வியாபாரப் போட்டித்தன்மையினை அதிகரிப்பதற்கும் வலுவான பிராந்திய பொருளாதாரங்களைப் பலப்படுத்துவதற்காகவும் கைத்தொழில் கொத்தணிக் கொள்கைகளை வெற்றிகரமாகப் பின்பற்றின. ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சிலிக்கோன் பள்ளத்தாக்கு, யப்பானிலுள்ள டொயட்டா கொத்தணி, ஜேர்மனியிலுள்ள பாடன் - வூட்றம்பேர்க்க கொத்தணி, சீனாவிலுள்ள விஞ்ஞான மற்றும் கைத்தொழில் பூங்கா, ஐக்கிய இராச்சியத்திலுள்ள கேம்பிறிஜ் ரெக்னோபோல் என்பன கைத்தொழில் போட்டித்தன்மையினை பலப்படுத்துவதற்காக முன்னேற்றங்கண்ட நாடுகளினால் ஏற்படுத்தப்பட்ட பாரியளவு கொத்தணிகளுக்கு சில உதாரணங்களாகும். இலங்கையும் கூட கைத்தொழில் கொத்தணிகளை ஏற்படுத்துவதன் மூலம் அதன் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை உத்வேகப்படுத்தி அதன் மூலம் உயர் பெறுமதிகூட்டப்பட்ட உற்பத்திகளுக்கு நகரவும் அதன் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதித் தளத்தினைப் பன்முகப்படுத்தவும் முடியும்.

**பன்னாட்டு ரீதியில் போட்டித்தன்மை வாய்ந்த வர்த்தக மையமொன்றனை அபிவிருத்தி செய்வதற்கான சவால்கள் தற்பொழுதுள்ள பொதுவசதிகளின் மீதும் உட்கட்டமைப்பு வசதிகளின் மீதும் அநேக அழுத்தங்களை ஏற்படுத்தும்.** உலகளாவிய பொருளாதாரத்தில் மிக விரைவாக வளர்ந்துவரும் துறைகளில் ஒன்றாக பணிகள் துறை மாற்றமடைந்து உலகளாவிய வெளியீட்டில் ஏறத்தாழ 6 சதவீதத்திற்கும் உலகளாவிய ஏற்றுமதிகளில் 19 சதவீதத்திற்கும் வகைகூறியது. இலங்கையில், பணிகள் துறை மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற வேளையில், பணிகள் ஏற்றுமதிகள் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 30 சதவீதத்திற்கு வகைகூறின. கடந்த தசாப்த காலப்பகுதியில் பணிகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சி, பணிகள் ஏற்றுமதிக்காக காணப்படும் வாய்ப்புக்களின் எதிர்கால வளர்ச்சிக்கு முக்கிய தூண்டுதலாக விளங்கும் என்பதனை எடுத்துக்காட்டின. நாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடத்தினையும் போட்டித்தன்மைமிக்க அநுகூலங்களையும் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு அரசாங்கம் மேற்கொண்டுவரும் ஐந்து மையங்களையும் சுற்றுலாவினையும் அபிவிருத்தி செய்கின்ற உபாயம் நடுத்தர காலத்தில் வளர்ச்சிக்கான முக்கியமான எந்திரமாக பணிகள் துறையினை உந்தும். இப்பிராந்தியத்தில் வர்த்தக மையமாக இலங்கையை நிலைப்படுத்துவதற்காக இடம்பெற்றுவரும் விரைந்த அபிவிருத்திகளின் பின்னணியில் நீர், மின்வலு, கழிவுநீர் வடிகால், மழைநீர் வடிகால், தீயணைப்பு பாதுகாப்புப் பணிகள் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு போன்ற முக்கிய பொதுவசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் இயலளவுகள் தோற்றம் பெற்றுவரும் பொருளாதார

நடவடிக்கைகளிலிருந்து தோன்றுகின்ற வளர்ச்சியடைந்த கேள்விகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருப்பதனை உறுதிப்படுத்துவது அவசியமானதாகும்.

**இலங்கை தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல்/ வெளியிலிருந்து அறிவுப் பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல் பணிகளுக்கான ஆற்றல் வாய்ந்த அமைவிடமாகத் தோற்றம் பெற்று வருகின்றமையானது வர்த்தக அடையாளமொன்றினை உருவாக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளதுடன் கைத்தொழில் முன்னோக்கி நகருவதற்குத் தேவையான தேர்ச்சி அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையினையும் ஏற்படுத்தியுள்ளது.** வெளியிலிருந்து பணிகளை வழங்குகின்ற இந்தியா போன்ற ஏனைய பாரிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் தொழிற்படையின் அளவும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தபோதும் இலங்கை மென்பொருள் பரீட்சிப்பு, நிதி மற்றும் கணக்கீட்டில் பெறுமதிகூடிய சிறிய சந்தைகளுக்காக உயர்ந்த தேர்ச்சியைக் கொண்ட தொழில்சார் நிபுணர்களை இலங்கை கொண்டிருக்கிறது. இலங்கை ஒப்பீட்டு ரீதியில் மலிவானதும் சிறந்த வேலை ஒழுக்கங்களையும் கொண்ட உயர்தர தொழிற்படையுடன் கூடிய கவர்ச்சிகரமான வெளியிலிருந்து பணிகளை வழங்கும் ஒரு நாடாகக் காணப்படுகின்றது. எனினும், இலங்கையிலுள்ள தகவல் தொழில்நுட்பம்/ வெளிமூலங்களிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளல் 2015 அளவில் ஒரு பில்லியன் டொலர் கைத்தொழிலாக மாறுவதற்கு எதிர்பார்ப்பதனால் அநேக சவால்களை எதிர்நோக்குகின்றது. இலங்கை இப்பிராந்தியத்தில் பணிகளை வழங்குவதில் முன்னணி நாடாகவும் பணிகளுக்காக வர்த்தக அடையாளங்களை உருவாக்குகின்ற நாடொன்றாகவும் இருப்பதனால் இத்துறையில் வளர்ச்சி வாய்ப்புக்களை உயர்த்துவது இன்றியமையாததாகும். உலகம் முழுவதிலுமுள்ள முக்கிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பக் கண்காட்சிகளை நடத்துவதன் மூலம் வெளியிலிருந்து பணிகளை வழங்குகின்ற நாடொன்றாகத் தோற்றம் பெற்றுவரும் நாட்டின் நிலையினை வெளிப்படுத்துதல் இது தொடர்பில் மிக முக்கியமானதொரு உபாயமாகும். தேர்ச்சி பெற்ற மனித வலுவின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவது தகவல் தொழில்நுட்பப் பணிகளை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிகளை விரிவாக்குவதற்கான முக்கியமானதொரு முற்தேவைப்பாடாகும். திறமை வாய்ந்த இலங்கையர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்பான துறைகளில் வேலை வாய்ப்புக்கள் இருப்பது பற்றி சிறப்பு விழிப்புணர்வுகளை உருவாக்குவதற்குத் தேவையான அறிவையும் தேர்ச்சியையும் அதேபோன்று இயலளவைக் கட்டியெழுப்புவதற்கும் தேவையான விடயங்களை விருத்தி செய்வதற்கு பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்புடன் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குவது இத்தொழிலை மேலும் விரிவாக்கம் அவசியமானதாகும். பணிகளை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிகளின் உறுதியான வளர்ச்சி மூளைசாலிகளின் வெளியேற்றம் மாற்றமடைவதற்கு ஊக்குவிக்கும்.

**பொருளாதாரத்தில் விரைந்து வளர்ச்சியடைந்துவரும் துறைகளில் ஒன்றான சுற்றுலா 2016 அளவில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளைப் பெறுவதற்கு இலக்கிட்டுள்ளமையினால் தெளிவான, சந்தை தூண்டல் உபாயமொன்று அவசியமாகும்.** மோதல் முடிவடைந்த பின்னரான காலப்பகுதியில் சுற்றுலா வருகைகள் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளமையினால் சுற்றுலாக் கைத்தொழில் விரைந்து வளர்ச்சியைக் காட்டுகிறது. எனினும், சுற்றுலாக் கைத்தொழில் மேலும் விரிவடையும் பொழுது பயிற்சி பெற்ற அலுவலர்களின் கூடுதலான தேவை, மேம்பட்ட பணியின் நியமங்கள், அதிகரிக்கின்ற அறையின் இயலளவு மற்றும் குறிப்பாக பாரம்பரியமற்ற சந்தைகளில் சிறந்த ஊக்குவிப்பு முயற்சிகள் போன்ற பல சவால்களை இத்தொழில் எதிர்நோக்குகிறது. வளர்ந்துவரும் இத்தொழில் துறையின் தேவையை ஈடுசெய்வதற்கு பயிற்சி பெற்ற விருந்தோம்பல் அலுவலர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. எனவே, புதிய பயிற்சிப் பள்ளிக்கூடங்களை நிறுவுவதும் உயர் சான்றிதழ்களைப் பெறுவதற்கு தற்போதுள்ள ஊழியர்களை ஊக்குவிப்பதும் பல்தேர்ச்சி அபிவிருத்திகளை வழங்குவதும் வெளிநாடுகளில் தொழில்புரியும் சுற்றுலாவிடுதிப் பணியாளர்கள் நாட்டிற்குத் திரும்பி பணியாற்றுவதற்கு ஊக்குவிப்பதும் அவசிய தேவைகளாகவுள்ளன. இது தேர்ச்சி பெற்ற தொழிலாளர் குழுவினை அதிகரிப்பதுடன் அதன் மூலம் இத்தொழில் துறையின் பண நியமங்களையும் மேம்படுத்துகின்றது. சுற்றுலாத் துறையில் இடம்பெற்றுவரும் பாரிய செயற்றிட்டங்கள், இலக்கிடப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் தேவைப்பாட்டினை ஈடுசெய்யும் விதத்தில் இத்தொழில்துறையின் இயலளவை உயர்த்துமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, உரிய நேரத்தில் இச்செயற்றிட்டங்களை நிறைவு செய்தல் மிக இன்றியமையாததாகும். மேலும், இதுவரை பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வாய்ப்புக்களைக் கொண்ட சந்தைகளில் ஊக்குவிப்புப் பிரச்சாரங்களை தொடர்ச்சியாக மேற்கொள்வது பரந்த புவியியல் பரப்புக்களிலிருந்து பயணிகளைக் கவருமென எதிர்பார்க்கப்பட்டதன் மூலம் இத்தொழில் துறையின்

## சிறப்புக்குறிப்பு 1 பொருளாதார பன்முகப்படுத்தலும் நிலைத்திருக்கும் வளர்ச்சியும்

### நிலைத்திருக்கும் வளர்ச்சிக்கான பன்முகப்படுத்தல்

பொருளாதார வளர்ச்சியின் நிலைத்திருக்கும் மட்டமானது உலகமுழுவதுமுள்ள பெரும்பாலான நாடுகளின் பிரதான பொருளாதார நோக்கமாகும். அநேக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் குறைந்த காலத்திற்கு உயர் வளர்ச்சி வீதத்தினை அடையக்கூடியதாகவுள்ளன. ஆனால் சில நாடுகளால் மட்டுமே அத்தகைய வளர்ச்சி வீதத்தினை குறிப்பிட்ட காலப்பகுதிவரை பேணக்கூடியதாகவுள்ளதுடன் முடிவில் உயர் வருமான மட்டத்தினை அடையக்கூடியதாகவுள்ளன. எவ்வாறு சிறிய வளர்ச்சி வீதங்கள் ஏற்படுகின்றன என்பதனைக் கவனத்தில் கொள்ளாது பல ஆண்டுகளுக்கு மேலாக இது குவிக்கப்படும் போது பல்வேறு நாடுகளின் வாழ்க்கை நியமங்களில் பெருமளவான விலகல்களின் விளைவாக தலைக்குரிய வருமான மட்டங்களில் பெருமளவான வித்தியாசங்கள் உருவாக்கப்படுகின்றன.[1] எனவே குறிப்பாக தோற்றம் பெற்றுவலும் நாடுகளைப் பொறுத்தமட்டில் குறுகிய காலப்பகுதிக்கான பரவலான அசாதாரண உயர் வளர்ச்சிகளை விட நிலைத்திருக்கும் உயர்வான வளர்ச்சி வீதத்தினை அடைவது முக்கியமானதாகும்.

தன்மை அடிப்படையில் பல்வேறு நாடுகள் ஒன்று அல்லது அநேக சிறப்பியல்பு வாய்ந்த பரப்புக்களில் பொருளாதார நடவடிக்கைகளின் செறிவை உருவாக்கி அதன்மூலம் சிறப்பியல்பு மற்றும் எல்லை வர்த்தக கருத்துக்களை பலப்படுத்தி வளங்களின் பல்வேறு வகைகள் மற்றும் மட்டங்களுடன் அமையப்பெற்றுள்ளன. இருப்பினும் சில நாடுகள் சிறப்பியல்புவாய்ந்த ஒன்று அல்லது அநேக துறைகளின் மீது தங்கியிருப்பதான குறைப்பதற்காக அவர்களின் பொருளாதாரங்களை பல்வகைப்படுத்தக் கூடியனவாக காணப்படுகின்றன. அவ்வாறு பல்வகைப்படுத்தப்பட்ட பொருளாதாரம் நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கான வளர்ச்சி வீதத்தைப் பேணுவதற்காக உயர்தளவான ஆதரவினை வழங்குகின்றன என அடிக்கடி கருதப்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சியின் பல்வகைப்படுத்தல் மற்றும் தளம்பல் மட்டங்கள் ஒரு சில நாடுகள் முழுவதும் ஆராயப்பட்டால் அது உண்மையின் வெளிப்படையாக அமையும். இவ்வாறான ஆய்வுகள் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலிருந்து பெறப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான செறிவுகளின் பங்களிப்பு சதவீதத்தினை கவனத்தில் கொண்டு கணிக்கப்படும் செறிவு விகிதம் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் தளம்பல்களின் அளவீடான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதங்களின் நியம விலகல் என்பவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன.[2] அட்டவணை சி.கு. 1.1 இலங்கை மற்றும் தெரிவுசெய்யப்பட்ட ஏனைய நாடுகளுக்கு கணிப்பிடப்பட்ட செறிவு விகிதத்தை காட்டுகின்றது. உயர்ந்தளவான செறிவு விகிதமானது வெளியீடானது குறைந்தளவான துறைகளில் அதிக செறிவினை கொண்டிருப்பதையும் குறைந்த செறிவு விகிதமானது குறைந்த செறிவினையும் அதிக பன்முகப்படுத்தல் வெளியீட்டையும் காட்டுகின்றது.

சில துறைகளின் பொருளாதார நடவடிக்கைகளின் செறிவை நாட்டில் கிடைக்கக்கூடிய இயற்கைவள மட்டங்களால் பாதிக்கப்பட்ட முடியும். உதாரணமாக, மத்திய கிழக்கு நாடுகள் பெற்றோலிய வளங்களை அதிகமாக கொண்டுள்ளதுடன் அதன் பொருளாதார நடவடிக்கை கல்லுடைத்தலும், சுரங்கமகழ்தலும் எனும் வகைக்குள் திரட்சிப்படுத்தப்பட்டுள்ளது. சாதகமான காலப்பகுதியில் இத்தகைய நாடுகள் மிக உயர்ந்த வளர்ச்சி வீதத்தை அடையக்கூடியதாக இருக்கின்றன. எனினும் இத்தகைய நாடுகளின் பொருளாதார செயலாற்றம் பெருமளவில் எண்ணெய் விலைகளுடன் தொடர்புபட்டுள்ளது. எனவே உலகளாவிய எண்ணெய் விலை மாற்றங்களின் வேறுபாடுகளால் கணிசமாக பாதிப்படைகிறது. மறுபுறத்தில் இயற்கை வளங்களில் நிறைந்த சில நாடுகள் காணப்படுகின்ற போதிலும், அத்தகைய வளங்களிலிருந்து பெறப்படும் வருமானம் அதுபோன்ற ஏனைய துறைகளுக்கு வழிநடத்தக்கக்கூடியதாக இருக்கும். இதன் விளைவாக அத்தகைய நாடுகளின் பொருளாதார நடவடிக்கை மேலும் அதிகமாக பல்வகைப்படுத்தப்படுகிறது.

**அட்டவணை சி.கு. 1.1 தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் செறிவு விகிதம் (2011 மொ.உ.உ.யினை அடிப்படையாகக் கொண்டது (தேசிய நாணயங்களின் நிலையான விலைகளின்))**

குழு அ

| | |
|---|---|
| சிலி | 13.85 |
| ஜமைக்கா | 13.87 |
| குவைத் | 19.46 |
| மலேசியா | 14.50 |
| கட்டார் | 24.26 |
| தென்னாபிரிக்கா | 14.59 |
| **இலங்கை** | **14.46** |
| தாய்லாந்து | 16.63 |
| வியட்னாம் | 16.00 |

கருதப்பட்ட பொருளாதார துறைகள் வருமாறு
- வேளாண்மை, வேட்டையாடல், காடாக்கல், மீன்பிடி
- சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்
- தயாரிப்பு
- மின்சாரம், வாயு மற்றும் நீர் வழங்கல்
- கட்டடவாக்கம்
- மொத்த விற்பனை, சில்லறை வர்த்தகம், மோட்டார் வாகனங்களின் பழுதுபார்ப்பு, மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தனியார் மற்றும் வீட்டுத்துறை பொருட்கள், உண-வகம் மற்றும் உணவு விடுதிகள்
- போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பாடல்கள்
- நிதியியல் இடையீடுகள், மெய் ஆதனம், வாடகை மற்றும் வியாபார நடவடிக்கைகள்
- அரச நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு: கட்டாய சமூக பாதுகாப்பு
- கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள், ஏனைய சமூகம்சார், சமூகம் மற்றும் தனியார் பணிகள்
- தொழில் செய்யும் நபர்களுடனான தனியார் வீட்டுத்துறையினர்

குழு ஆ

| | |
|---|---|
| அவுஸ்திரேலியா | 11.60 |
| பின்லாந்து | 14.71 |
| பிரான்ஸ் | 13.66 |
| ஜேர்மனி | 14.09 |
| கிரேக்கம் | 14.66 |
| இத்தாலி | 13.32 |
| கொரியா | 16.74 |
| நோர்வே | 13.99 |
| போர்த்துக்கள் | 14.51 |


கருதப்பட்ட பொருளாதார துறைகள் வருமாறு
- வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி
- தயாரிப்பு
- சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும், ஏனைய கைத்தொழில் நடவடிக்கைகள்
- கட்டடவாக்கம்
- மொத்த விற்பனையும் சில்லறை வர்த்தகமும், போக்குவரத்தும் களஞ்சியப்படுத்தலும், வசதிப்படுத்தல் மற்றும் உணவு பணிகள் நடவடிக்கைகள்
- தகவல் மற்றும் தொடர்பாடல்
- நிதியியல் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள்
- மெய் ஆதன நடவடிக்கைகள்
- தொழில்சார், விஞ்ஞானம் சார், தொழில்நுட்ப, நிருவாக மற்றும் துணைச் சேவை நடவடிக்கைகள்
- பொது நிர்வாகமும் பாதுகாப்பும், சமூக வேலை நடவடிக்கைகள்
- ஏனைய பணிகள் நடவடிக்கைகள்

பன்னாட்டு கைத்தொழில் வகைப்படுத்தல் நியமத்தின் 3 மற்றும் 4இன் திருத்தத்திற்கு இணங்க முறையே குழு அ மற்று ஆ என்பவற்றில் உள்ள நாடுகளின் தரவுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மூலம் : தேசிய கணக்கீடுகள் அலுவல்சார் நாட்டு தரவு - ஐக்கிய நாடுகளின் புள்ளிவிபரங்கள் பிரிவு
குறிப்பு : சிலி நாட்டிற்கான தரவானது “தொழில்பெற்ற நபர்களுடனான தனியார் வீட்டுத்துறை” என்ற வகையினை உள்ளடக்கவில்லை

1 *Pritchett (1998)*
2 *Shediac et.al. (2008), “Economic Diversification: The Road to Sustainable Development”* என்பதிலிருந்து பின்பற்றப்பட்டுள்ளது.

**வரைபடம் சி.கு.1.1 செறிவு விகிதம் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் தளம்பல்**




மூலங்கள் : தேசிய கணக்கீடுகள் அலுவல்சார் நாட்டுத்தரவு - ஐக்கிய நாடுகளின் புள்ளிவிபரங்கள் பிரிவு, உலகபொருளாதார தோற்றப்பாட்டு தரவுத்தளம் - ஒத்தோபர் 2013 - பன்னாட்டு நாணய நிதியம்

அதேநேரம் சில நாடுகள் இயற்கை வளங்களில் செல்வந்த நாடுகளாக காணப்படாதபோதிலும் அவை பொருளாதாரத்தில் பன்முகப்படுத்தலை மேற்கொண்டிருந்தன.


வரைப்படம் சி.கு.1.1 காட்டப்பட்டவாறு வளர்ச்சி வீதத்தின் செறிவு வீதம் மற்றும் நியம விலகல் என்பவற்றுக்கிடையில் நேர்க்கணியத் தொடர்பினை அவதானிக்க முடிகிறது. உயர்ந்தளவான செறிவு வீதம் என்பது ஒன்று அல்லது இரண்டு துறைகளை நோக்கிய செறிவாக்கப்பட்ட ஓர் பொருளாதாரத்தை குறிப்பதுடன் உயர்ந்தளவான நியமவிலகலானது அதிக தளம்பலான வளர்ச்சியை குறிக்கிறது. அதாவது உறுதியற்ற பொருளாதாரமாகும். உறுதி குறைந்த பொருளாதாரம் காணப்படுகையில் சில துறைகள் நோக்கி ஒரு பொருளாதாரமானது அதிகளவில் செறிவுபடுத்தப்பட்டுள்ளதாக கருதப்படுகிறது. வேறுவிதமாக கூறினால் நன்கு பல்வகைப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் பொருளாதார வளர்ச்சியானது செறிவு செய்யப்பட்ட பொருளாதாரத்தினை விட அதிக நிலையானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இந்த ஆய்வு பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் மற்றும் காலப்பகுதி என்பவற்றின் தெரிவுக்கு முக்கியமானதாக கருதப்படுகிறது. எனவே ஒரு பொதுவான அவதானிப்பு பெறப்படுகிறது. இருப்பினும் அதிகமாக பல்வகைப்படுத்தப்பட்ட பொருளாதாரமானது குறைந்தளவான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் என்பதனை கொள்கை வகுப்பாளர்கள் ஒரு சில துறைகளை நோக்கிய செறிவாக்கப்பட்ட வளர்ச்சியினை விட பொருளாதாரத்தில் அதிக சமநிலை வளர்ச்சிக்கு இலக்கிட வேண்டும் என கூறுகிறது. ஆகையால் நாடுகள் குறிப்பாக நாட்டின் சிறந்த துறைகளிலிருந்து பெறப்பட்ட வெற்றிகளின் மூலம் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். ஏனைய சில தோற்றம் பெற்றுவரும் நாடுகளை காட்டிலும் இலங்கையில் வெளியீடானது ஒப்பிடக்கூடிய அளவில் பல்வகைப்படுத்தப்பட்டுள்ளது என ஏனைய நாடுகள் பரிந்துரைக்கும் நோக்கில் காணப்படுவதுடன், மேற்குறிப்பிட்ட ஆய்வு இலங்கையில் ஒப்பிட்டளவில் குறைந்த செறிவு வீதமே காணப்படுகிறது என்பதனை சுட்டிக்காட்டுகிறது.

### இலங்கையின் நிலை

வெளிநாட்டு வர்த்தகம் பொருளாதார தளம்பல்களை குறைப்பதற்கு உதவியுள்ளதாக சான்று பகர்கின்றது.[3] எனினும் வரைபடம் சி.கு. 1.3இல் காட்டப்பட்டவாறு சில நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் ஏற்றுமதிகளானவை உயர்வாகக் காணப்பட்ட போதும் பொருளாதார தளம்பல் நிலை குறைவாகக் காணப்படுகிறது. எனினும் வரைபடம் சி.கு.1.3இல் குறிப்பிட்டவாறு சில நாடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் ஏற்றுமதிகள் உயர்வாக காணப்பட்ட போதும் பொருளாதார தளம்பல்களும் உயர்வாகக் காணப்பட்டது (உதாரணம் குவைத் மற்றும் கட்டார்). இதற்கான காரணம் ஏற்றுமதி பன்முகப்படுத்தலாகும். மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் உயர்மட்டு ஏற்றுமதிப் பன்முகப்படுத்தலை கொண்டிருந்த அதேவேளை (குறிப்பாக தயாரிப்பு ஏற்றுமதிகள்) குவைத் மற்றும் கட்டார் போன்ற அவ்வாறு காணப்படவில்லை. இலங்கையை பொறுத்தமட்டில் ஏற்றுமதிப் பங்கு மற்றும் தளம்பல் நிலை ஆகிய இரண்டும் ஒப்பிட்டளவில் குறைவாக உள்ளதுடன் இவை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறைந்த பங்களிப்பை வழங்குவதனை காட்டுகின்றது. ஏற்றுமதி பன்முகப்படுத்தலானது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக காணப்படுகிறது. இது குறிப்பாக ஆடைகளால் (தைத்த ஆடைகள்) குறிக்கப்படும் தயாரிப்பு ஏற்றுமதியின் காரணமாக ஏற்பட்டதாகும். சேவை ஏற்றுமதியை பொறுத்தமட்டில் பன்முகப்படுத்தலின் ஒரு குறிப்பிட்ட மட்டம் காணப்படுகிறது. ஆனால் முன்னேற்றங்கள் சேவை ஏற்றுமதிகளை மேலும் பன்முகப்படுத்தலின் மூலம்

3 Shediac et.al. (2008), "Economic Diversification: The Road to Sustainable Development".

**வரைபடம் சி.கு.1.2 மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக ஏற்றுமதிகளும் பொருளாதார வளர்ச்சியின் தளம்பலும்**




மூலங்கள் : உலக பொருளாதார தோற்றப்பாட்டு தரவுத்தளம் - ஒத்தோபர் 2013 - பன்னாட்டு நாணய நிதியம், உலக அபிவிருத்தி குறிகாட்டிகள் - உலக வங்கி

உருவாக்கப்படுகிறது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சில வளர்ந்துவரும் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான ஏற்றுமதியின் பங்கு ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகிறது. குறிப்பாக சிறிய நாடுகளின் வரையறுக்கப்பட்ட உள்நாட்டு அதிக வருமானம் பெறும் நாடுகளுக்குள் முன்னேறும் பொருட்டு ஏற்றுமதி மேம்படுத்தல்கள் ஒரு வெற்றிகரமான உபாயமாக கொள்கை வகுப்பாளர்கள் தங்களின் மேலதிக கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாக இது இருக்கின்றது. மேலும் ஏற்றுமதி பன்முகப்படுத்தலானது நிலைத்திருக்கும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் ஏதுநிலையை குறைப்பதற்கும் தீவிரமாக பின்பற்றப்பட வேண்டும்.

மேலும் வெளியீடு மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தலானது உயர்தரத்திலான கல்வி மற்றும் தேர்ச்சிகள் என்பவற்றின் மீதான முதலீடுகள், தொழில்நுட்பத்தினுடைய பரிமாற்றல்கள், முன்னேற்றமடைந்த உட்கட்டமைப்பு மற்றும் தொடர்புத்தன்மை, ஊழியச் சந்தை இறுக்கத்தன்மையின் குறைப்பு, ஆய்வு மற்றும் அபிவிருத்தியின் ஊக்குவிப்பு, சொத்துரிமைகளின் மேம்படுத்தல், நிறுவன ரீதியான மற்றும் சட்டரீதியான கட்டமைப்புக்களின் புதுப்பித்தல் மற்றும் பாரிய பிராந்திய ஒருங்கிணைப்பு என்பனவற்றால் துணைபுரியப்படும்.

**பொருளாதார பன்முகப்படுத்தலுக்கான உபாயங்கள் - ஐந்து மைய நிகழ்ச்சித்திட்டம்**


பொருளாதார நடவடிக்கைகளை மேலும் பல்வகைப்படுத்துவதற்கும் ஏற்றுமதிகளின் அளவு மற்றும் பல்வகைப்படுத்தல்களை அதிகரிப்பதற்கும் அரசாங்கத்தில் உருவாக்கப்பட்ட ஒரு முக்கிய திட்டமாக ஐந்து மைய நிகழ்ச்சித்திட்டம் காணப்படுகிறது. இந்நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையின் நிலையான அபிவிருத்தி மற்றும் உயர்ந்த வருமானத்தினை அடைதல் மற்றும் நாட்டினை உலகின் ஒரு முக்கிய உபாயரீதியிலான பொருளாதார மையமாக மாற்றுதல் போன்ற நோக்குகளுடனான "மகிந்த சிந்தனை - எதிர்கால நோக்கு" என்பதனூடாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த மையங்கள் இலங்கை புவியியல் ரீதியாக கொண்டுள்ள நிலைமைகள் மற்றும் நாடு என்ற வகையில் அதன் உள்ளார்ந்த பலங்கள் என்பவற்றினை கவனத்தில் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. கடல்சார், விமானப் போக்குவரத்து, வர்த்தகமும் சுற்றுலாவும், அறிவு மற்றும் சக்தி போன்ற ஒவ்வொரு பரப்புக்களின் போட்டித்தன்மையை அடைதல் நாட்டிற்கான புதிய பலங்களை உருவாக்கும் வேளையில் தேயிலை மற்றும் தைத்த ஆடைக் கைத்தொழில் போன்ற இலங்கையின் பாரம்பரிய பலமான துறைகளில் போட்டித்தன்மையை பேணுகின்றது. இவ் உபாய திட்டத்திற்கு பின்னாலுள்ள கருத்தாக புதிய நட்சத்திரங்களை உருவாக்குதல் இருக்கும் வேளையில் பாரம்பரிய வெற்றியடையும். எனவே நாடு சுமூகமானதொரு உயர்ந்த வருமான மட்டம் நோக்கி முன்னேறும்.

மைய உபாயம் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொடக்க முயற்சிகள் ஒன்று அல்லது இரண்டு துறைகளுக்கு மட்டும் அபிவிருத்தி முயற்சிகளை வரையறுக்காததன் மூலம் முக்கியமாக பல்வகைப்படுத்தல்களின் கருத்துக்களை கொண்டு செல்கின்றன. மைய உபாய நியதிகளின் அடிப்படையில் கீழ்வரும் சில முக்கிய அடைவுகள் மற்றும் இதுவரை எடுக்கப்பட்ட தொடக்க முயற்சிகள் என்பனவற்றை அடையாளம் காணக்கூடியதாகவுள்ளது.

**கடல்கள் மையம்**

இலங்கை கடலோட்ட மற்றும் கடல்சார் கைத்தொழில்களின் போட்டி நன்மைகளை பெற்றுக்கொள்வதற்காக முழு உலகின் சிறந்ததொரு இடத்தில் அமைந்துள்ளது. இதன் அடிப்படையில் நாடு பண்டைய காலத்திலிருந்து அதன் அமைவிடம் செழிப்படைந்து புகழ்பெற்று வருகிறது. அத்துடன் கடலோர கைத்தொழில் அபிவிருத்தி மூலம் அரசாங்கம் இவ் உபாய நன்மைகளை அதிகப்படுத்த எதிர்பார்க்கிறது. இது தொடர்பாக அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி (கட்டம், பூர்த்தியாக்கப்பட்டது) கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்தி (அலைதாங்கி மற்றும் உட்கட்டமைப்பின் ஒரு பகுதி பூர்த்தியாக்கப்பட்டது). புதிய முனையங்கள் ஊடாக கொழும்பு துறைமுக விரிவாக்கம் (தெற்கு கொள்கலன் முனையம், கிழக்கு கொள்கலன் முனையம்) கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டைப் பகுதிகளின் துறைமுக நகர அபிவிருத்தி போன்றவை செயற்பாட்டிலுள்ள சில தொடக்க முயற்சிகளாகும். அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான முதலீடுகள் நாட்டினுடைய வீதி வலையமைப்பின் அபிவிருத்திக்காக செய்யப்பட்டுள்ளதுடன் இது துறைமுகங்கள், வானூர்தி நிலையங்கள் மற்றும் பிரதான நகரங்கள் போன்றவற்றுக்கிடையேயான தொடர்புகளை மேம்படுத்தும் நோக்குடன் கடல்சார் மைய அபிவிருத்திகளுக்கான

வரைபடம் சி.கு.1.3 ஏற்றுமதி பன்முகப்படுத்தல்




மூலம் : உலக வர்த்தக நிறுவனம்

ஊக்கியாகவும் காணப்படுகிறது. அதேநேரம் நாடு இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய பல சவால்கள் காணப்படுகின்றன. கடல்சார் கைத்தொழில்களுக்கு தேவைப்படும் திறன்களின் அபிவிருத்தி செய்தல், கடல்படுகை சம்மந்தமான ஆய்வுகளை மேற்கொள்ளல் சட்டரீதியான நடைமுறைகளுக்கு ஆதரவளித்தல், புகழ்பெற்ற கம்பனிகளை இலங்கைக்குள் ஈர்த்தல், கப்பல் கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல், சிறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல், ஆராய்ச்சி செயற்பாடுகளில் ஈடுபடுதல், சட்டத்தை பின்பற்றுதல், கடற்கரைகளுக்கு அப்பால் ஓய்வு நடவடிக்கைகளில ஈடுபடலை விரிவாக்குதல் போன்றவை எதிர்காலத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய சில விடயப் பரப்புக்களாகும்.

**விமான போக்குவரத்து மையம்**

இலங்கை உலகின் பல பிரதான விமான வழித்தடங்களுக்கு அருகில் அமைந்துள்ளது. பெரும்பாலான பிரதான நகரங்களை இலங்கையிலிருந்து ஒரு சில மணித்தியாலங்களுக்குள் சென்றடையக் கூடியதாகவுள்ளது. எனவே துபாய், சிங்கப்பூர் போன்ற நாடுகளைப் போல இலங்கையும் ஒரு விமான போக்குவரத்து மையமாக வருவதற்கான உயர்ந்த சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முக்கிய தொடக்க முயற்சிகளில் ஒன்றாக மகிந்த ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்தி நிலையம் காணப்படுகிறது. மகிந்த ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்தி நிலையம் நாட்டின் இரண்டாவது பன்னாட்டு வானூர்தி நிலையமாக காணப்படுவதுடன் பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் காணப்படாத அளவில் அதிகளவான பயணிகளுக்கு சேவை வழங்கக்கூடிய இயலளவையும் கொண்டுள்ளது. மேலும் பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தினை நவீனமயப்படுத்தல், இரத்மலானை, அம்பாறை, இரணைமடு, அநுராதபுரம், சீனக்குடா போன்ற உள்ளூர் வானூர்தி நிலையங்களை முன்னேற்றுதல், கப்பற்படையை விரிவாக்குதல், உள்ளூர் விமானப் பயணிகள் போக்குவரத்தினை மேம்படுத்துதல், பயிற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் ஆராய்ச்சிகளை வசப்படுத்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்ட புதிய நடவடிக்கைகளாகும். ஒரு பலமான மற்றும் பன்னாட்டு ரீதியாக புகழ்பெற்ற கொடியானது பிராந்தியத்தின் விமான போக்குவரத்து மையமாக வருவதற்கான முக்கிய கூறாக காணப்படுகிறது. எனவே முதலீடுகள் குறிப்பாக தேசிய விமானசேவை, ஸ்ரீலங்கன் விமானசேவை போன்றவற்றின் அபிவிருத்திக்கு தேவைப்படுகின்றன. கப்பல்படை தேவைகள் அதிகரிக்கப்படுவதுடன் சேருமிடங்களுடன் விமானங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதன் மூலம் தொடர்புகளை விரிவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. வெற்றிபெறும் நோக்கில் இலங்கை ஒரு நல்ல தளமாக மட்டுமல்ல பயணிகள் இடமாறும் இடமாகவும் வருதல் வேண்டும். மேலும் மைய நிலமையினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஏனைய விமான சேவைகளை கவருவதற்காக அதிக நன்மையான விமான போக்குவரத்து சேவை நிலையமாக மாறுதல் வேண்டும்.

**வர்த்தக மற்றும் சுற்றுலா மையம்**

தற்போதைய உட்கட்டுமான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுடன் இணைந்து வர்த்தக மையம் வர்த்தகப் பணிகள், பன்னாட்டு வங்கியியல் மற்றும் பன்னாட்டு முதலீடு போன்ற விடயங்களில் ஆசியாவின் மிக முக்கியமான வர்த்தக நிலையங்களில் ஒன்றாக இலங்கையை நிறுவுதலின் எதிர்பார்ப்புக்களுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்தினை முடிவுக்கு கொண்டு வந்தமை மற்றும் விரைவான மாகாண அபிவிருத்திகளில் சுற்றுலாத்துறை ஓர் மையமாக மீள நிர்ணயிக்கப்பட்டு அத்துறையினை மேம்படுத்துவதற்கான உபாயங்களும் திட்டமிடப்பட்டுள்ளன. நாட்டினை வர்த்தக மையமாக மேம்படுத்தும் பொருட்டு கொழும்பு நகரம் மற்றும் ஏனைய முக்கிய நகரங்கள் நடுத்தர வருமான நாடுகளின் சூழல் நண்பரான நவீன நகரங்களுடன் இணைந்து செல்லும் வகையில் மேம்படுத்தப்பட இருக்கும் வேளையில் இந்நகரங்கள் தென்னாசியாவின் வர்த்தக மையங்களாகவும் உருவாக்கப்படும். இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் சில நடவடிக்கைகளாக சுத்தமான மற்றும் பசுமையான நகர கொள்கையினூடாக கொழும்பினை வெள்ளப்பெருக்கற்ற சுத்தமான பகுதியாக உருவாக்குதல், மீன் சந்தை மீளமைப்பு மற்றும் கோட்டே பகுதிக்கு வெளியே அதிக போக்குவரத்தினை திருப்புதல் மூலம் போக்குவரத்து நெரிசலைத் தணித்தல், ஸ்ரீ ஜயவர்த்தனபுர நகரத்தினை மேம்படுத்துதல் மூலமும் மற்றும் சில நிர்வாக அலுவலகங்களை கோட்டைக்கு நகர்த்துவதன் மூலமும் அந் நகரத்தினை நிர்வாக தலைநகராக மீள நிலையிடுதல், வீடற்றோருக்கு நவீன வீடமைப்புத் திட்டங்களை அமைத்தல், பேரி வாவி மற்றும் அதனது சுற்றுப்புறத்தினை மேம்படுத்தல், பழைய கட்டிடங்களை மீள நிர்மாணித்தல் (உதாரணம்:- ஒல்லாந்தர் வைத்தியசாலை, குதிரைப் பந்தயத்திடல், காலி ஒல்லாந்தர் வைத்தியசாலை, தேசிய கூட்டு கட்டிடங்கள், மெருகூட்டிய நிலங்கள், ஏனையவை) கொழும்பிற்கு வெளியேயான நகர அபிவிருத்தி கருத்திட்டங்களான மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், நுவரெலியா மற்றும் ஏனைய சிறிய அபிவிருத்தி செயற்றிட்டங்களை மேற்கொள்ளல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இச் செயற்றிட்டங்களின் குறிப்பிடப்பட்ட பகுதிகளின் (உ-ம்:- மீககிவுல, தன்கொட்டுவ, கோமாகம போன்றவை) அபிவிருத்தி நடவடிக்கைகளில் தனியார் நிறுவனங்கள் அனுசரணையளிப்பதன் மூலம் தனியார் துறையின் பங்கேற்புக்களும் காணப்படுகின்றன. மேலும் பாரிய செயற்றிட்டங்களான சங்கிரி -லா விடுதி, கப்பல் நகரம், லோடஸ் கோபுரம், இந்தோனேசியன் கோபுரம் மற்றும் ஏனைய பல்வேறு ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுலா அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் போன்றனவும் கொழும்பு நகருக்குள் சுற்றுலாப்பயணிகளையும் புதிய வியாபாரங்களையும் கவரும் எனவும் எதிர்பார்க்கப்பட்டன. எனினும் வெறுமனே உட்கட்டுமானங்களினால் எதிர்நோக்கப்பட்ட வெளிப்பாடுகளை உணரமுடியாது. முதலீட்டாளர்கள் அவர்களது முதலீடுகளை மேற்கொள்ளும் போது வரிக்கட்டமைப்பு, சட்டமுறைமை, வியாபாரம் செய்தலின் இலகுத்தன்மை மற்றும் நிலையான கொள்கைகள் என்பவற்றையும் கருத்தில் கொள்வார்கள். எனவே இலங்கை இவ்விடயங்களில் சிறப்பான இசைவினைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இது தொடர்பாக அம்பாந்தோட்டை, கொழும்பு மற்றும் மாத்தளையில் துறைமுகம் மற்றும் வானூர்தி நிலையங்களைச் சூழ்ந்த பகுதிகளில் இலவச துறைமுக மற்றும் இலவச வர்த்தக வலயங்கள் நிறுவப்படும். சுற்றுலாவின் நியதிகளில் நாட்டின் விடுதி அறைகளை அதிகரிப்பதற்கான முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல இடங்களில் நட்சத்திர விடுதிகள் அமைக்கப்பட்டு வரும் வேளையில் உள்நாட்டு மட்ட குடியிருப்புக்களும் கணிசமானளவில் அதிகரித்துள்ளன. சுதந்திரத்திற்கு பிந்திய யுகத்தில் இலங்கை உலகின் பல நாடுகளின் மத்தியில் கவரத்தக்க சுற்றுலா அமைவிடமாக மதிக்கப்படுகின்றது. பாரம்பரியமாக பல சுற்றுலாப்பயணிகள் ஐரோப்பிய நாடுகளில் இருந்தே இலங்கைக்கு வருகை தருகின்றனர். அத்துடன் அவர்கள் அடிப்படையில் நாட்டின் பாரம்பரிய கலாச்சாரம் மற்றும் இயற்கை அழகினால் கவரப்பட்டனர். முன்னோக்கிச் செல்கையில் இலங்கை, இந்தியா, சீனா, மத்திய கிழக்கு மற்றும் ஏனைய

ஆசிய நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளைக் கவருதல் வேண்டும். எனவே சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் இப்பூகோள இடங்களினை இலக்குவைத்து மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**அறிவுமையம்**

அறிவுமைய எண்ணக்கரு பல்வேறு நிபுணத்துவம் வாய்ந்த தொழில்களில் நன்கு கல்விகற்ற இளையோர் அனுகூலங்களைப் பெறுதல், கல்வி முறைமையை மேம்படுத்தல் மற்றும் நிபுணர்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்களை நாட்டிற்குள் வரவழைத்தல் போன்ற பரந்த நோக்கங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை உயர்நடுத்தர வருமான நாட்டினை நோக்கி நகருதலை நோக்காகக் கொண்டமையால் கல்வி முறைமையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் மக்களின் தேர்ச்சிகளை மேம்படுத்தல் என்பன மிகவும் முக்கியமானதாகும். உண்மையில் மேம்பட்ட தேர்ச்சிகளினை அபிவிருத்தி செய்தலில் முதலீடு செய்தல் நடுத்தர வருமானப் பொறியினைத் தவிர்ப்பதற்கான சிறந்த உபாயங்களின் ஒன்று என பல நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே இவ் வேளையில் கல்வி முறைமை மேம்பாடு புத்துருவாக்கத்தினைத் தூண்டும் பொருட்டு ஆராய்ச்சி நடவடிக்கைகளின் மேம்பாடு என்பன நாட்டிற்கு முக்கியமானதாகும். தற்போது நாட்டின் உயர் கல்வி முறைமையினை மேம்படுத்துவதற்கு பல்வேறு முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த சில வருடங்களாக புதிய பீடங்கள் திறக்கப்பட்டன. புதிய பட்டப்படிப்பு கற்கைகள் சுற்றுலா போன்ற விடயங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் உயர் கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் கைத்தொழிலாளர் வேண்டப்படும் தொழிலுக்கமர்த்தக்கூடிய பட்டதாரிகளை உருவாக்கக் கூடிய உயர் கல்வி முறைமையில் ஓர் பரிமாண நகர்வு இடம்பெறுகிறது. அறிவினை விடவும் தேர்ச்சிகள், நடத்தைகள் மற்றும் உள்ளக்கருத்துக்களும் இப் புதிய பரிமாண கல்விச் சூழலில் முன்னுரிமையளிக்கப்படுகிறது. அதேநேரம், ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உயர் கல்வி நிறுவனங்களுடன் தனியார் துறை நிறுவனங்களும் இணைதலை ஊக்கப்படுத்தப்பட்டது. கல்வி முறைமையின் போட்டித் தன்மை மேம்படுத்தப்பட வேண்டி இருப்பதுடன் பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார்துறையினரிடையேயான விசேடமாக ஆராய்ச்சி நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட இணைப்பு மேம்படுத்தப்படல் வேண்டும்.

**வலு மையம்**

உலகம் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட எண்ணெய் விலை அதிர்ச்சிகளினால் பாதிப்படைந்துள்ளதுடன் வலு கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கான பல நாடுகள் படிம எரிபொருளில் தங்கியிருத்தல் அதிகமாகக் காணப்படுகிறது. எனினும் படிம எரிபொருள் அற்றுப் போய்க்கொண்டிருக்கும் வளமாகும் அதனால் வலு உருவாக்கத்திற்கான புதிய வழிமுறைகள் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும். பயங்கரவாதத்தின் முடிவுடன் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு கடல்கள் திறக்கப்பட்டு படிம எரிபொருள் வளங்கள் இனங்காணப்பட்டுள்ளன. மன்னார் படுகையில் இருக்கும் என நம்பப்படுகின்ற எண்ணெய் மற்றும் வாயு வைப்புக்களினைப் பிரித்தெடுப்பதன் சாத்தியத் தன்மையினை இனங்கண்டு கொள்வதற்கான ஆராய்ச்சி நடவடிக்கைகள் தற்போது செயற்பாட்டிலுள்ளன. இப்படிம எரிபொருள் வைப்புக்கள் வர்த்தக ரீதியில் நிலைத்திருக்கத்தக்க அடிப்படையில் பிரித்தெடுக்கப்படுமானால் நாட்டிற்கு பாரிய நன்மையளிக்கக்கூடியதாக அமையும். எனினும் அதேநேரம் படிம எரிபொருள் யுகம் அதனது முடிவினை அண்மித்துள்ளது என்ற விடயத்தினையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இப்பின்னணியில் புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களினைத் தேடுதல் நாட்டிற்கு அவசியமானதாகும். இவற்றைக் கருத்தில் கொள்கையில் பாரியளவிலான நீர் மின் தற்போது பயன்படுத்தப்படுகின்றது. எனினும் மரபு சாரா புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களையும் மேம்படுத்தல் அவசியமானதாகும். படிம எரிபொருளுடன் ஒப்பிடுகையில் பலராலும் சுட்டிக்காட்டிய குறைபாடுகளின்படி இம் மூலங்கள் உயர்வான செலவைக் கொண்டுள்ளன. எனினும், தொழில்நுட்ப மேம்பாடுகளினால் நீண்டகாலத்தில் ஆயட்கால கிரயம் குறைக்கப்படலாம். எனவே கிரயத்தினை குறைப்பதற்கான இயலுமை ஆய்வு மேலும் பகுப்பாய்வு செய்யப்படல் வேண்டும்.

மேலே கூறப்பட்டதன்படி ஐந்து மையங்கள் நிகழ்ச்சித் திட்டமானது ஒன்று சேர்த்தல் உத்வேகமாகும். அத்துடன் அரசாங்கம் ஏற்கனவே அத்தியாவசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நியதிகளில் கணிசமானளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. எனினும் பல விடயங்களில் மேலும் மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட முடியும். இம்மையங்களின் நடவடிக்கைகளினிடையே அதிகளவான ஒருங்கிணைப்பு தேவைப்படுத்தப்படுகின்றது. அத்துடன் இவ் விடயங்களில் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கு அதிக முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அதிக முதலீடுகளும் கவரப்பட்டன. தனியார் துறையின் ஈடுபாடு இதுவரை குறைவாகவே காணப்படுகின்றமையினால் மேம்படுத்தப்படல் வேண்டும். மேலும் தொழிற்படையின் தேர்ச்சிகள் புதிதாக உருவாக்கப்பட்ட தொழில் சந்தர்ப்பங்களுடன் இணங்கிக் காணப்படல் வேண்டும்.

முன்னோக்கிச் செல்கையில் இவ் மையங்கள் மத்தியிலான கூட்டாற்றல்கள் இனங்காணப்பட வேண்டியுள்ளதுடன் இனங்காணப்பட்ட உபாயங்களின் நடைமுறைப்படுத்தலை வசதிப்படுத்துவதற்கு ஒட்டுமொத்த ஒருங்கிணைக்கப்பட்ட கொள்கை கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு பொறிமுறை நடைமுறைப்படுத்தல் வேண்டும். இது தொடர்பாக மையங்களிடையே இணைப்பினை அடையாளம் கண்டுகொள்ளல் அவசியமானதாகும். ஒரு மையத்தின் அபிவிருத்தி ஏனைய மையங்களின் அபிவிருத்தியினை வசதிப்படுத்துவதுடன் இந் நிகழ்ச்சித்திட்டத்தினால் அளப்பரிய நன்மைகள் மற்றும் சாதகமான வெளிவாரி விளைவுகள் என்பன ஏற்படும். ஐந்து மையங்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தல் உயர்ந்த, உறுதியான மற்றும் நிலைத்திருக்கத்தக்க வளர்ச்சியுடனான ஓர் அதிக பல்வகைமைப் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும்.

உசாத்துணைகள்

Ceylon Electricity Board, http://www.ceb.lk.

Department of National Planning, "Unstoppable Sri Lanka 2020 – Public Investment Plan 2014-2016", Ministry Of Finance and Planning – Sri Lanka, 2010.

Mahinda Chintana - Vision for the Future, 2010.

Ministry of Civil Aviation, http://www.aviationmin.gov.lk.

Ministry of Higher Education, http://www.mohe.gov.lk.

Pritchett, L., "Patterns of Economic Growth: Hills, Plateaus, Mountains, and Plains", The World Bank e Library, 1998.

Shediac, R., Abouchakra, R., Moujaes, C.N., & Najjar, M.R., "Economic Diversification: The Road to Sustainable Development", Booz & Company, 2008.

Sri Lanka Ports Authority, http://www.slpa.lk.

Urban Development Authority, http://www.uda.lk.

தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினையும் பலப்படுத்தும்.

**ஏற்றுமதி உற்பத்திகளையும் சந்தைகளையும் பன்முகப்படுத்துவது வெளிநாட்டு அதிர்வுகளினால் நாடு பாதிக்கப்படும் தன்மையைக் குறைப்பதற்கு இன்றியமையாததாகும்.** இலங்கையின் ஏற்றுமதி அமைப்பானது 1960 களில் வேளாண்மைப் பொருட்களின் ஆதிக்கத்தனத்திலிருந்து புடவைகள், ஆடைகள் மற்றும் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளுடன் கூடிய மிக மென் தயாரிப்புத் தளத்திற்கு பெயர்ந்துள்ளது. எனினும், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் ஒரு சில பண்டங்களிலேயே தங்கியிருக்கிறது. 1960 களில் தேயிலை போன்ற முதன்மைப் பண்டங்கள் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் 2013இல் தேயிலை மற்றும் புடவை மற்றும் ஆடை ஆகிய இரண்டும் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 58 சதவீதத்திற்கு வகைகூறின. ஏற்றுமதித் துறையில் உற்பத்திகளை பெருமளவிற்கு பன்முகப்படுத்துவது, உலகப் பண்ட விலைகளில் ஏற்படும் கடுமையான வீழ்ச்சி அல்லது உலகளாவிய மந்தம் போன்ற போதுமான வெளிநாட்டு அதிர்வுகளுக்கும் அதேபோன்று கடுமையான வரட்சி போன்ற உள்நாட்டு அதிர்வுகளுக்கும் ஏற்றுமதி வருவாய்கள் பாதிக்கப்படக்கூடியதாக இருக்கும் தன்மையினைக் குறைப்பதற்கு உதவும். பெறுமதிகூட்டல்களை மேம்படுத்துவதற்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதும் பின்னணித் துணைத் தொழில் வகைகளை ஒருங்கிணைப்பதும் அதேபோன்று புத்தம்புது விடயங்களுக்கான நிறுவன ரீதியான உதவி என்பன உற்பத்திமட்ட தளத்தினை விரிவாக்குவதற்காக பின்பற்றப்பட்ட சில கொள்கைகளாகும். ஐந்து மைய உபாயம் நடுத்தர காலப்பகுதியில், பொருளாதார நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதற்கும் ஏற்றுமதி வருவாய்களை விரிவாக்குவதற்கும் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட வரவேற்கத்தக்க முயற்சியொன்றாகக் காணப்பட்டது. உலகளாவிய வர்த்தக அடையாளங்களை விருத்தி செய்வதற்கு உள்நாட்டுக் கம்பனிகளுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவது, பாரம்பரியமற்ற சந்தைகளுக்குள், குறிப்பாக தோற்றம் பெற்றுவரும் சந்தைகளுக்குள் நுழைவதற்கான வழிவகைகளை அதிகரிப்பதற்கான முக்கியமான உபாயமொன்றாக இருக்கும். பாரம்பரியமற்ற சந்தைகளுக்குள் ஆடைக் கைத்தொழில் பெருமளவிற்கு நுழைந்து கொண்டிருக்கின்ற வேளையில் ஐரோப்பிய ஒன்றியமும் ஐக்கிய அமெரிக்காவும் இலங்கையிலிருந்தான புடவைகள் மற்றும் ஆடை ஏற்றுமதிகளுக்கான சந்தையில் ஏறத்தாழ 89 சதவீதத்திற்கு வகைகூறின. அதேவேளை, தேயிலையைப் பொறுத்தவரை மத்திய கிழக்கு மற்றும் சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம் மொத்தத் தேயிலை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு வகைகூறின. ஏற்றுமதி நாடுகளின் புவியியல் பரப்பினை பன்முகப்படுத்தலை அதிகரிப்பது அண்மைக் காலத்தில் கூடியளவு கவனத்தினைப் பெற்றுவரும் இன்னொரு துறையாகும். இருபுடை மற்றும் பல்புடை வர்த்தக உடன்படிக்கைகளின் பயன்பாட்டினை மேம்படுத்துவது மற்றும் ஆரம்பப் பிரமாணம் பற்றிய விதிகள், தீர்வை மற்றும் தீர்வையற்ற தடைகள் மற்றும் வர்த்தக உடன்படிக்கைகளின் விளைவாக தோன்றக்கூடிய புதிய சந்தை வாய்ப்புக்கள் என்பன தொடர்பில் ஏற்றுமதியாளர்களுக்கு அறிவூட்டக்கூடிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் என்பன புதிய சந்தைக்குள் நுழைவதனை குறிப்பிடத்தக்களவிற்கு மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஏற்கனவேயுள்ள மற்றும் புதிய சுதந்திர முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபடுவது இவ்வுடன்படிக்கைகளிலிருந்தான நன்மைகளை உச்சப்படுத்துவதற்கு உதவும். தோற்றம் பெற்றுவருகின்ற சந்தைகளில் இடம்பெறுகின்ற விரைந்த வளர்ச்சியும் இப்பொருளாதாரங்களில் உயர்ந்துவரும் மத்தியதர வர்க்கத்தினரும் தோற்றம் பெற்றுவரும் சந்தைகளை நோக்கிய வர்த்தகப் பாய்ச்சல்களில் குறிப்பிடத்தக்க பெயர்வு ஏற்படக் காரணமாக இருந்தன. இவ்வபிவிருத்திகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் இடம்பெற்று வருகின்ற கூடியளவு வர்த்தகங்களுடன் இலங்கையின் உற்பத்தி உள்ளமைப்பும் ஏற்றுமதி செய்யும் நாடுகளும் படிப்படியாக மாற்றமடைகின்றன. இது நாட்டின் ஏற்றுமதி உள்ளார்ந்த வளத்தினை அதிகரிக்க உதவுமென எதிர்பார்க்கின்ற வேளையில் குறுகிய உற்பத்திகள் மற்றும் சந்தைத் தளங்களின் காரணமாக நாடு பாதிக்கப்படும் தன்மையும் குறைவடைகிறது.

**இலங்கை மத்தியதர வருமனத்திற்கும் அதற்கு அப்பாலுக்குமான அந்தஸ்தொன்றினை அடைவதற்கான முயற்சி நிதியியல் துறையின் பலத்திலும் இயக்கவாற்றலிலுமே பெருமளவிற்கு தங்கியிருக்கும்.** நிதியியல் நிறுவனங்கள் சந்தைகள் மற்றும் சாதனங்களை அபிவிருத்தி செய்து கொடுக்கல்வாங்கல் மற்றும் தகவல் செலவுகளைக் குறைப்பதற்கும் கடன் வழங்கலை அதிகரிப்பதற்கும் அவசியமானதாகும். நிதியியல் பணிகளை பெருமளவிற்குப் பன்முகப்படுத்துவதும் அவற்றை பெருமளவிற்கு அணுக முடிந்தமையும் உற்பத்தியாக முதலீடுகளுக்கு பெருமளவு சேமிப்புக்களை வழிப்படுத்தவும் இயலச்செய்யும் நிதியியல்

நிறுவனங்கள், சந்தைகள் மற்றும் சாதனங்களுடன் தொடர்பாக நிதியியல் துறையில் இடம்பெற்றுவரும் அபிவிருத்திகள், பல்வேறுபட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்காக நிதிகளைத் திரட்டி வழிப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்ற வகிபாகமொன்றினை ஆற்றுகின்றன. எனினும், வலுவான உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்ற வகிபாகமொன்றினை ஆற்றுகின்றன. எனினும், வலுவான உயர்ந்த பொருளாதார வளர்ச்சியைத் தூண்டக்கூடிய விதத்தில் நிதியியல் துறையினை மேலும் ஆழப்படுத்தக்கூடிய அநேக உள்ளார்ந்த வளங்கள் இன்னமும் காணப்படுகின்றன. அதிகரித்துவரும் உலகளாவிய இணைப்புக்களுடன் வளர்ந்துவரும் பொருளாதாரத்தின் நிதியியல் தேவைகளை ஈடுசெய்யக்கூடிய விதத்தில் வலுவான நிதியியல் நிறுவனங்களைக் கட்டியெழுப்பும் நோக்குடன் நிதியியல் துறையினை ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத் திட்டமொன்று மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டிருக்கிறது. ஒன்றிணைப்பானது மிக வினைத்திறன் மிக்கதும் இலாபகரமானதுமான கூடியளவு நிதியியல் நிறுவனங்களை உருவாகுவதன் மூலம் பொருளியல் சிக்கனத்தினை உருவாக்கவும்; நிதியியல் துறையின் இயலளவையும் தேர்ச்சியையும் உயர்த்தவும்; தகவல் தொழில்நுட்ப உள்ளார்ந்த வளத்தை தரமுயர்த்தும் வேளையில் உலகளாவிய இணைப்புக்களை மேம்படுத்தவும்; நிதியியல் துறையில் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றவும் மேம்பட்ட ஆளுகை நடவடிக்கைகளையும்; உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தவும் சந்தை நுழைவுகளை மேம்படுத்தவும் ஒருங்கிணைப்புக்கள் எதிர்பார்த்ததன் காரணமாக இத்துறையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை வலுவடைந்திருக்கிறது.

**இலங்கை உயர் வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வதனால், இலங்கையர்களின் தொழில்முயற்சிகளுக்கு நிதியிடுகின்ற முக்கியமானதொரு மூலமாக தனியார் பங்குரிமையின் வகிபாகத்தினை வலுப்படுத்துவது தவிர்க்க முடியாததாகும்.** தற்பொழுது, வங்கிக் கடன்பாடுகள் இலங்கைக் கம்பனிகளுக்கான முக்கிய நிதியிடல் வழிப்படுத்தல்களை உள்ளடக்கியுள்ளன. புதிய செயற்றிட்டங்களின் முதலீடுகளுக்கும் அதேபோன்று தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளுக்கும் வங்கிக் கடன்பாடுகளிலேயே பெருமளவிற்கு தங்கியிருக்கப்படுகிறது. எனினும், அதிகரித்த வங்கிக் கடன்பாடுகள் தொழில்முயற்சிகளின் ஐந்தொகையில் உயர்ந்த கடன்தொகை ஏற்படுவதற்கு வழிப்படுத்தும் அவர்களது ஒட்டுமொத்த இடர்நோவுகளையும் அதிகரிக்கின்றது. இது புதிய செயற்றிட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் இத்தொழில்முயற்சிகள் மேலும் விரிவடைவதற்கான இயலளவை மட்டுப்படுத்தியிருக்கிறது. வியாபாரத்திற்கு தனியார் பங்குரிமை கிடைக்கத்தக்கதாக இருப்பது தொழில்முயற்சிகள் விரைவாக வளர்ச்சியடைவதனையும் உள்நாட்டுச் சந்தையிலும் வெளிநாட்டுச் சந்தைகளிலும் போட்டித்தன்மையுடன் இருப்பதனையும் இயலச் செய்கிறது. தனியார் பங்குரிமை நிறுவனங்களை உருவாக்குவதனூடாக தனியார் பங்குரிமை நிதியிடலை ஊக்குவிக்கமுடியும். உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உயர் தேறிய பெறுமதி கொண்ட தனிப்பட்டவர்களினாலும் நிதியியல் நிறுவனங்களினாலும் இடப்படுகின்ற நிதியுடன் முக்கியமாக பட்டியலிடப்படாத வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளத்தினைக் கொண்ட நிறுவனங்களுக்கு முதலீடுகளை வழங்குவதற்கானதொரு நிறுவனமாக தனியார் பங்குரிமை நிறுவனம் முதலீட்டு நிறுவனமாக தொழிற்படுகின்றது. மூலதனங்களை வழங்குவதற்குப் புறம்பாக, பங்குரிமை நிறுவனங்கள் இடர்நேர்வு முகாமைத்துவம், வியாபார அபிவிருத்தி, சந்தை சிறப்பு மயப்படுத்தல் மற்றும் கம்பனி ஆளுகை போன்ற துறைகளில் நிபுணத்துவப் பணிகளையும் வழங்குவதுடன் அத்தகைய நிபுணத்துவம் முதலீட்டுச் செயன்முறைகளுக்குக் கொண்டு வரப்படுகிறது. பங்குரிமை மூலதன நிறுவனங்கள் அதிகரித்த பெறுமதிகூட்டல்களுடன் வாங்குனரொருவருக்கு விற்பனை செய்யமுன் குறிப்பிட்டதொரு ஆண்டுகளில் கம்பனியொன்றினை மிகப் பெறுமதியுடையதாக்குவதற்காக முதலீடுகளை மேற்கொள்கிறது. முதலீடுகளைப் பெற்ற வெற்றிகரமான கம்பனி இறுதியில் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடலைப் பெறுகின்றது. மேலும், முதலீட்டைப் பெற்ற கம்பனிகள் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் மிகுந்த போட்டித்தன்மையுடையனவாக மாறுவதுடன் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் பங்களிக்கின்றது. அத்தகைய நிதியிடல்களின் மூலம் பெறப்படக்கூடிய பொருளாதார நன்மைகள் உள்ளூர் கம்பனிகளுக்கான நிதியிடல் மூலங்களின் பன்முகப்படுத்தல், திரட்டப்பட்ட நிதிகளினூடாக பாரியளவு நிதியிடலை வசதிப்படுத்தல் மற்றும் வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து நிதிகளைக் கவர்வதன் மூலம் பொருளாதாரத்திற்கு வெளிநாட்டு மூலதனத்தின் பாய்ச்சலை அதிகரித்தல் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

**குறைந்த வட்டிச் சூழலொன்றில், தொழிலாளர்கள் அவர்களின் ஓய்வுகாலத்தின் போது நியாயமான வாழ்க்கைத் தரத்தினை அனுபவிப்பதனை இயலச் செய்யும் விதத்தில்**

**புதிய சேமிப்புக்களையும் ஓய்வூதியச் சாதனங்களையும் தோற்றுவிப்பது அவசியமானதாகும்.** படிப்படியாக வயது முதிர்ந்துவரும் குடித்தொகையின் காரணமாக இலங்கையின் குடித்தொகையியலில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மற்றும் அதிகரிக்கின்ற வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலம் என்பன, ஓய்வு வயதினை அடைகின்ற குடித்தொகையின் அதிகரிக்கின்ற பங்கினரின் தேவைப்பாடுகளை வசதியளிக்கின்ற விதத்தில் சேமிப்பு மற்றும் ஓய்வூதிய சாதனங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் தேவையினை வலியுறுத்துகின்றது. இச்சாதனங்களை விருத்தி செய்ய வேண்டியதன் அவசியம், சந்தையில் நிலவுகின்ற குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் ஓய்வுபெற்ற அநேகர் வட்டி வருமானத்தில் தங்கியிருக்கின்றமை என்பனவற்றின் மூலம் மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. ஒரு சில நிதியியல் நிறுவனங்கள் சில சாதனங்களை ஏற்கனவே அறிமுகப்படுத்தியுள்ள வேளையில் நீண்ட கால சேமிப்பாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் ஆண்டுத்தொகை, ஓய்வு நிதியத் திட்டங்கள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் போன்ற மாற்று சேமிப்பு மற்றும் ஓய்வூதிய திட்டங்களை மேலும் அபிவிருத்தி செய்யும் தேவை காணப்படுகின்றது. இச்சாதனங்களை அறிமுகப்படுத்துகின்ற வேளையில் ஓய்வுபெற்றவர்களுக்கு பாதுகாப்பினை வழங்குவதும் நிதியியல் துறையின் அபிவிருத்திக்கு வசதியளிக்கும் என்பதுடன் நீண்ட பயன்தரும் காலத்துடன் கூடிய செயற்றிட்டங்களுக்கான நீண்ட கால மூலமாகவும் இருக்கும்.

**உலகளாவிய பொருளாதாரம் தொடர்ந்தும் மீட்சியடைந்து வருவதனால், தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகளைப் படிப்படியாகத் தளர்த்தும் நடவடிக்கைகள் காணப்படுவது தோற்றம்பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களிலுள்ள பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தில் சவால்களைத் தோற்றுவிக்கும்.** முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் எதிர்பார்க்கப்படும் சாதகமான அபிவிருத்திகளுடன் உலக வர்த்தகம் அதிகரிக்கத் தொடங்கும் என்ற எதிர்பார்ப்பு மற்றும் இப்பிராந்தியத்தில் காணப்படும் பாரிய வர்த்தகம் என்பனவற்றின் மூலம் இலங்கை போன்ற நாடுகள் நன்மையடைகின்றன. எனினும், முக்கிய பொருளாதாரங்களினால் பின்பற்றப்பட்ட நாணய மற்றும் இறைக் கொள்கை வழிமுறைகள் மற்றும் குறிப்பாக, ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் இனால் மேற்கொள்ளப்பட்ட கணிசம்சார் தளர்த்தல் வழிமுறைகள் தொடர்பான காலம் மற்றும் அளவு என்பன உலகப் பொருளாதாரத்தின் மீட்சிக்கான இடர்நேர்வுகளை அதிகரிக்குமெனவும் நிதியியல் சந்தைகளில் பெருமளவு நிச்சயமற்ற தன்மைகளை உருவாக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இப்பின்னணியில், தொடர்கின்ற வழிமுறைகளினால் தற்பொழுது ஆரம்பமாகியுள்ள உலகளாவிய பொருளாதாரத்தின் மீட்சி முடங்கிப் போகாமல் இருப்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் மத்திய வங்களிடையே பெருமளவு ஒத்துழைப்புக்கள் காணப்படுவது பெருமளவிற்கு அவசியமானதாகவுள்ளது. தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள், இறுக்கமான வெளிநாட்டு நிதியிடல் கொள்கைகள் மற்றும் மூலதனப்பாய்ச்சல்களில் ஏற்படக்கூடிய நேர்மாற்றங்கள் அதேபோன்று வெளிநாட்டு அதிர்வுகளுக்கு தமது பொருளாதாரம் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மையினை அதிகரிப்பதற்குத் தேவையான தாங்கிருப்புக்களையும் கொள்கை வசதிகளையும் கட்டியெழுப்புவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நீண்ட காலக் கடன் வழங்கல் வீதங்கள் மற்றும் இடர்நேர்வு மிகை மதிப்பு என்பனவற்றில் எதிர்பார்க்கப்படும் உயர்வு என்பனவற்றிலிருந்து தோன்றக்கூடிய இடர்நேர்வுகளைக் கவனமாக முகாமைப்படுத்த வேண்டியது அவசியமாகும். ஒதுக்குகளில் ஆரோக்கியமான மட்டங்களைப் பேணியமை, செலாவணி வீதங்களில் நெகிழ்ச்சித்தன்மை, அதேபோன்று அரச பிணயங்களில் வெளிநாட்டு முதலீடுகளின் மீது வரையறை விதிக்கப்பட்டமை என்பன மூலமாக மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட கொள்கைகள் பொருளாதாரத்தின் மீதான ஒடுங்கிச் செல்லும் தன்மையின் தாக்கத்தினைக் குறைக்கவும் வெளிநாட்டு அதிர்வுகளுக்கு நாடு தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பலப்படுத்தவும் உதவியது. முன்னோக்கிச் செல்கையில், எதிர்பாராத நிகழ்வுகளுக்கான தாங்கிருப்புக்களை வலுப்படுத்தவும் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் மத்திய வங்கியினதும் அரசாங்கத்தினதும் முன்கூட்டியே ஆயத்தமாகும் கொள்கை வழிமுறைகள், உலகளாவிய அபிவிருத்திகளிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளைக் குறைக்க உதவும்.